# சட்டச் சொல் அகராதி

# LAW LEXICON

1979 ஆம் ஆண்டு வெளியீடு

©
தமிழ்நாடு அரசாங்கம்
1979

தமிழ்நாடு சட்டத்துறை
ஆட்சிமொழி ஆணையம்
சென்னை

# சட்டச்சொல் அகராதி
# (LAW LEXICON)

1979 ஆம் ஆண்டு வெளியீடு

©
தமிழ்நாடு அரசாங்கம்
1979

தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையம்
சென்னை

# தமிழ்நாடு அரசாங்கம்

## தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையம்

**தலைவர் :**

**திரு. எஸ். மகராஜன்,** பி.எஸ்ஸி., பி.எல்.,
முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

| | |
|---|---|
| **திரு. ஏ. சிதம்பரம்,** பி.ஏ., பி.எல்., முன்னாள் தலைமை செஷன்ஸ் நீதிபதி, சென்னை. .. | முழு நேர உறுப்பினர் (செயல் உறுப்பினர்—பொறுப்பு). |
| **திரு. கீ. இராமலிங்கம்,** எம்.ஏ. .. .. | பகுதி நேர உறுப்பினர். |
| **திரு. ச. இராஜு செட்டியார்,** பி.ஏ., பி.எல். | பகுதி நேர உறுப்பினர். |
| **திரு. ச. சு. இராமசுவாமி,** பி.எஸ்ஸி., பி.எல். | பகுதி நேர உறுப்பினர். |
| **திரு. கா. பாலசுப்பிரமணியம்,** பி.ஏ., பி.எல். முன்னாள் செயலாளர், சட்டத்துறை, தமிழ்நாடு அரசாங்கம். | பகுதி நேர உறுப்பினர். |
| **திரு. கோ. முத்துப் பிள்ளை,** பி.ஏ., முன்னாள் அரசு இணைச் செயலாளர். .. | பகுதி நேர உறுப்பினர். |
| **திரு. எஸ். வடிவேலு,** பி.ஏ., பி.எல்., செயலாளர், சட்டத்துறை, தமிழ்நாடு அரசாங்கம். .. | பதவி வழி உறுப்பினர். |
| **திரு. கொண்டல் சு. மகாதேவன்,** பி.எஸ்ஸி., எம்.ஏ., இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ்நாடு அரசாங்கம். | பதவி வழி உறுப்பினர். |
| **திரு. டாக்டர் ஔவை து. நடராஜன்,** எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி., இயக்குநர், மொழிபெயர்ப்புத் துறை, தமிழ்நாடு அரசாங்கம். .. | பதவி வழி உறுப்பினர். |
| **திரு. கு. ராஜாராம்,,** பி.எஸ்ஸி., பி.எல். .. | துணைச் செயலாளர். |
| **திரு. க. மோகனசந்திரன்,** பி.எஸ்ஸி., பி.எல்; டி.எல் & ஏ.எல். .. | உதவிச் செயலாளர். |

# முன்னுரை

**1976** நவம்பர் 14ஆம் நாளிலிருந்து தமிழகத்தில் உயர்நீதி மன்றத்திற்குக் கீழமைந்துள்ள எல்லாக் குற்ற வழக்கு நீதிமன்றங் களிலும் தமிழே தீர்ப்பு மொழியாகச் சட்டப்படி ஏற்றுக்கொள் ளப்பட்டிருக்கிறது. அவ்வாறு தமிழ் தீர்ப்பு மொழியாவதற்கு ஏறக்குறைய நான்கு மாதங்களுக்கு முன் தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையம் குற்ற வழக்கு நீதிமன்றங்களுக்கு இன்றி யமையாத மூன்று சட்டத் தொகுப்புகளையாவது மொழிபெயர்த் துத் தர வேண்டுமென்று தமிழ்நாடு அரசாங்கம் கோரியது. அரசாங்கத்தின் கோரிக்கைக்கிணங்கி, ஆணையமும் குற்ற விசா ரணை முறைச்சட்டம் (Criminal Procedure Code), இந்தியத் தண்ட னைச் சட்டம் (Indian Penal Code), இந்தியச் சாட்சியச் சட்டம் (Indian Evidence Act) ஆகியவற்றை மூன்றரை மாதங்களில் மொழி பெயர்த்து முடித்து, மொழிபெயர்ப்புகளைத் தமிழ்நாடு அரசாங் கத்தின் அச்சகத்தில் அச்சிட்டு 1976ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம்தேதியில் புத்தக வடிவில் வெளிக்கொணர்ந்தது. இவ்வளவு விரைவில் மொழி பெயர்க்கவேண்டிய நிலையில் அதிகத் தவறுகள் ஏற்படாமல் தடுப்பதற்கு ஆணைய உறுப்பினர்களும் அலுவலர் களும் எடுத்துக் கொண்ட முயற்சி கொஞ்சநஞ்சமல்ல.

மேற்சொன்ன மூன்று சட்டங்களை மொழிபெயர்க்கும்போது ஆணையத்துக்குத் துணையாகவும் வழிகாட்டியாகவும் இருந்த சில கருத்துக்களையும் கொள்கைகளையும் இம் முன்னுரையில் குறிப் பிடுவது பயனுள்ளதாக இருக்குமெனக் கருதுகிறேன்.

மொழியியல் இலக்கணத்தாலும் மரபாலும் பண்பாட்டினாலும் முற்றிலும் வேறுபட்டவை ஆங்கிலமும் தமிழும். ஆங்கில மொழியிலுள்ள நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது மூலத்துக்கு உண்மையோடு இருக்க வேண்டும் என்ற கடமையோடு தமிழ் மரபைப் பாதுகாக்க வேண்டும் என்ற கடமையையும் மொழிபெயர்ப்பாளர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இக்கடமைகளைச் சரிவர ஆற்றமுடியாத காரணத்தால், "மொழி பெயர்ப்பாளர் தமிழ்" என்ற ஒரு புது வகையான தமிழ் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. தமிழ் வாக்கிய அமைப்புகளுக்கு முரண்பட்டவை ஆங்கில வாக்கிய அமைப்புகள். ஆங்கில வாக்கிய அமைப்புகளின் ஆதிக்கத்திலிருந்து மீள முடியாமல் சில மொழிபெயர்ப்பாளர்கள், தமிழையே ஆங்கிலத்தைப் போல, பூட்ஸ் கால் கொண்டு நடக்கச் செய்வதோடு, தமிழை, தமிழ் முறை பிறழ்ந்து பேசச் செய்யவும் செய்கிறார்கள். இவ்வாறு விளைகிற மொழிபெயர்ப்பாளர்களுடைய தமிழை, தமிழ் மாத்திரமே கற்றவர்களால் புரிந்துகொள்ள முடியாது; ஆங்கிலம் கற்ற தமிழர்களும், இந்த மொழிபெயர்ப்புத் தமிழை நேரடியாகப் புரிந்து கொள்ள முடியாமல், அதை ஆங்கிலத்தில் மறு மொழி பெயர்ப்புச் செய்து, அதன் பொருள் என்னவாக இருக்கலாம் என்று ஊகம் செய்து கொள்கிறார்கள். ஆனால், தமிழ் மாத்திரமே கற்றவர்களும் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் தமிழ் மரபு கெடாது தமிழாக்கம் செய்ய முயன்றிருக்கிறது இந்த ஆணையம்.

ஒவ்வொரு மொழியும் சொற்களாலும் சொற்றொடர்களாலும் வாக்கியங்களாலும் தனித்தன்மையைக்கொண்டிருப்பதோடு கருத்துக்களாலும் கருத்துக்களைச் சொல்லும் முறைகளாலும் உத்திகளாலும் மற்ற மொழிகளினின்றும் வேறுபட்டும் தனித்தும் நிற்கிறது. ஆங்கில மொழியிலுள்ள ஒரு வாசகத்தை எடுத்துக் கொண்டால், அது ஆங்கிலேயருக்கே உரிய சில தனிப்பட்ட கருத்துக்களைச் சொல் அடையாளங்கள் மூலம் ஆங்கில இலக்கண விதிகளுக்குட்பட்டுத் தெரிவிப்பதைக் காண்கிறோம். அந்த ஆங்கில வாசகத்தைத் தமிழ்ப்படுத்தும்போது மூலத்திலுள்ள கருத்தை ஆங்கிலத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட தமிழ்ச் சொல் அடையாளங்களைக் கொண்டும், ஒலிகளைக் கொண்டும் வெளியிடுகிறோம். ஆனால், தமிழிலுள்ள சொற்களினின்றும் சொற்றொடர்களினின்றும் ஆங்கிலத்தில் உள்ள சொற்களும் சொற்றொடர்களும் ஒலியினாலும் ஆட்சியினாலும் வேறுபட்டவை.

ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனிக் கற்பு இருக்கிறது. மொழி பெயர்க்கும்போது அந்தக் கற்புக் குலையாமல் மொழிபெயர்ப்புச் செய்யவேண்டும். மூலமொழிக் (Source Language) குரிய கற்பையும் இயல்பையும் இலக்கு மொழிக்கு (Target Language) ஏற்றுவதும் தவறு. ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனிக் கற்பு இருப்பது போலவே, ஒவ்வொரு சொல்லுக்கும் ஒரு மரபு இருக்கிறது, ஒரு பிதிரார்ஜிதம் இருக்கிறது ; ஆகவேதான் அகராதியில் சொல்லப் பட்ட பொருளைக் காட்டிலும் அதிகமான பொருளும் மணமும் சுவையும் அதற்கு இருக்கின்றன. ஆங்கில மூலத்திலுள்ள சொற்கள் பலவற்றிற்குத் தமிழில் சம அர்த்தம் உள்ள பல சொற்கள் இருக்கின்றன. ஏறத்தாழ ஒரே பொருளைக் குறிக்கக் கூடிய பல தமிழ்ச் சொற்களை 'ஒரு பொருள் பன்மொழி' என்று இலக்கண ஆசிரியர்கள் கூறுவார்கள். ஆனால், உண்மையில் அச் சொற்கள் ஒரே பொருளைக் குறிப்பிடுவன அல்ல. ஒலி வேறுபாட் டினாலேயே வெவ்வேறு உணர்ச்சியை மனித உள்ளத்தில் கிளறி விடக் கூடியவை அவை. தமிழ்த் தாய், தன் குழந்தையைப் பார்த்து ''என் கண்ணே'' என்று கொஞ்சுகிறாள். இவ்வாறு பல நூற்றாண்டுகளாகக் கொஞ்சிக் கொஞ்சி, குலாவிக் குலாவி, ''கண்'' என்ற சொல்லுக்குள்ளே எவ்வளவோ அருமைப்பாடு ஏறி விட்டது. நீண்ட காலப் புழக்கத்தினால் ஏற்பட்டது இந்த அரு மைப்பாடு. "Oh, my eye!" என்று ஆங்கிலத் தாய் தன் குழந்தை யைப் பார்த்துக் கொஞ்சுவது இல்லை. ''கண்ணே'' என்ற சொல்லை, "Oh, my eye!" என்று மொழிபெயர்க்கும்போது, ''கண்ணே'' என்ற சொல்லுக்குள்ளே இருக்கிற அருமைப்பாடு வெளிவருவதும் இல்லை. இப்படியாக ஒவ்வொரு சொல்லுக்குள் ளும், அகராதியில் சொல்லப்பட்ட பொருளுக்கும் மீறிய மணமும் நிறமும் இருக்கின்றன. ஒரே பொருள் உள்ளவை போலக் காணப் படும் சொற்களுக்கிடையே கூட, மென்மையான, நுண்ணிய பொருள் வேறுபாடுகள் இழையோடிக் கொண்டிருப்பதை உற்றறியலாம். ஆகவே, மூலவாக்கியத்தில் இருக்கின்ற ஒவ் வொரு சொல்லின் பொருளையும் ஒன்று சேர்த்துக் கூட்டி, அந்தக் கூட்டல் மூலம் கிடைத்த மொத்தப் பொருளையே மூலத்தின் பொருள் என்று கொள்ளுதல் கூடாது.

சொற்கள் அணிவகுத்து நிற்கும் நிலையையும் பொறுத்திருக் கிறது அவற்றின் பொருள். எனவே, மொழிபெயர்ப்பாளர் மூல வாசகத்தின் பொருளை அறிவதில் எவ்வளவுநேரம் செலவழித்தா

லும் தகும். சில சட்ட வாசகங்கள் இரு விதமாகப் பொருள் கொள்ளும் வகையில் அமைந்திருக்கின்றன. மொழிபெயர்ப்பாளர் அவ்வாசகங்களை ஈரடியாகப் பொருள் கொள்ளும் வகையில் மொழிபெயர்க்க வேண்டும். மூலத்தின் ஐயப்பாடுகளைத் தீர்ப்பது நீதிமன்றங்களின் வேலை, மொழிபெயர்ப்பாளரின் வேலை அன்று. ஆகவே, மூலம் தெளிவற்றதாக இருந்தால், அதன் தெளி வற்ற தன்மையையும் மொழிபெயர்ப்பில் வடித்துக் கொடுக்க வேண்டியது மொழிபெயர்ப்பாளரின் கடமையாகும்.

உள்ளத்தில் உள்ள கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு ஏற்பட்ட கருவிகளே சொற்கள். ஆனால், ஒரு மொழி பேசும் சமுதாயத்தைச் ''சுரீர்'' என்று தாக்கிக் கிளர்ச்சியை உண்டாக்கும் ஒரு சொல்லானது, இன்னொரு மொழி பேசும் சமுதாயத்தைக் கிஞ்சித்தும் பாதிக்கா மல் இருக்கவும் கூடும். ஒரு மொழியில் உள்ள சொற்கள் அம் மொழியைப் பேசுகிறவர்களுடைய உள்ளத்திலே சில விளைவு களை உண்டாக்குகின்றன. அதே விளைவுகளை, இன்னொரு மொழியின் சொற்கள் மூலம் அந்த மொழி பேசுகிறவர்கள் உள் ளத்திலும் உண்டாக்க முடியுமானால் அதையே மொழிபெயர்ப் பின் வெற்றி என்று சொல்லுகிறோம். இந்த வெற்றியைப் பெறு வதற்கு மொழிபெயர்ப்பாளர் மூன்று விதமான திறமைகளைப் பெற்றிருக்க வேண்டும். முதலாவதாக, மூலமொழியில் நல்ல பயிற்சி பெற்றிருக்க வேண்டும். இரண்டாவதாக, மொழிபெயர்க் கப்படுவது சட்டமாக இருந்தால், சட்டப் பயிற்சியிலோ சட்ட நிர்வாகத்திலோ நீண்ட நெடுநாள் அனுபவம் பெற்றிருக்க வேண் டும்; சொற்களை, உயிரற்ற சொற்களாகப் பார்க்காமல், அவற் றுக்குப்பின் ஆழ்ந்து பரந்து விரிந்து நிற்கும் மனித வாழ்க்கையின் உயிருள்ள பிரதிபலிப்பாகப் பார்த்து, அவற்றுக்குப் பொருள் கொள்ளத் தெரிந்துகொள்ள வேண்டும். மூன்றாவதாக, மூல மொழியிலுள்ள கருத்துக்களை அப்படி அப்படியே துல்லியமாக வும், புதுக் கருத்துக்களை இம்மியும் சேர்க்காமல் மூலக் கருத்தின் மாற்று, கொஞ்சமும் குறையாமலும் இலக்கு மொழியில் (Target Language) அதாவது, தமிழில் இறக்கத் தெரிந்திருக்க வேண்டும். இலக்கு மொழியைத் தாய் மொழியாகவோ அல்லது சுவீகார மொழியாகவோ கொண்டவர்கள்தாம் இந்த மூன்றாவது திறமை யைப் பெற்றிருக்க முடியும்.

ஒரு சொல்லை இரு முறை சொல்லி விட்டால், அதன் பொருளுக்கு அழுத்தம் ஏற்பட்டுவிடும் என்று நாம் நினைக்கிறோம். ஆனால், இது எல்லா மொழிகளுக்கும் பொதுவான நியதி அன்று. உதாரணமாக, ஹிலிகைநூ என்ற ஃபிலிப்பைன் மொழியில், ஒரு சொல்லை இருமுறை சொன்னால், உறுதிப்பாட்டிற்குப் பதில் ஐயப்பாடு ஏற்பட்டுவிடும்; ''ஆம், ஆம்'' என்று இருமுறை சொன்னால் ஹிலிகைநூ-வில் 'ஒருகால்' என்று பொருள்படும்.. வேறு சில மொழிகளில் மனித அனுபவத்தை எடுத்துச் சொல்லும் முறையிலும், அதைப் பாகுபடுத்தும் பாங்கிலும், அடிப்படை வேறுபாடுகளைக் காண்கிறோம். உதாரணமாக, பொலீவியாவில் உள்ள 'க்வெச்சுவா' (Quechua) என்ற மொழியில் எதிர்காலத்தைப் பற்றிப் பேசும்போது, அது நமக்குப் 'பின்பக்கத்தில் இருப்பதாகவும்', இறந்த காலத்தைப் பற்றிப் பேசும்போது அது நமக்கு 'முன் பக்கத்தில் இருப்பதாகவும்' சொல்லப்படுகிறது. இதற்குக் காரணம் கேட்டபோது ஒரு க்வெச்சுவா சொன்னதாவது:—''இறந்த காலத்தில் நடந்துபோன நிகழ்ச்சிகளை மனக்கண்முன்னால் நாம் பார்க்கமுடிகிறது. ஆகவே, நமக்கு 'முன் பக்கத்தில்' இருக்கின்றன அவை. ஆனால், எதிர்கால நிகழ்ச்சிகளை நாம் மனக்கண்ணால் பார்க்கமுடிவதில்லை. ஆகவே, அவை நமக்குப் பின்பக்கத்தில் தான் இருக்க வேண்டும்.'' இப்படியாகச் சிந்திக்கும் விதத்திலும், வாழ்க்கையை நோக்கும்பாங்கிலும், அனுபவங்களையும் கருத்துக்களையும் எடுத்துச் சொல்லும்முறையிலும், பொதுவாகமொழிக்கு மொழி வேறுபாடு இருக்கிறது, சிறப்பாக, தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் வேறுபாடு இருக்கிறது.

திருவடியைத் தாமரையாகவும், இடையைத் துடியாகவும், கழுத்தைக் கமுகாகவும், முகத்தைச் சந்திரனாகவும், கூந்தலை மேகமாகவும்உருவகம் செய்வது தமிழ் மரபு, இந்திய மரபு. இந்த உருவகங்கள் எல்லாம் மேனாட்டு ஆங்கில மரபுக்கு ஒவ்வாதவை. இதைப் போலவே, அணுகு முறையிலும் பல முரண்பாடுகள் இருக்கின்றன. வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் என்று தமிழர்கள் சொல்வார்கள்; மரத்தை வைத்துத்தான் பழத்திற்குப் பெயர் இடுவார்கள். ஆனால், ஆங்கிலேயர்களோ Plantain tree, Jack-fruit tree, Mango tree என்று பழத்தை வைத்து மரத்திற்குப் பெயர் இடுவார்கள். இவ்வாறு வாழ்க்கையை அணுகும் முறையிலே தமிழர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் எவ்வளவோ வேறுபாடுகள் இருக்

கின்றன. அவ்வளவு வேறுபாடுகளும், தமிழிலும் ஆங்கில மொழியிலும் நிழலாடுவதைப் பார்க்கிறோம். இந்த வேறுபாடுகளையெல்லாம்கருத்தில்இருத்தி வைத்துக் கொண்டுஎச்சரிக்கையோடு மொழி பெயர்ப்பாளர்கள் தமிழாக்கம் செய்ய வேண்டும். உரிய பொருத்தங்களையெல்லாம் நுணுகி ஆய்ந்து, அதன் பின்னரே சொல்லுக்கும் பொருளுக்கும் திருமணம் செய்து வைக்க வேண்டும்.

மூலமொழியிலுள்ள வாசகத்தை ஐயந்திரிபறப் புரிந்து கொண்டபின், அந்த வாசகத்திலுள்ள கருத்தை மறுபடியும் தமிழில் படைக்க வேண்டும். மூலக் கருத்துக்களை ஆங்கிலத்தில் சொல்வதற்குப் பதில் மூல ஆசிரியர் தமிழிலேயே சொல்லியிருந்தால் தமிழ் வாசகம்எவ்வளவுஇயல்பாகவும் ஆற்றொழுக்கோடும் இயங்குமோ அவ்வளவுஇயல்பாகவும் ஆற்றொழுக்கோடும் மொழி பெயர்ப்பு இயங்க வேண்டும். மூல வாசகத்தின் பாங்கு எப்படி இருந்தபோதிலும், மொழி பெயர்ப்பாளர் அவ்வாசகத்தின் சொல்லுக்கு அடிமையாகிவிடக்கூடாது. ஆனால், அதன்பொருளைக் கொஞ்சமும் சிதைக்காமல்தமிழில் கொண்டுவரவேண்டும். அவ்வாறு செய்வதில் வெற்றி காண வேண்டுமென்றால், ஆங்கில வாசகத்திலுள்ள எல்லாச் சொற்களையும் ஒதுக்கிவைத்துவிட்டு, அந்த வாசகத்தால்உண்டான கருத்தோவியத்தை மொழிபெயர்ப்பாளர் தெளிவோடு பார்க்கவேண்டும்; இந்தக் கருத்தோவியத்தைத் தெளிவாகப் பார்த்த பிறகு, தாம் பார்த்ததை, ஒரு சிறு விவரத்தையும் விடாமல் எளிய தமிழில் எடுத்துச் சொல்ல வேண்டும். மூலக் கருத்தை அல்லது ஓவியத்தை, தமிழ்ச்சொல் மூலம் சொல்ல வேண்டுமேயொழிய ஆங்கில மூலத்திலுள்ள சொற்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான தமிழ்ப் பதத்தைச் சொல்லித் தீர்க்க வேண்டும் என்று நினைப்பது தவறு. ஆங்கில வாக்கியத்திலுள்ள ஒவ்வொருபெயர்ச்சொல்லையும்தமிழிலுள்ள ஒரு பெயர்ச்சொல் மூலமாகவும், உரிச்சொல்லை உரிச்சொல் மூலமாகவும், வினைச்சொல்லை வினைச்சொல் மூலமாகவுமே மொழி பெயர்க்க வேண்டும் என்று நினைத்தால், ஆங்கில வாக்கியத்தைத் தமிழனுக்கு விளங்கக்கூடிய இயல்பான தமிழில் மொழி பெயர்க்க முடியாது. ஆங்கிலத்திலுள்ள பெயர்ச் சொல்லை, தமிழிலுள்ள ஒரு வினைச் சொல்லைக் கொண்டு மொழி பெயர்த்தால் மொழி பெயர்ப்பு ஒன்றும் கெட்டுவிடாது, இயல்பாகவே இருக்கும்.

Forster என்பவர் சொல்வது போல், மொழிபெயர்ப்பாளர்கள் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு மொழிபெயர்ப்புத் தந்திரத்தை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும். மூலத்திலுள்ள ஒரு சொல்லையோ அல்லது சொற்றொடரையோ அடிப்படையாகக் கொண்டு தமிழாக்கம் செய்வதைக் காட்டிலும், மூலத்திலுள்ள ஒரு வாக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழாக்கம் செய்வது நல்லபயன் தரும். பல வாக்கியங்களைக் கொண்ட ஒரு வாசகத்தை அடிப்படையாகக்கொண்டு மொழி பெயர்ப்புச் செய்தால் சில கருத்துக்கள் விடுபட்டுப் போகலாம். மூலத்திலுள்ள கருத்தில் ஓர் அம்சத்தையும்கூட விட்டுவிடக் கூடாது, மாற்றவும் கூடாது. ஆனால், ஒன்று நிச்சயம். ஆங்கில வாக்கியத்தின் அமைப்பை மாற்றாமல் தமிழாக்கம் செய்தால், அது அலங்கோலமாகவே முடியும். மூல வாக்கியத்தை இளக்கி, ஒன்று சேர்த்து, அதன் பின்னர் அதன் வேறுபட்ட உறுப்புக்களைத் தமிழ் மரபுக் கேற்றபடி மாற்றியமைத்தால்தான் மொழிபெயர்ப்பு இயல்பாக இருக்கும். ''கேக்'' செய்வதற்கென்று ஒரு வகைக் கருவி இருக்கிறது. அந்தக் கருவியின் பல்வேறு உறுப்புக்களையும் அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்து, பிரித்த உறுப்புக்களை வேறு முறையில் பூட்டி, இட்லி தயார் செய்வதற்குரிய கருவியாக மாற்றும்போது என்னென்ன இடையூறுகள் ஏற்படுமோ, அவ்வளவு இடையூறுகளும் ஆங்கில வாக்கியங்களைத் தமிழாக்கம் செய்யும்போதும் ஏற்படுகின்றன.

'' Traduttori '' என்றால் இத்தாலிய மொழியில் '' மொழிபெயர்ப்பவர் '' என்று பொருள். இந்தச் சொல்லில் இரண்டே எழுத்துக்களை மாற்றி '' Traditori '' என்று இத்தாலிய மொழியில் சொன்னால் '' துரோகி '' என்று பொருள். ஆகவே, இத்தாலிய மொழியில், மொழிபெயர்ப்புக்கும் துரோகத்துக்கும் இடையில் இரண்டே எழுத்துக்களுக்குள்ள வேறுபாடுதான். ஹிரோஷிமாவின் துர்ப்பாக்கியம், ஒரு மொழி பெயர்ப்புப் பிழையால் ஏற்பட்டது என்று நம்ப இடமிருக்கிறது. போட்ஸ் டாம் மாநாட்டிற்குப்பின், அமெரிக்க அரசாங்கம் ஜப்பான் அரசாங்கத்தைச் சரணடையுமாறு கேட்டு, ஓர் இறுதி எச்சரிக்கையை அனுப்பியது. அதற்கு ஜப்பானிய அரசாங்கம் எழுதிய பதிலில், ஒரு முக்கியமான ஜப்பானியச் சொல் பயன் படுத்தப்பட்டிருந்தது. '' மோகு ஸட்ஸு '' என்ற சொல் அது. '' உங்கள் இறுதி எச்சரிக்கையைப் பரிசீலனை செய்து

வருகிறோம். பதில் சொல்வதற்குத் தாமதமாகும்'' என்ற பொருளிலே ''மோகு ஸட்ஸு'' என்ற சொல் பயன்படுத்தப் பட்டிருந்தது. ஆனால், வாஷிங்டனில் கிடைத்த தகவலில், ''உங்கள் இறுதி எச்சரிக்கையை நிராகரிக்கிறோம்'' என்று அந்தச் சொல் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. மொழிபெயர்ப் பாளர் செய்த இந்தப் பிழையானது, அமெரிக்க அரசாங்கம் அணுகுண்டைப் போடும் தீர்மானத்திற்குத் தூண்டுகோலாக அமைந்துவிட்டது. இலக்கியத்தை மொழி பெயர்க்கும்போது தவறு இழைத்தாலும்கூட அவ்வளவு நஷ்டம் ஏற்படாது. சட் டத்தை மொழிபெயர்க்கும்போது தவறு இழைத்தால் அதனால் ஈடு செய்ய முடியாத நஷ்டங்கள் ஏற்பட்டு விடும். ஃப்ரெஞ்சு மொழிபெயர்ப்பாளரும் புலவருமான ஏதியேன் தோலே (Etienne Dolet 1509–1546) என்பவர் பிளேட்டோவின் (Plato) நூல்களை மொழிபெயர்த்தார். அவருடைய மொழிபெயர்ப்பு சரியாக இல்லையென்றும், பிளேட்டோவின் கருத்துக்களுக்கு அவர் துரோகம் இழைத்துவிட்டார் என்றும் ஃப்ரெஞ்சு மக்கள் அவர்மீது குற்றஞ்சாட்டி, அவருடைய குரல் வளையைத் திருகி, அவரைக் கொன்றதோடு அவருடைய எழுத் துக்களையெல்லாம் தீக்கிரையாக்கினார்கள். இப்பேர்ப்பட்ட விபரீதத்திற்குக் காரணமாக இருப்பது மொழி பெயர்ப்பின் நுட் பங்களை அறியாமையே. ஒரு மொழியைக் கவனமின்றி இன் னொரு மொழியில் பெய்யும்போது, மூல மொழியின் ஆன்மா ஆவியாகப் பறந்து போய்விடுகிறது ; மிஞ்சுவது எல்லாம் மூல மொழியின் உயிரற்ற சடலம்தான். கவிதையை மொழிபெயர்க் கும்போது இந்தக் கஷ்டம் பன்மடங்கு அதிகமாகிறது. நில வொளியைப் பிசைந்து, பானை வனைய முடியாது, பகலவ னுடைய கதிர்களைப் பின்னிக் கூடை முடைய முடியாது. ஆனால் சட்டத்தைப் போன்ற அறிவியல் சம்பந்தமான உரைகளைப் பெருமுயற்சியால் பிழையில்லாமல் மொழி பெயர்க்கக்கூடும். இரு மொழிகளின் பண்பு எல்லாம் தெரிந்த புலவர்கள், சட்டத் தின் நுணுக்கம் எல்லாம் தெரிந்த நிபுணர்களோடு கூடிக் கலந் தாலோசித்துக் கூட்டுத் தவம் செய்தால் அது கைகூடும்.

மொழி பெயர்க்கும்போது சோம்பல் காரணமாகவோ அல்லது மொழிபெயர்ப்பது கடினம் என்பதாலோ மூலத்திலுள்ள தொல்லைதரும் சொல்லை அல்லது சொற்றொடரை விட்டு

விடத் தோன்றும். இப்படிச் செய்வது பொதுவாகவே தவறு தான், சிறப்பாக, சட்டத்தை மொழிபெயர்க்கும்போது, பெருந் தவறு.

சொல்லை மாத்திரம் எடுத்துக் கொண்டால், அதற்கு நான்கு குணங்கள் இருப்பதைப் பார்க்கலாம். அவையாவன: சொல்லின் பொருள், கண்ணுக்குத் தெரியும் அதன் வரிவடிவம், செவிக்குக் கேட்கும் அதன் ஒலி வடிவம், உணர்ச்சியைத் தூண்டும் அதன் ஆற்றல். பொருளுக்கு மாத்திரம் அதற்குக் கிட்டத் தட்ட நிகரான பதத்தை இலக்கு மொழியிலிருந்து பொறுக்கி எடுக்கலாம். ஆனால், அந்தப் பதத்தின் ஒலி, மூலப்பதத்தின் ஒலியினின்றும் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கக்கூடும், அந்த ஒலி தூண்டிவிடும் உணர்ச்சிகளும் வேறு விதமாகவே இருக்கக் கூடும். ஆகவே, மூல வாசகத்திலுள்ள சொல்வைப்பு முறை களையும், வாக்கிய அமைப்பு முறைகளையும் முற்றிலும் மாற்றி உரிய ஒலி வடிவத்தையும், வரி வடிவத்தையும் பொருளையும் பயன்படுத்தினாலன்றி, மொழிபெயர்ப்பு மூலக்கருத்தை உண் மையோடு பிரதிபலிக்காது. எந்த அளவுக்குச் சொற்களுக்கு முறுக்கேற்ற வேண்டும், அல்லது முறுக்கை எந்த அளவுக்குத் தளர்த்திவிட வேண்டும், கருத்துப் பாசனத்தை எங்கெங்கே தேக்கி வைக்க வேண்டும், எங்கே மடை திறந்து பாயச் செய்ய வேண்டும், ஒரு நெடிலை அல்லது ஒரு குறிலை எங்கு சொருகினால் வாக்கியத்தின் பொருள் மாறும் என்பதெல் லாம் தெரியும் கலை, கற்றுத் தெரியக்கூடிய கலையன்று, கல்லாத கலையாகும். மொழி பெயர்ப்பாளருக்கு உள்ளுணர்வு இருக்கு மானால், இந்தக் கல்லாத கலை கைவரும், வெறும் புலமையினால் கிட்டுவதன்று இது.

எந்த நல்ல மொழிபெயர்ப்பும் அது எழுதப்படுகிற காலத்தி லும், நாட்டிலும் பேசப்படுகிற மொழியில் இருக்க வேண்டுமென் பது மொழி பெயர்ப்பு நிபுணர்கள் எல்லோராலும் ஒப்புக்கொள் ளப்பட்ட உண்மை என்று எல். டபிள்யு. டான்காக் (L.W. Tancock) என்பவர் சொல்கிறார். பெரும்பாலும் இந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆணையம் சட்டங்களைத் தமிழாக்கம் செய்திருக்கிறது.

ஆங்கிலச்சொற்களுக்கு நேரான புதியதமிழ்ச் சொற்களை உண்டு பண்ணுவதற்கு முன், சாமானிய மக்களிடையே உரிய சொற்கள் ஆட்சியில் இருக்கின்றனவா என்பதைத் தீர விசாரித்து, அவ்வாறு ஆட்சியில் சொல்லொன்றும் இல்லையென்று தெரிந்த பிறகே, இந்த ஆணையம் சொல்லாக்கம் செய்வதில் ஈடுபடுகிறது. குருட்டுத் துணிச்சலோடு சொல்லாக்கத்தில் இந்த ஆணையம் இறங்கவில்லை என்பதற்குப் பல உதாரணங்கள் சொல்லலாம். "Cable of Wooden anchor" என்ற சொற்றொடரை மொழி பெயர்க்க வேண்டியிருந்தது. ஆங்கில—தமிழ் அகராதிகள், அந்தச் சொற்றொடருக்கு, "மர நங்கூரக் கயிறு" என்று பொருள் கொடுத் திருந்தன. இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட காலமாகக் கடலில் கப்பற் பயணம் செய்தும், முத்துக்குளித்தும், கடலோடு ஊடாடிக் கொண்டிருந்த தமிழன், இதற்குத் தனிப் பெயர் இடா மலா இருந்திருப்பான் என்ற ஐயம் ஏற்பட்டதன் பேரில், ஆணை யத்திலுள்ள மொழி பெயர்ப்பாளர் ஒருவரை, சென்னைக் கடற் கரையில் இருக்கும் மீனவர் குப்பத்திற்கு அனுப்பி, ஆராய்ச்சி செய்தோம். நங்கூரத்தைப் பிணைக்கும் கயிற்றைச் "சீனிக்கயிறு" என்று அவர்கள் செல்லப் பெயரிட்டு அழைக்கிறார்கள் என்று தெரிந்து, அந்தப்பெயரையே இவ்வாணையம் மொழிபெயர்ப்பில் பயன்படுத்தியுள்ளது. இதைப்போலவே, மதுவிலக்குச்சட்டத்தை மொழிபெயர்க்கும்போது, மதுவிலக்குத் துறை அதிகாரிகளின் உதவியாலும், வனச் சட்டத்தை மொழிபெயர்க்கும்போது வனத் துறை அலுவலர்களின் உதவியாலும் அந்தந்தத் துறையில், தமிழ்மக்களால் பயன்படுத்தப்படுகிற பரிபாஷையையும் பச்சைத் தமிழ்ச்சொற்களையும் தேடிக்கண்டுபிடித்து, அவற்றையேஆணை யம் மொழிபெயர்ப்பில் பயன்படுத்தியிருக்கிறது. 'Wash' என்ப தைச் சாமானியத் தமிழர்கள் "ஊறல்" "என்றும்" கலக்கல்" என் றும் கூறுகிறார்கள். தமிழ் மக்களுடைய நாவில் நடமாடிக் கொண் டிருக்கும் இத்தகைய சொற்களுக்குள்ள ஆற்றல், புதிதாக உண் டாக்கப்படும் சொற்களுக்குக் கிடையாது என்பதை உணர்ந்தே இவ்வாணையம் ஆட்சியில்இருக்கும் சொற்களைத் தேடிக் கண்டு பிடிப்பதில் மிகுந்த நேரத்தையும் கவனத்தையும் செலவழித்திருக் கிறது.

வேறு போக்கு இல்லை என்ற நிலையில்தான் இந்தஆணையம் சொல்லாக்கம் செய்யத் துணிந்திருக்கிறது. அவ்வாறு சொல்லாக்

கம் செய்யும்போதும், தமிழர்களின் காதுக்கும் உள்ளத்துக்கும் இணங்கும் வகையிலும், தமிழ் மரபை ஒட்டியுமே புதுச்சொற் களைஉண்டாக்கியிருக்கிறோம்.

''சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல் அச்சொல்லை
வெல்லும் சொல் இன்மையறிந்து.''

என்று சொல்லி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் இன்றியமையாத சொல்லையே பயன்படுத்தவேண்டும்என்றுஎச்ச ரிக்கை செய்து விட்டார். சீன ஞானி கன்பூஷியஸும் இன்றி யமையாத சொல்லையே ''ஷிங் மிங்''(Ching Ming) என்று அழைத் தார். ஃப்ரென்சு ஆசிரியர் ஃப்ளோபேரும் (Flaubert) அதை ''மோஷுஸ்த்'' (Mot Juste) என்று அழைத்தார். இன்றியமையாத சொல்லைத்தேர்ந்தெடுப்பதிலே மொழி பெயர்ப்பாளர் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

தமிழ்ச் சொற்கள் பல ஆள்வாரற்றுத் தூர்ந்து போயின. அவ் வாறு தூர்ந்து போன சொற்களைத் தூரெடுத்துப்புழக்கத்துக்குக் கொண்டு வந்து நமக்கு இருக்கும் சொற் பஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வது அவசியமாகத் தோன்றுகிறது. உதாரணமாக, பிங்கல நிகண்டில் ''பண்பிற் செயலின் பகுதி வகை'' என்ற பெருந்தலைப் பின் அடியில், ''சொல்லுதல்'' என்ற குறுந்தலைப்பில், 22 சொற் கள் கொண்ட ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பட்டியலை ஆராய்ந்து பார்க்கும்போது சொல்லும் முறையை 22 நுண்ணிய வகைகளாகப் பிரித்து, ஒவ்வொருவகைக்கும் ஒரு தனிச் சொல்லை உண்டு பண்ணி,ஒரு வகைக்கும் இன்னொரு வகைக்கும் இடையேயுள்ள மயிரிழை போன்ற வேறுபாட்டையும் சொல் வேறுபாட்டிலே காட்டி, கருத்து நொய்ம்மையையும், சொல் நொய்ம்மையையும் தமிழர்கள் வளர்த்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

''இயம்பல், விரித்தல், மொழிதல், விளம்பல்,
பகர்தல், பன்னல், நவிறல், கத்துதல்,
உரைத்தல், கூறல், வழங்கல், குயிலல்,
புகலல், பேசல், நொடிதல், பிறழ்தல்,
பறைதல், செப்பல், அதிர்த்தல், பணித்தல்,
சொற்றல், ஆடல், சொல்லுதல் என்ப''

என்பது பிங்கல நிகண்டிலுள்ள 2009 ஆம் சூத்திரம்.

பலநூற்றாண்டுகளாக அயல் மொழிகளே தமிழ்நாட்டு நீதிமன்றங்களின் தீர்ப்பு மொழிகளாக இருந்துவிட்டபடியாலும், நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நுணுக்கமான சட்டச் சொற்களைச் சொல்வதற்கு நாம் தமிழைப் பயன்படுத்தாமலே போய்விட்டபடியாலும், மேற்சொன்ன சூத்திரத்தில் கண்டவைபோன்ற ஆயிரக்கணக்கான நொய்தின்நொய்ய தமிழ்ச் சொற்கள், துருப்பிடித்துப் போய், பொருள் கெட்டும், இழிந்தும், பயனற்றுப் போய்விட்டன. ஆகவே சொல்வளத்திற்கிடையே சொற் பஞ்சத்தால் அல்லாடுகிறோம் நாம். புதுச் சொற்களை இரவல் வாங்குவதற்கு முன், அல்லது புதுச்சொற்களை உண்டாக்குவதற்கு முன் நமது கஜானாவில் பயன்படுத்தப்படாமல் வெறிதே கிடக்கும் பொருள் பொதிந்த சொற்களைப் பயன்படுத்த முயன்றிருக்கிறது இந்த ஆணையம். உதாரணமாக, "Assertion" என்பதை "அறைதல்" என்றும், "Declaration" என்பதை "விளம்பல்" என்றும், "Pronouncement of Judgment" என்பதைத் "தீர்ப்புப் பகர்தல்" என்றும் மொழிபெயர்த்து, துருவேறிப் போன தமிழ்ச் சொற்களைத் துலக்கி, விளக்கமுறச் செய்திருக்கிறது இந்த ஆணையம். மேற்சொன்ன பொருள்களிலே நீதிபதிகளும் வழக்குரைஞர்களும் மேற்சொன்ன சொற்களைப் பயன்படுத்துவார்களேயானால், இடைக்காலத்திலே திமிறி அலைந்த சொற்களை அடக்கி, மூக்கணாங்கயிறு போட்டு, நடை பழக்கி, சொகுசாகக் கருத்துச் சவாரி செய்ய, அவற்றைப் பயன்படுத்திய பெருமை அவர்களுக்குக் கிடைக்கும்.

"Dispose" என்ற சொல்லை எடுத்துக் கொண்டால் இதன் பொருள் இடத்துக்குத் தக்கவாறு மாறுபடுகிறது. "The Sessions Judge may make provision for the disposal of the case" என்ற வாக்கியத்தை "செஷன்ஸ் நீதிபதி வழக்கைத் தீர்த்து வைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்யலாம்" என்று மொழிபெயர்க்க வேண்டியிருக்கிறது. "Concealment of birth by secret disposal of the dead body" என்ற வாக்கியத்தை "செத்த உடலை ரகசியமாக அப்புறப்படுத்தி'ப் பிள்ளைப் பேற்றை மறைத்தல்" என்றும், "Proper disposal of cases" என்ற சொற்றொடரை "உரியமுறையில் வழக்குகளைத் தீர்மானித்தல் என்றும், "The appellate court may direct the order to be stayed pending disposal of the appeal" என்ற வாக்கியத்தை "மேல்முறையீடு 'முடிவு செய்யப்படும்'வரைஅக்கட்டளை நிறுத்திவைக்கப்படவேண்டுமென்று மேல்முறையீட்டு நீதிமன்றம்

உத்தரவிடலாம்'' என்றும், ''Assisting in the disposal of stolen property'' என்ற வாசகத்தை ''திருட்டுப் பொருளைப் புறப்படுத்துவதற்கு உதவி செய்தல்'' என்றும், "To dispose of any instrument for the purpose of being used for counterfeiting" என்ற வாசகத்தை, ''கள்ளத்தனமாகத் தயாரிக்கும் நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படும் பொருட்டுக் கருவி எதனையும் பராதீனம் செய்வதற்கு'' என்றும்,''Being at the disposal of the''Government''என்ற சொற்றொடரை ''அரசின் ஏவலில் இருத்தல்'' என்றும் மொழிபெயர்த்திருக்கிறோம். ''Disposal" என்ற சொல் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு பல்வேறு பொருள்களைக்கொடுக்கிறது, தமிழில்உள்ள ''சும்மா'' என்ற சொல்லைப் போல. ஒரு சொல்லின் பொருள், அது கொண்டிருக்கும் தோழமையைப் பொறுத்திருக்கிறது. செங்கல்லால் வீடு கட்டுவதுபோல,சொல்லைவைத்துவாக்கியங்களைக்கட்டுகிறோம். ஆனால், இந்தச் சொல் செங்கற்கள், தாம் அமைந்திருக்கும் சூழ்நிலையைப்பொறுத்துப்பொருளில் மாறுபடுகின்றன. வீட்டுத்தளத்திலுள்ள செங்கல்லும் செங்கல்தான், கோபுரத்தில் அமைந்துள்ள செங்கல்லும் செங்கல்தான். ஆனால், காட்சியில் எவ்வளவு வேறுபட்டிருக்கின்றன அவை !

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சில ஆங்கிலச் சொற்கள் ஒரு பொருட்கிளவிகள் (Synonyms) போன்று தோன்றும். ஆனால், நுணுகி ஆராயும்போது அவற்றுக்கிடையே நுண்ணிய பொருள் வேறுபாடுகள் இருப்பதை அறியலாம். 'Affirm', 'Confirm', 'Corroborate' என்ற சொற்கள் இந்த இனத்தைச் சேர்ந்தவை. இச்சொற்களுக்கிடையேயுள்ள பொருள் வேறுபாடு மிகவும் சன்னமானது. 'Affirm' என்பதை 'உறுதிசெய்' என்றும், 'Confirm' என்பதை 'உறுதிப்படுத்து' என்றும், 'Corroborate' என்பதை 'உறுதியூட்டு' என்றும் இந்த ஆணையம் மொழிபெயர்த்திருக்கிறது. 'உறுதி' அடியாகப் பிறந்த இம்மூன்று சொற்களும், மேற்சொன்ன ஆங்கிலச் சொற்களுக்கு இடையேயுள்ள நுண்ணிய பொருள் வேறுபாடுகளைஉரியவாறு எடுத்துநுவல்கின்றன என்றுநம்புகிறோம்.

மற்றொரு குடும்பத்தைச்சேர்ந்த ஆங்கிலச் சொற்களுக்குக் கீழ்க்கண்ட நேர் பதங்களைக் கொடுத்திருக்கிறோம் :—

| | | |
|---|---|---|
| Allow | .. | இடம் கொடு |
| Permit | .. | அனுமதி |
| Consent | .. | சம்மதம் |

| | | |
|---|---|---|
| Suffer | .. | சகித்துக்கொள் |
| Concur | .. | இணங்கு |
| Sanction | .. | ஒப்பளிப்புச் செய் |
| Authorise | .. | அதிகாரம் அளி |

இன்னொரு கோத்திரத்தைச் சேர்ந்த ஆங்கிலச் சொற்களைக் கீழ்க்கண்டவாறு மொழிபெயர்த்திருக்கிறோம்:—

| | | |
|---|---|---|
| Grant | .. | கொடை |
| Reward | .. | வெகுமதி |
| Present | .. | அன்பளிப்பு |
| Prize | .. | பரிசு |
| Award | .. | அளிப்பு |
| Donation or Gift | .. | நன்கொடை |

'Becoming void' என்ற சொற்றொடரை 'விழலாதல்' என்று 300 ஆண்டுகளுக்கு முன்பே புதுவை வழக்கறிஞர்கள் தமிழ்ப் படுத்தி வழங்கி வந்திருக்கிறார்கள். இதையொட்டி 'Becoming null and void' என்ற சொற்றொடரை 'வெறிதாகி விழலாதல்' என்று தமிழாக்கம் செய்திருக்கிறோம்.

'Precedent' என்ற சொல்லுக்குச் சரியான தமிழ்ச் சொல் கிடைக்கவில்லை. 'Quotation' என்பதை 'மேற்கோள்' என்றும் 'Interpretation'-ஐப் 'பொருள்கோள்' என்றும் 'Ideal'-ஐக் 'குறிக்கோள்' என்றும் சொல்லும் மரபையொட்டி முன்கொள்ளப்பட்டது என்ற கருத்தைத் தெரிவிக்கும் 'Precedent' என்ற சொல்லை 'முற்கோள்' என்ற புதிய சொல்லை உண்டாக்கித் தமிழ்ப்படுத்தியிருக்கிறோம். இது புதிய சொல்லாக இருந்தாலும் இதன் ஒலியும் உருவமும் வெகு காலம் புழங்கி வந்த தமிழ்ச் சொல்லின் ஒலியையும் உருவத்தையும் போன்று இருப்பதால், தமிழர்களும் தமிழ்ச் சட்ட வல்லுநர்களும் இதை ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறோம்.

'Having retrospective effect' என்ற சொற்றொடரை 'முன்னுற இயங்கும் தன்மையதான' என்றும், 'Probabilities and improbabilities of the case' என்ற சொற்றொடரை, 'இந்த வழக்கின் நிகழ்தற்குரிய கூறுகளும் நிகழ்தற்கரிய கூறுகளும்' என்றும் மொழிபெயர்த்திருக்கிறோம்.

'Fact' என்ற சொல்லைத் தமிழ்ப்படுத்துவதற்குமுன் மிகவும் அல்லற்பட்டோம். 'பொருண்மை' என்று அதை மொழிபெயர்ப்

பது தவறு. ஏனென்றால், அது பொருளின் தன்மையை அல்லது கருத்துப் பொருளைச் சுட்டும். 'Fact'-ஐ 'உண்மை' என்று மொழி பெயர்ப்பதும் தவறு; பொய்யே ஒரு 'Fact' ஆக இருக்கும்போது, அதை 'உண்மை' என்று எப்படி மொழிபெயர்ப்பது! வெகுகாலம் சிந்தனை செய்த பிறகு, 'Fact'-ஐச்'சங்கதி' என்று மொழிபெயர்ப் பதே சரி என்று தோன்றியது. ''என்ன சங்கதி?'', ''கேட்டாயா சங்கதி'',''பார்த்த சங்கதி'', ''ருசித்த சங்கதி'',''கொலைசெய்த சங்கதி'',''தீப்பிடித்த சங்கதி'' என்று பலவகைப்பட்ட பொருள் களில் 'சங்கதி' என்ற சொல்லைத் தமிழர்கள் பயன்படுத்திவருகி றார்கள். இந்தியச் சாட்சியச் சட்டத்தின், 3ஆவது பிரிவில் 'Fact' என்ற சொல்லுக்கு இலக்கணம் கீழ்க்கண்டபடி தரப்பட்டிருக் கிறது:

'சங்கதி' என்ற சொல், பொருள் தந்து உள்ளடக்குவதாவது:--

(1) புலன்களால் அறியக்கூடிய பொருள், பொருள்களின் நிலை, அல்லது பொருள்களின் உறவு எதுவும்;

(2) எவரேனுமொருவரின் உணர்வுக்குத்தெரிகிற மனநிலை எதுவும்.

**எடுத்துக்காட்டுகள் —**

(ஆ) ஏதோ ஒன்றை ஒரு மனிதர் கேட்டார் அல்லது பார்த் தார் என்பது ஒரு சங்கதி.

(இ) குறிப்பிட்டசொற்களை ஒரு மனிதர் கூறினார் என்பது ஒரு சங்கதி.

இவ்வாறு 'Fact' என்ற சொல்லுக்குப் பொருள் கூறி விட்டு, பலஇடங்களில் அந்தச்சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறது இந்தியச் சாட்சியச் சட்டம். இந்தச் சட்டத்தில் 'Fact' என்று வரு கிற எந்தச் சந்தர்ப்பத்திலும் 'சங்கதி' என்று அதை மொழி பெயர்க்கும்போது, 'சங்கதி' என்ற சொல் எவ்வளவு பொருத்த மானது,வரப்பிரசாதமாக அல்லவா அது நமக்குக்கிட்டியிருக்கிறது என்பதை உணர முடிகிறது. இந்த ஆணையத்தின் பிரதிநிதிகள், மைசூர்-கருத்தரங்கில் பங்கேற்றுக்கொள்ளப்போனபோது, ஆந்தி ரச்சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையமும், கேரளச்சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையமும் 'Fact' என்றசொல்லை,'சங்கதி' என்றே மொழிபெயர்த்திருக்கிறார்கள் என்று தெரிந்து மிக உற்சாகம் அடைந்ததோடன்றி,இந்தஆணையத்தின் மொழிபெயர்ப்பு எதிர் பாரக்காத இடங்களிலிருந்தும் உறுதியூட்டம் பெற்று இருக்கிறது என்று உணர்ந்து மகிழ்வுற்றார்கள்.

'ரிவரோல்' (Rivarol) என்ற ஃப்ரெஞ்சு அறிஞர், ''What is not clear is not French'' (தெளிவில்லாத எதுவானாலும் சரி, அது ஃப்ரெஞ்சு ஆக இருக்க முடியாது) என்று சொல்லித் தம் தாய் மொழியின் தெளிந்த தெளிவை நினைந்து பெருமைப்படுகிறார். கவிதைத்தமிழ், கிரேக்க மொழியைக்காட்டிலும்துல்லியமும்மெருகும் கொண்டது என்று சொல்லி வின்ஸ்லோ என்ற ஆங்கில மொழியியல் அறிஞர் பாராட்டியிருக்கிறார். உரைநடைத் தமிழுக்கும் அந்த அரிய குணங்களைஊட்டவேண்டியது தற்காலத் தமிழறிஞர்களுடைய கடமை. நுண்ணிய சட்டக் கருத்துக்களைத் திறமையோடும், கவனத்தோடும், படைப்பாற்றலோடும் தமிழ்ச் சொற்களில் செலுத்துவதன் வாயிலாக உரைநடைத் தமிழை விரைந்து வளர்ப்பதற்கு நீதிபதிகளுக்கும் வழக்கறிஞர்களுக்கும் ஓர் அரிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது. உண்மையில் 14—11—1976க்குப் பின் தமிழில் எழுதப்படும் குற்ற வழக்குத் தீர்ப்புகளைப் படிக்கும் போது அந்த வாய்ப்பு மிக நன்றாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்று தெரிகிறது. சட்ட நுண்மைகளும் அறிவியல் சதுரப்பாடுகளும்நிறைந்த வாதப் பிரதிவாதங்களிலும், நீதிமன்றங்களிலும் மேற்குறித்த சொற்களைக்கையாண்டு அவற்றுக்கு ஆட்சிப்பொறுப்பைக்கொடுக்க வேண்டியது சட்ட வல்லுநர்களின் கடமையாகும்.

இந்த அகராதியில் ஆங்கிலச் சட்டச் சொற்களுக்குத் தமிழ்ப் பதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அச் சொற்கள் பெரும்பாலும் 'குற்ற விசாரணைமுறைச் சட்டம்' (Criminal Procedure Code) 'இந்தியத் தண்டனைச் சட்டம்' (Indian Penal Code), 'இந்தியச் சாட்சியச் சட்டம்' (Indian Evidence Act), 'உணவுக் கலப்படம்தடுப்புச் சட்டம்' (Prevention of Food Adulteration Act), 'தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம்' (Tamil Nadu Prohibition Act), 'காவற் படைச் சட்டம்' (The Police Act), 'இன்றியமையாப் பண்டங்கள் சட்டம்' (Essential Commodities Act), 'தமிழ் நாடு உணவு வழங்கும் நிறுவனங்கள் சட்டம்' (Tamil Nadu Catering Establishment Act), 'இந்திய வனச் சட்டம்' (Indian Forest Act), 'ஊழல் தடுப்புச் சட்டம்' (The Prevention of Corruption Act), 'குற்றவாளிகள் கண்காணிப்புச் சட்டம்' (Probation of Offenders Act), 'பெண்டிர், சிறுமியர் விபசாரத் தொழில் ஒடுக்குச் சட்டம்' (Suppression of Immoral Traffic in Women and Girls Act), 'கால்நடை அத்துமீறல் சட்டம்' (Cattle

Trespass Act), 'தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம்' (Gold Control Act) ஆகிய பதினான்கு சட்டங்களின் தமிழாக்கத்திலும், இந்திய அரசமைப்பின் (Constitution of India) தமிழாக்கத்திலும்பயன்படுத்தப் பட்டவை. மேற்படி சொற்களுக்குத் தொடர்புடைய வேறு சில கலைச் சொற்களுக்குள்ள நேர் தமிழ்ப் பதங்களும் இந்த அகராதியில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நீதிபதிகளுக்கும் வழக்குரைஞர்களுக்கும் சட்டத்தில் அக்கறைகொண்டுள்ள பொது மக்களுக்கும் இந்த அகராதிபயனுள்ளதாக இருக்கும் என்று இந்த ஆணையம் நம்புகிறது.

சட்டங்களை மொழிபெயர்ப்பதற்கு முன்னமேயே மொழிபெயர்ப்பாளர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையக்குழு 1968-ல்ஒரு சட்டச்சொல் அகராதியை வெளியிட்டது. 1976 மே மாதம் நிறுவப்பட்ட இந்தத்தமிழ்நாடுசட்டத்துறைஆட்சிமொழிஆணையம் மேற்சொன்ன 14 சட்டங்களையும் இந்திய அரசமைப்பையும் மொழி பெயர்த்த பின்பே இந்தச் சட்டச் சொல் அகராதியைத் தயார் செய்து, இரண்டாவது பகுதியாக 1979-ல் வெளியிடுகிறது. முதற் பகுதியிலுள்ள கலைச்சொற்களுக்கும் இரண்டாவது பகுதியிலுள்ள கலைச் சொற்களுக்கும் வேறுபாடுகள் சில இருக்கத்தான் செய்கின்றன. இந்த வேறுபாடுகள் இருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக, சட்டங்களை மொழிபெயர்க்கும்போது ஏற்பட்ட விதவிதமான பிரச்சினைகளைக்கூட்டுமுயற்சியினால்தீர்த்துப்பெற்றநேரடி அனுபவத்தைப் பயன்படுத்தி இந்தப் பகுதி தொகுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக, எளிமையாகவும் இயல்பாகவும் துல்லியமாகவும் தமிழாக்கம் இருந்தால்தான் நடைமுறையில் அது பயன்படும் என்ற நோக்கத்தோடு இந்தப் பகுதியிலுள்ள சொற்கள் தமிழாக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது பகுதியிலுள்ள சொற்களே முற்றிலும்பொருத்தமானவை என்றுஇந்த ஆணையம் அறுதியிட்டுக்கூறவில்லை. எதிர்கால அனுபவத்தின் அடிப்படையில்இப்பகுதியிலுள்ள சொற்களையும்மாற்ற வேண்டியிருக்கலாம். வேறு மாற்றங்கள் செய்யும் வரை இந்த இரண்டாவது பகுதியிலுள்ள சொற்களே இந்த ஆணையம் அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொண்ட சொற்களாக இருந்து வரும்.

இந்தப் பகுதியில் சில வழுக்கள் இருக்கலாம். நாளாவட்டத்தில் நீதிபதிகளும் வழக்குரைஞர்களும் தமிழறிஞர்களும் இந்த

வழுக்களைக் களைந்து இன்னும் செம்மையான தமிழ் மொழி பெயர்ப்பை வெளிக்கொணர்வதற்குஆணையத்திற்குஆலோசனைகள் கூறினால், அவ்வாலோசனைகளை நன்றியுடன் பரிசீலனை செய்து, ஏற்றுக்கொள்ளத்தக்க ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருக்கிறது இந்த ஆணையம்.

எஸ். மகராஜன்,
**தலைவர்,**
**சென்னை-2.** **தமிழ்நாடு சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையம்.**

## மொழிபெயர்ப்புப் பயிற்சிக்கு உதவியாயிருக்கக்கூடிய நூல்களின் பட்டியல்.


1. The Art of Translation—By Theodore Savory—1968 Edition. Published by Jonathan Cape, 30, Bedford Square, London.

2. The Art of Translation—A Symposium Published by the Ministry of Scientific Research & Cultural Affairs, New Delhi.

3. Proceedings of the Third Congress of the International Federation of Translators FIT. 1959.

4. Quality in Translation—Edited by: E. Cary and R. W. Jumpelt. Published by : Symposium Publications Division, Pergamon Press, Oxford, London, New York and Paris.

5. On Translation—By Reuben A. Brower, Published by Harward University Press, New York, 1966.

6. UNESCO Scientific and Technical Translations & Related Aspects of the Language Problem—By J. E. Holmstrom, UNESCO, Paris, 1958.

7. Aspects of Applied Linguistics —By D. P. Pattanayak—1968 Edition, published by Asia Publishing House, Bombay, Calcutta, New Delhi, Madras, Lucknow, Bangalore, London, and New York.

8. Translation in Mediaeval Bulgaria, 1969—Edited by Ashit Chakra Borthy—Published by Indranath Majumdar Subarnarelcha, 73, Mahatma Gandhi Road, Calcutta-9.

9. Aspects of Translation—(Studies in Communication)—Published by Seckar and Warburg, 1958, University College, London

10. Translating—By Ian F. Finlay—1971 Edition, Published by: "Teach Yourself Books", St. Paul's House, Warwick Lane, London, E. C. 4.

11. "BABEL"—Journal of the International Federation of Translators—Under the auspices of UNESCO with Head quarters at Paris.

# A

A—ஒரு; ஒவ்வொரு; ஓர்.

A certain—ஒரு சில.

A subsequent offence—ஒவ்வொரு பிந்திய குற்றமும்.

Ab initio—தொடக்கத்திலிருந்தே.

Abandonment—கைவிட்டுவிடுதல்.

Abatement—அற்றுப்போதல்; களைதல்.

Abatement of appeal—மேல்முறையீடு அற்றுப்போதல்.

Abatement of nuisance—தொல்லை களைதல்.

Abbreviation—சுருக்கக்குறியீடு.

Abduct—ஆட்கடத்து.

Abduction—ஆட்கடத்துதல்; ஆளைக் கடத்துதல்.

Abet—உடந்தையாயிரு.

Abetment—உடந்தையாயிருத்தல்.

Abetment of escape of persons arrested—கைது செய்யப்பட்ட ஆட்கள் தப்பிச் செல்ல உடந்தையாயிருத்தல்.

Abettor—உடந்தைக் குற்றவாளி; உடந்தையாளர்.

Abeyance—தாற்காலிகமாகநிறுத்தி வைக்கப் பட்டுள்ள நிலை.

Abeyance, keep in—தாற்காலிகமாக நிறுத்தி வை.

Abide by the constitution—அரசமைப்பின் படி ஒழுகு.

Abide by the results of the appeal, it shall—அது மேல்முறையீடு முடிவுகளைப் பொறுத்து இருத்தல் வேண்டும்/ முடிவு களுக்கு இணங்கி இருத்தல் வேண்டும்.

Abiding by—இணங்கியதாய் இருக்கிற; பொறுத்ததாய் இருக்கிற.

Ability—திறமை.

Abjure—அறவே தவிர்.

Abkari—கலால் (ஆப்க்காரி).

Abnormality—இயல்புக்கு மாறான தன்மை.

Abode—இருப்பிடம்.

Abode, fixed place of—நிலையான இருப் பிடம்.

Abolish—அழி; ஒழி.

Abolition—அழிப்பு; ஒழிப்பு.

Abolition of untouchability—தீண்டாமை ஒழிப்பு.

About that date—அந்தத் தேதிவாக்கில்.

About to make, a complaint, he is—அவர் முறையீடொன்றைச் செய்யவிருக்கிறார்.

Above the rank of (a Sub-Inspector)—(ஓர் உதவி ஆய்வாளருக்கு) மேல்நிலை யிலுள்ள மேற்படியிலுள்ள.

Abridge—சுருக்கு.

Abrogate—ரத்து செய்.

Absconding—தலைமறைவாகுதல்.

Absence—இல்லாதிருத்தல்; இல்லாமலிருத் தல்; இல்லாமை; வாராமை.

Absence, by reason of–வாராமை காரணமாக.

Absence of any specific provision to the contrary, in the–குறிப்பிட்ட வகைமுறை எதுவும் எதிர்மாறாக இல்லாதபோது.

Absence of reasonable excuse, in the–நியாயமான காரணம் இல்லாதபோது.

Absent–இல்லாமலிரு ; வராதிரு.

Absolute–நிபந்தனையற்ற; பூரணமான ; வரம்பற்ற.

Absolutely–நிபந்தனையின்றி ; பூரணமாக ; வரம்பற்ற முறையில்.

Abstaining from carrying out–நிறைவேற்றா தொழிதல்; நிறைவேற்றாமல் இருத்தல்.

Abstaining from commission of any such offence–அத்தகைய குற்றம் எதையும் செய்யாமல் இருத்தல்/செய்யாதொழிதல்.

Abstention–செய்யாதிருத்தல் ; செய்யாதொழிதல் ; தவிர்த்தல்.

Abstention from intoxicants–போதையூட்டும் பொருள்களைத் தவிர்த்தல்.

Abstract–சுருக்கக்குறிப்பு; பிரித்தெடு.

Abstracted–பிரித்தெடுக்கப்பட்ட.

Abuse–தகாதமுறையில்செய் ; தவறாகப் பயன்படுத்து.

Abuse of authority–அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல்.

Abuse of the process of court–நீதிமுறைக் கட்டளையைத் தவறாகப் பயன்படுத்துதல்/முறைகெட்ட வகையில் பயன்படுத்துதல்.

Academic distinction–கல்வித்துறைச் சிறப்பு.

Accelerate–விரைவுபடுத்து.

Accept–ஏற்றுக்கொள்.

Acceptance of the fees–கட்டணங்களை ஏற்றுக் கொள்ளுதல்.

Accepted under the provisions–வகைமுறைகளின்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட.

Acceptor–ஏற்புநர்; ஒத்துக்கொள்பவர்.

Access–அணுகும்வழி; அணுகும் வாய்ப்பு; தொடர்பு; வரப்போக வாய்ப்பு.

Access, direct–நேரடித் தொடர்பு.

Access, open court to which the public may have–பொது மக்கள் வந்து போகக்கூடியதாயுள்ள பகிரங்க மன்றம்.

Accessible–அணுகத்தக்க; போய்வரத்தக்க.

Accession, instrument of–இணைப்புச் சாசனம்.

Accession to office–பதவி ஏற்பு.

Accessories–துணைக்கருவிகள்.

Accident–எதிர்பாராத நிகழ்ச்சி; தற்செய நிகழ்ச்சி; விபத்து.

Accidental–எதிர்பாராத; தற்செயலாக.

Accommodation, house–வீட்டு வசதி அளித்தல்.

Accommodation, subject to the availability of–இடம் கிடைக்கும் வசதிக்கு உட்பட்டு

Accompanied by a copy of a record, it shall be–பதிவின் நகலொன்று அதனுடன் சேர்ந்துபோதல் வேண்டும்.

Accompany–சேர்ந்துபோ.

Accomplice–கூட்டுக்குற்றவாளி.

Accord–இணக்கம்; இணங்குமாறுசெய்.

Accordance with the rules, in–விதிகளின்படி; விதிகளுக்கிணங்க.

Accorded sanction, the–அளிக்கப்பட்ட ஒப்பளிப்பு.

According as–. . . . தக்கபடி.

According to that–அதற்கு இணங்க; அதற்கு ஏற்ப.

Accordingly–அ/இங்ஙனமே; அ/இதன்படியே; அ/இவ்வாறே.

Account–கணக்கு.

Account, take into–கவனத்தில் எடுத்துக் கொள்.

Account for–கணக்குக் காட்டு ; முகாந்திரம் காட்டு.

Account of crime, give an–குற்றத்தைப் பற்றிய ஒரு வரலாற்றைக் கூறு.

Account of experiment, an–பரிசோதனையைப்பற்றிய ஒரு விவரிப்பு.

Account (of statement)–(வாக்குமூலத்தின்) விவரம்.

Account satisfactorily–திருப்திகரமான முகாந்திரம் காட்டு.

Accoutrements–உடுப்புகள்.

Accrual–கிட்டுதல்; வந்தடைதல்.

Accrue–கிட்டுகிற; வந்தடைகிற.

Accrued (a legal character)–(சட்டபூர்வமான தகுதி) கிட்டியது.

Accumulate—சேர்த்துவை.

Accusation—குற்றஞ்சுமத்துதல்.

Accused—எதிரி; குற்றஞ்சுமத்தப்பட்டவர்.

Accused appears to be in sound mind—எதிரி புத்தி சுவாதீனமுடையவராகத் தோன்றுகிறார்.

Accused of any offence—ஏதேனும் குற்றம் சுமத்தப்பட்ட.

Accused person—குற்றம் சுமத்தப்பட்டவர்.

Achievement—சாதனை.

Acidification—அமிலத்தன்மையாக்கிவிடுதல்.

Acidifying agent—அமிலத்தன்மையதாக்கும் பொருள்.

Acknowledge—ஒப்புகைஅளி.

Acknowledgement—ஒப்புகை.

Acknowledgement due, by registered post with—ஒப்புகைப் பதிவஞ்சல்மூலம்.

Acknowledgement of allegiance or adherence to a foreign state, if he is under any—அயல்நாட்டு அரசு ஒன்றிடம் விசுவாசம் அல்லது ஒட்டுறவு இருப்பதை எந்த வகையிலேனும் ஒப்புக்கொண்டவராக இருக்கிறவரானால்.

Acquaintance—பரிச்சயம்; பழக்கம்.

Acquainted—பழக்கப்பட்ட; பரிச்சயம் கொண்ட.

Acquainted with the facts of the case—வழக்கின் சங்கதிகளைத் தெரிந்துள்ள.

Acquainted with the rules, thoroughly—விதிகளை நன்கு தெரிந்த.

Acquiescence-குறிப்பிசைவு.

Acquired—ஈட்டப்பட்ட; பெறப்பட்ட.

Acquired, rights—ஈட்டப்பட்ட உரிமைகள்.

Acquiring property—சொத்தை ஈட்டுதல்; சொத்தைப் பெறுதல்.

Acquisition—ஈட்டுதல்.

Acquittal—விடுதலை.

Acquittance—செல்லுச்சீட்டு.

Across a customs frontier, taking it—அதை எடுத்துக்கொண்டு சுங்க எல்லையைக் கடந்து செல்லுதல்.

Act—சட்டம்; செய்கை; செய்சட்டம்; செயல்; தாற்காலிகமாகச் செயலாற்று.

Act abetted—எந்தச் செயலுக்கு உடந்தைச் செயல் உடந்தையாய் இருந்ததோ அந்தச் செயல்; பிரதானச் செயல்.

Act and Law—செய்சட்டமும், சட்டமும்

Act bona fide done—நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செய்கை.

Act constituting an offence—ஒரு குற்றமாக அமைகின்ற செய்கை.

Act in his discretion, to—தம் யுக்தப்படி செயல்படுவதற்கு.

Act in its application to a district—சட்டம் ஒரு மாவட்டத்தின் மீது இயங்குகையில்.

Act in operation—இயக்கத்திலிருக்கிற சட்டம்; செயற்பாட்டிலிருக்கிற சட்டம்.

Act is in operation—சட்டம் இயக்கத்திலிருக்கிறது/செயற்பாட்டிலிருக்கிறது.

Act judicially—நீதிமுறையில் செயற்படு/செயலாற்று.

Act making an offence—குற்றமொன்றை உண்டாக்கும் செய்கை.

Act, nature of the—செய்கையின் தன்மை.

Act of cruelty—கொடுமையான செயல்/செய்கை.

Act of war—போர்ச் செயல்.

Act operates—சட்டம் இயங்குகிறது/செயற்படுகிறது.

Act or omission—செய்கை அல்லது விடுகை.

Act or regulation having the force of law, an—சட்டத்தின் ஆற்றல் கொண்டுள்ள ஒரு செய்சட்டம் அல்லது ஒழுங்குமுறை விதி.

Act to consolidate and amend the law, an—சட்டத்தை ஒருங்கிணைத்துத் திருத்தியமைப்பதற்கான ஒரு செய்சட்டம்.

Act under the direction of (so and so)—(இன்னாருடைய) ஏவலின்படி செயற்படு.

Acting Chief Justice—தாற்காலிகமாகச் செயலாற்றும்/செயற்படும் தலைமை நீதிபதி.

Acting in any manner inconsistent with his duty—ஏதேனும் ஒரு வகையில் தம்முடைய கடமைக்கு ஒவ்வாது/முரணாக/மாறாகச் செயற்படுதல்.

Action—செய்கை/செயல்; நடவடிக்கை; வழக்கு.

Action taken or thing done—எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்லது செய்யப்பட்ட செயல்.

Actionable wrong—வழக்குத் தொடுப்பதற்குரிய தீங்கு.

Active confidence—தீவிர நம்பிக்கை.

Active service of the Government, in the—அரசின் தீவிர ஊழியத்தில்.

Activities like exercise and drill—பயிற்சி, உடற்பயிற்சி போன்ற செயல்கள்/நடவடிக்கைகள்.

Actual—உள்ளபடியான.

Actual charge—உள்ளவாறான/உள்ளபடியான பொறுப்பு.

Actual loss—உள்ளபடியான இழப்பு.

Actual occupancy—உள்ளவாறான/உள்ளபடியான அனுபோகம்.

Actual service, time spent in—உள்ளபடியான ஊழியத்தில் செலவழிக்கப்பட்ட காலம்.

Actually—உள்ளபடியே; உள்ளவாறாகவே.

Actually sitting in a session—ஒரு கூட்டத் தொடரில் உள்ளபடியே அமர்தல்.

Acute shortage—கடுமையான பற்றாக்குறை.

Adaptation—இணக்கப்படுத்துதல்; இணக்கம்; தழுவல்.

Addition—கூட்டல்; சேர்த்தல்; சேர்மானம்.

Additional—கூடுதலான.

Additional Chief Metropolitan Magistrate—பெருநகர் கூடுதல் தலைமை நடுவர்.

Additional conditions-கூடுதல்நிபந்தனைகள்

Additional District Magistrate—மாவட்டக் கூடுதல் நடுவர்.

Additional function—கூடுதல் கடமை.

Additional Public Prosecutor—அரசுக் குற்றத் துறைக் கூடுதல் வழக்குரைஞர்.

Additional Sessions Judge—கூடுதல் செஷன்ஸ் நீதிபதி.

Addition or alteration—கூட்டல் அல்லது மாறுதல்/மாற்றம்.

Addition or omission—சேர்த்தல் அல்லது விடுதல்.

Addition to cancellation, in—ரத்து செய்வதோடுகூட.

Address—உரைநிகழ்த்து; உரையாற்று; விண்ணப்பம் செய்; முகவரி.

Addressed to a person, requisition—ஓர் ஆளுக்கு அனுப்பப்பட்ட/எழுதப்பட்ட கோரிக்கை.

Addressee—முகவரியிடப்பட்டவர்.

Adduce evidence—சாட்சியம் அளி; சாட்சியம் கொடு; சாட்சியம் நல்கு.

Adequacy—போதுதல்.

Adequate—போதிய; போதிய அளவு; போதுமான.

Adequate reasons to the contrary—மாறாகச் செய்வதற்குப் போதிய காரணங்கள்.

Adherence—ஒட்டுறவு; பற்று.

Adhesive stamp—ஒட்டக்கூடிய முத்திரை வில்லை.

Adhoc judge—தனிப்பணி நிமித்த நீதிபதி.

Adjacent—அருகில்.

Adjoining station—அடுத்துள்ள நிலையம்.

Adjourn—ஒத்திவை; தள்ளிவை.

Adjournment—ஒத்திவைத்தல்.

Adjudged—தீர்ப்பளிக்கப்பட்ட; தீர்மானிக்கப்பட்ட.

Adjudication—நீதி முறையில் தீர்மானித்தல்.

Adjudicatory function—நீதிமுறையில் தீர்மானிக்கும் அலுவல்/கடமை.

Adjust—ஈடுசெய்; சரிக்கட்டு; நேரமைவு செய்.

Adjustment—ஈடுசெய்தல்; சரிக்கட்டுதல்; நேரமைவுசெய்தல்.

Administer oath—பிரமாணம் செய்துவை.

Administration—நிர்வாகம்.

Administration of justice—நீதி நிர்வாகம்.

Administration of law—சட்ட நிர்வாகம்.

Administration of poison—நஞ்சிடுதல்.

Administrative expense—நிர்வாகச் செலவு.

Administrative law—நிர்வாகத் துறைச் சட்டம்.

Administrative matters—நிர்வாகத்துறை விஷயங்கள்.

Administrative relations—நிர்வாக உறவுகள்.

Administrative tribunal—நிர்வாகத் துறைத் தீர்ப்பாயம்.

Administratively subordinate—நிர்வாக முறையில் கீழுள்ளவர்.

Administrator—ஆட்சியாளர்.

Administrator-General—அட்மினிஸ்ட்ரேட்டர் ஜெனரல்.

Admiralty jurisdiction—கடலியல் அதிகார வரம்பு.

Admissible—அனுமதிக்கத்தக்க; ஏற்கத்தக்க.

Admissible evidence—அனுமதிக்கத் தக்க சாட்சியம்.

Admission--அனுமதித்தல் ; ஏற்புரை; ஏற்றுக் கொள்ளுதல்; சேர்க்கப்படுதல்.

Admission into the Union of a new State–ஒன்றியத்துக்குள் புதிய மாநிலம் ஒன்றைச் சேர்த்துக் கொள்ளுதல்.

Admission into University–பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்படுதல்.

Admission of evidence–சாட்சியத்தை/சான்றை அனுமதித்தல்.

Admission of offence–குற்ற ஏற்புரை; குற்றத்தை ஏற்றுக்கொள்ளுதல்.

Admit of, in cases where circumstances do not–சூழ்நிலைகள் இடங்கொடுக்காத சந்தர்ப்பங்களில்.

Admit to bail–ஜாமீனில் விடு.

Admittance–உட்செல்வதற்கான அனுமதி.

Admitting the appeal–மேல்முறையீட்டை விசாரணைக்காக ஏற்றுக்கொள்ளுதல்.

Admonish and let off–கண்டிப்பு வழங்கி விட்டுவிடு.

Admonition–கண்டித்தல்; கண்டிப்பு வழங்குதல்.

Adopt–ஏற்றுக்கொள்; கைக்கொள்; சுவீகாரம்எடு ; தத்து எடு.

Adoption-சுவீகாரம்; தத்து.

Adoption, taking in–சுவீகாரம் எடுத்தல்; தத்தெடுத்தல் ; தத்தெடுப்பு.

Adoptive mother–சுவீகாரத்தாய்.

Adult–முதிர்ந்தோர்; வயது வந்தவர்.

Adult suffrage–முதிர்ந்தோர் வாக்குரிமை.

Adulterant–கலப்படம் செய்யவுதவும் பொருள்; கலப்பான்.

Adulterated–கலப்படஞ்செய்யப்பட்ட.

Adulteration–கலப்படம்; கலப்படம் செய்தல்.

Adultery–முறைபிறழ்ந்த புணர்ச்சி.

Adultery, living in–கற்புப்பிறழ்ந்தநிலையில் வாழ்கிற.

Ad valorem–பெறுமான விகிதப்படி.

Advance, make a grant in–ஒரு முன்மானியம் வழங்கு.

Advance money–பணத்தைக் கடனாகக் கொடு.

Advancement–முன்னேற்றம்; மேம்பாடு.

Advantage–சாதகம்.

Advertisement–விளம்பரம்.

Adverse party–எதிர்த் தரப்பினர்; எதிர்த் தரப்பு.

Advice–ஆலோசனை.

Advisable–உசிதமான.

Advising with him, for the purpose of–அவருடன் ஆலோசனை செய்யும் நோக்கத்துடன்.

Advisory body–ஆலோசனைக் குழு.

Advocate–வழக்குரைஞர்.

Advocate-General for the State–மாநிலத்திற்கான தலைமை வழக்குரைஞர்.

Aerodrome–விமான நிலையம்.

Aeronautics–வான்பயணஇயல்.

Affairs of a State–மாநிலமொன்றின் விவகாரங்கள்/காரியங்கள்.

Affecting–பாதிக்கின்ற.

Affection or illwill–விருப்போ, வெறுப்போ.

Affidavit–பிரமாணப் பத்திரம்.

Affirm–உறுதிகூறு; உறுதிசெய்.

Affirmation–உறுதி; உறுதியுரை.

Affix–இடு; ஒட்டு.

Affixing the seal to articles–பொருள்களுக்கு இலச்சினையிடுதல்/முத்திரையிடுதல்.

Afford evidence–சாட்சியம் அளி.

Affray–கலவரம்; சச்சரவு.

Aforesaid–முன்சொல்லப்பட்ட; முன் சொன்ன; மேலே சொல்லப்பட்ட; மேற்சொன்ன.

After–பிறகு ; பின் ; பின்பு ; பின்னர்.

After due admonition–உரிய கண்டிப்பு வழங்கிய பின்பு.

After hearing parties–தரப்பினர்களுக்குக் கேள்வி நல்கிய பின்பு; தரப்பினர்களைக் கேட்ட பின்பு.

After hearing the case–வழக்கை விசாரித்த பின்பு.

After recording the reasons in writing–காரணங்களை எழுத்தில் பதிவு செய்த பின்பு.

After-care organisation–பிற்காப்பு நிறுவனம்.

Against law–சட்டத்திற்கு விரோதமாக.

Agar–கடற்கோரை.

Agency–அமைப்பு; நிறுவனம் ; முகவாண்மை ; ஸ்தாபனம்.

Agent-முகவர்.

Aggregate punishment--மொத்தத் தண்டனை.

Aggression, external–அயல்நாட்டுத் தாக்குதல்.

Aggrieved–குறையுற்ற.

Aggrieved person–குறையுற்றவர்.

Agmark sealed container–அக்மார்க் முத்திரையிடப்பட்ட கொள்கலன்.

Agree–இணங்கு; உடன்படு ; ஏற்றுக்கொள்; ஒத்துக்கொள்.

Agree to commit any offence–குற்றம் எதையும் செய்வதற்கு உடன்படு.

Agreement–இணங்குதல்; உடன்பாடு.

Agreement is silent–உடன்பாடு மௌனமாய் இருக்கிறது.

Agricultural holding–வேளாண்மை / விவசாயக் குத்தகை நிலம்.

Agricultural produce–வேளாண்மை மகசூல்.

Agricultural Produce (Grading and Marketing) Act, 1937–*1937* ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் (தரம் பிரித்தல் மற்றும் குறியிடுதல்) சட்டம்.

Aground, running vessel–கலத்தைத் தரை தட்ட வைத்தல்.

Aid–உதவி ; உதவு.

Aircraft–வானூர்தி; வானூர்திகள்.

Air Force–வான்படை.

Air Force Act–வான்படைச் சட்டம்.

Air-freight–விமானக் கட்டணம்.

Air man (of the airforce)–வான்படை வீரர்.

Air navigation–வான்வெளிப் பயணம்.

Air traffic–வான்வெளிப் போக்குவரவு.

Airways–வான்வெளிப் போக்குவரத்து.

Alarm–எச்சரிக்கை; கிலி; பீதி.

Alcohol–ஆல்க்ககால்.

Alcoholic beverages–ஆல்க்ககால் சேர்ந்த பானங்கள்.

Alcoholic liquors–ஆல்க்ககால் சேர்ந்த மதுபானங்கள்.

Alien–அயல்நாட்டவர்.

Alienated–பராதீனம்செய்யப்பட்ட.

Alive–உயிருடனிருக்கிற.

All-India Judicial Service--அனைத்திந்திய நீதித்துறை ஊழியம்.

All manner of people–எல்லாவித மக்களும்.

All or any of the provisions–வகை முறைகள் அனைத்தும் அல்லது அவற்றில் எவையும்.

Allegation–குறைகூறுதல் ; சொல்லப்பட்ட/ நிரூபணம் செய்யப்படாத கூற்று.

Alleged facts–சொல்லப்பட்ட சங்கதிகள்.

Alleged to have been committed–செய்திருப்பதாகச் சொல்லப்படுகிற.

Allegiance–விசுவாசம்.

Alliance with the Government of India, power in–இந்திய அரசாங்கத்துடன் இணக்கமாக உள்ள அரசு.

Allied products–சார்ந்த பொருள்கள்.

Allocate–குறித்தளி; பகிர்ந்தளி; பங்கிட்டுக் கொடு; பங்கீடுசெய்; பிரித்துக் கொடு.

Allocated to Judicial and executive magistrates–நீதித்துறை, நிர்வாகத்துறை நடுவர்களுக்குக் குறித்தளிக்கப்பட்ட.

Allot–ஒதுக்கு; வழங்கு.

Allotment of land–நிலம் வழங்குதல்.

Allotment of seats–பதவியிடங்கள் ஒதுக்குதல்.

Allow–அனுமதி ; இடங்கொடு.

Allow or disallow–ஏற்றுக்கொள் அல்லது தள்ளுபடி செய்.

Allowance–படி; படித்தொகை.

Allowed, shall be–அளிக்கப்படுதல் வேண்டும்.

Allowed himself to be examined–தம்மைப் பரிசோதிக்க இடங்கொடுத்தார்.

Allowing–அனுமதிக்கின்ற; இடங்கொடுக்கின்ற.

Alloy–உலோகக்கலவை.

Almond–பாதாம்பருப்பு.

Almond oil–பாதாம் எண்ணெய்.

Already–ஏற்கெனவே.

Also–அவ்வாறே; கூட.

Alter–மாற்று; வேறுபடுத்து.

Alter the conditions thereof–அதன் நிபந்தனைகளில் மாறுதல் செய்தல்.

Alteration–மாறுதல்; மாற்றம்; மாற்றம் செய்தல்; மாற்றுதல்.

Alteration of Boundaries Act–எல்லைகள் மாற்றுதல் சட்டம்.

Alternative–இரண்டில் ஒன்று; மாற்று.

Alternatively—இரண்டில் ஒன்றாக; மாற்றாக.

Always—எப்போதுமே.

Amaranth—வாடாமல்லி (கீரைத் தண்டு வகை).

Ambassador—தூதர்.

Ambiguous—ஐயத்திற்குரிய.

Amenable, shall be—உள்ளாதல் வேண்டும்.

Amend—திருத்து.

Amended, shall stand-திருத்தப்பெற்று நிற்கும்.

Amendment—திருத்தம்; திருத்தம் செய்தல்.

Amends—ஈடு; நஷ்ட ஈடு.

Amenity—வசதி.

Amin—அமீனு.

Ammunition—போர்த்தளவாடங்கள்; யுத்தத் தளவாடங்கள்; வெடிமருந்து, குண்டு முதலியன.

Among other matters-இதர விஷயங்களோடு.

Among states—மாநிலங்களுக்கிடையே.

Amongst all the peoples of India—இந்திய மக்கள் அனைவரிடையேயும்.

Amongst themselves, from—தங்களுக்குள்ளிருந்தே.

Amount as the State Government may by notification specify—மாநில அரசாங்கம் அறிவிக்கையின் மூலம் குறித்துரைக்கலாகும் தொகை.

Amusements—வேடிக்கை விளையாட்டுகள். பொழுதுபோக்குகள்.

Analysis—பகுப்பாய்வு.

Analysis, chemical—இரசாயனப் பகுப்பாய்வு.

Analyst—பகுப்பாய்வாளர்.

Ancient customs—பண்டைய வழக்கங்கள்.

Ancient Monuments and Archaeological Sites and Remains Act-பழைமையான/தொன்மையான நினைவுச்சின்னங்கள், தொல்பொருள் ஆய்வு மனைகள் மற்றும் எஞ்சி நிற்பவைகள் சட்டம்.

Ancillary—துணை; துணையான.

Ancillary matters—துணைக் காரியங்கள்; துணை விஷயங்கள்.

Ancillary powers—துணை அதிகாரங்கள்.

Ancillary purpose—துணை நோக்கம்.

And—அல்லது ; ஆனால்; எனவே; எனினும்; பின்னர்; மற்றும்; மேலும்.

Anglo-Indian community-ஆங்கிலோ—இந்தியர் சமூகம்.

Animal—பிராணி; விலங்கு.

Animal husbandry—கால்நடைப் பராமரிப்பு.

Animation—உயிரூட்டுதல்; எழுச்சியூட்டுதல்.

Animosity—பகைமை; விரோதம்.

Annatto—காவி விதை.

Annexed—இணைக்கப்பட்ட.

Annexure—பின்னிணைப்பு.

Annoyance—தொல்லை.

Annual administration report—நிர்வாக ஆண்டறிக்கை.

Annual financial statement—வருடாந்திர நிதி விவர அறிக்கை.

Annual payment—வருடாந்திரச் செலுத்துகை.

Annual returns—ஆண்டு விவர அறிக்கைகள்.

Annually—ஆண்டுதோறும்.

Annuities—வருடாந்திரத் தொகை.

Annul—பயனற்றதாக்கு; ரத்து செய்.

Annulment—பயனற்றதாக்குதல்; ரத்து செய்தல்.

Anonymous communication—அநாமதேயக் கடிதம்; மொட்டைக்கடிதம்.

Answerable, he is not—அவர் பதில் சொல்லக் கடமைப்பட்டவராகார்.

Antecedents—முன்வரலாறு.

Antedate—முந்தின தேதியிடு.

Anthropology—மானிட இயல்.

Anticipation—எதிர்பார்த்தல்.

Anti-oxidants—எதிர் ஆக்ஸீகரணிகள்.


Legally competent—சட்டப்படி தகுதி வாய்ந்த.

Legatee—உயில்வழிஉரிமையர்.

Legible condition—தெளிவாகத் தெரியும் நிலை.

Legibly—புரியும்படியாக.

Legislate—சட்டம் இயற்று.

Legislation—சட்டம் இயற்றுதல்.

Legislative Assembly—சட்டமன்றப் பேரவை.

Legislative Council—சட்டமன்ற மேலவை.

Legislative function—சட்டத்துறை அலுவல்.

Legislative power—சட்டம் இயற்றும் அதிகாரம்.

Legislative procedure—சட்டம் இயற்றுவதற்கான நடைமுறை.

Legislative public officers—சட்டமன்றத் துறைப் பொது அலுவலர்கள்.

Legislative relation—சட்டம் இயற்றுவது பொறுத்த உறவு.

Legislature—சட்டமன்றம்.

Legitimate child—முறைப்படி பிறந்த குழந்தை.

Legitimate origin—முறைப்படியான தொடக்கம்.

Lessee—குத்தகை எடுப்பவர்.

Lessor—குத்தகை விடுபவர்.

Let off, admonish and—கண்டித்து விட்டு விடு.

Letter duly addressed to "A" — "அ" விற்கு முறையாக முகவரியிடப்பட்ட கடிதம்.

Letter of credit—நாணய உறுதிக்கடிதம்.

Levels, appropriate—உரிய நிலைகள்.

Levied—வசூலிக்கப்பட்டது ; விதிக்கப்பட்டது.

Levy—கட்டாயக் கொள்முதல் ; வசூல்; விதித்தல் ; விதிப்பு.

Levy of fine—அபராதம் வசூலித்தல்/ விதித்தல்.

Levy of sales tax-விற்பனை வரி வசூலித்தல்/ விதித்தல்.

Levy sugar—விதிப்புச் சர்க்கரை.

Liability—கடப்பாடு.

Liable to bear—பொறுப்பேற்கவேண்டிய.

Liable to be proceeded against and punished accordingly—அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் அதன்படியே தண்டிக்கப்படுவதற்கும் ஆளாதல்.

Liable to forefeiture—தண்டஇழப்புக்கு உள்ளாகிற.

Liable to pay—செலுத்தும் கடப்பாடுள்ள.

Libel—எழுத்துவழிஅவதூறு.

Libel and slander—எழுத்துவழி அவதூறும் வாய்மொழி அவதூறும்.

Libellous character—எழுத்துவழி அவதூறுக்கு இலக்கான பாத்திரம்.

Liberation—விடுதலை.

Libertine—ஒழுக்கக்கட்டுப்பாடற்றவர்; கட்டுப்பாட்டுக்குட்படாதவர்.

Liberty—சுதந்திரம்.

Liberty of belief—கோட்பாட்டுச் சுதந்திரம்.

Liberty of expression—வெளியீட்டுச் சுதந்திரம்.

Liberty of faith—சமய சுதந்திரம்.

Liberty of thought—சிந்தனைச் சுதந்திரம்.

Liberty of worship—வழிபாட்டுச் சுதந்திரம்.

Library—நூலகம்.

Licence—உரிமம்.

Licensee—உரிமம்பெறுநர் ; உரிமம்பெறுபவர்.

Licensing authority—உரிமம் வழங்கும் அதிகாரஆயம் ; உரிமம் வழங்கும் அதிகாரம்.

Licensor—உரிமம்வழங்குநர் ; உரிமம் வழங்குபவர்.

Lie, appeal shall–மேல்முறையீடு செய்வதற்குரியதாகும்.

Lie, no action shall—எந்த நடவடிக்கையும் தொடரப்படுதல் ஆகாது.

Lie, no suit shall—ஒரு வழக்கும் தொடர்தல் ஆகாது; ஒரு வழக்கும் போடுதல் ஆகாது.

Lien—பற்றுரிமை.

Life-convict—ஆயுட்கைதி; ஆயுட்சிறைக் கைதி.

Light-house—கலங்கரை விளக்கம்; விளக்கு மண்டபம்.

Light-ship—விளக்குக் கப்பல்.

Like cases—அதேபோன்ற சந்தர்ப்பங்கள்.

Like period— அதேபோன்ற காலஅளவு; ஒத்த காலஅளவு.

Likelihood of causing death—சாவை அநேகமாக உண்டாக்கக்கூடியநிலை.

Likely—அநேகமாக.

Likely to endanger—அநேகமாக ஆபத்தை விளைவிக்கக்கூடிய.

Limit—எல்லை; கட்டுப்படுத்து; வரம்பு: வரம்புகட்டு.

Limit the extent of the provisions—வகைமுறைகளின் வீச்சைக் கட்டுப்படுத்து.

Limitation—காலவரம்பு; காலாவதி; வரம்பு; வரையறை.

Limitation for taking cognizance of a case—ஒரு வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கான காலவரம்பு.

Limitation of jurisdiction—அதிகார வரம்பின் வரையறை.

Limited interest—வரம்புடை பாத்தியதை.

Limited interest and absolute interest—வரம்புடை பாத்தியதையும் வரம்பிலாப் பாத்தியதையும்.

Limited period-குறுகிய காலம்; வரம்புக்குட்பட்ட காலம்.

Limits of variability--வேறுபடும் தன்மையின் வரம்புகள்.

Line ofcommunication—செய்தித்தொடர்பு போக்குவரத்துப்பாதை.

Line of navigation—கப்பல் பாதை.

Lineal descendant—நேர்வழிச் சந்ததி.

Lingayat—லிங்காயத்.

Linguistic diversities—மொழிவேற்றுமைகள்.

Linguistic minority—மொழிச் சிறுபான்மையினர்.

Liquid—திரவம்.

Liquidator—கலைப்பாளர்.

Liquor--மது.

List—பட்டியல்.

List, Concurrent-பொதுப்படைப் பட்டியல்.

List, State—மாநிலப் பட்டியல்.

List, Union—ஒன்றியத்துப் பட்டியல்.

Literature, medical—மருத்துவப் பிரசுரங்கள்.

Lithographed—கல்லச்சு முறையில் தயாரிக்கப்பட்ட.

Livelihood—ஜீவனோபாயம்.

Live-stock—கால்நடை.

Living in adultery— கற்புப்பிறழ்ந்தநிலையில் வாழ்தல்.

Living person —உயிருடன் உள்ளவர்.

Living creature—உயர்வாழ் பிராணி; உயிரினம்.

Living quarters—வசிக்குமிடம்.

Living wage—பிழைப்புக்குப் போதிய கூலி.

Loading—சரக்கு ஏற்றுதல்.

Loan—கடன்.

Loathsome disease—அருவருக்கத் தக்க வியாதி

Local area—வட்டாரப் பிரதேசம்.

Local authority—தல நிர்வாகம்; வட்டார அதிகாரஆயம் ; வட்டார அதிகாரி.

Local Board—உள்ளாட்சி மன்றம்; வட்டார வாரியம்.

Local body—உள்ளாட்சி அமைப்பு.

Local cadre—வட்டாரப் பணிமுறைப்பிரிவு.

Local expressions—வட்டாரச் சொற்கள்.

Local fund—வட்டார நிதியம்.

Local Government—வட்டார ஆட்சி.

Local inquiry—தல விசாரணை.
Local inspection—தல ஆய்வு; தல விசாரணை.
Local jurisdiction—வட்டார அதிகார வரம்பு.
Local law—வட்டாரச் சட்டம்.
Local limit—வட்டார எல்லை.
Local nuisance—தலத் தொல்லை.
Local police—உள்ளூர்க் காவல் துறையினர்.
Local purposes—வட்டாரக் காரியங்கள்.
Local self-government—வட்டார சுய ஆட்சி.
Local treasury—வட்டாரக் கருவூலம்.
Locality—தலம் ; வட்டாரம்.
Lodging—உறைவிடம் ; தங்குமிடம்.
Lodging house—தங்கும் விடுதி.
Loiter—உலாவித்திரி.
Loose character—ஒழுக்கங் கெட்டவர்.
Lose—இழந்துவிடு.
Loss—இழப்பு ; நஷ்டம்.
Lot—குலுக்குச்சீட்டு.
Lottery—அதிருஷ்டச்சீட்டு ; பரிசுச்சீட்டு.
Lunacy—பித்துநிலை.
Lunatic—பித்தர்.
Lunatic asylum—பித்தர் காப்பகம்.
Lurking—பதுங்குதல்.
Lurking house-tresspass—பதுங்கி வீட்டினுள் அத்துமீறிநுழைதல்.
Luxuries—சொகுசுப்பொருள்கள்.

# M

Made over—ஒப்படைக்கப்பட்டது.

Made over to him, case—அவருக்கு மாற்றி அனுப்பப்பட்டுள்ள வழக்கு.

Magazine—பத்திரிகை.

Magistrate—நடுவர்.

Magistrate of the First Class—முதல் வகுப்பு நடுவர்.

Magistrate of the Second Class—இரண்டாவது வகுப்பு நடுவர்.

Magistrate shall proceed with the case—நடுவர் வழக்கை மேல்நடத்துதல் வேண்டும்.

Magnitude—பரிமாணம்.

Maim—ஊனப்படுத்து.

Mainly—பெரும்பாலும்.

Maintain—பேணு.

Maintainable, no civil suit shall be—உரிமை வழக்கு எதுவும் செல்லத்தக்கதாகாது.

Maintainable, not—செல்லத்தக்கதாகாது.

Maintaining order—ஒழுங்கு பேணுதல்.

Maintenance—பராமரித்தல் ; பராமரிப்பு ; பேணுதல்; வைத்துவருதல்; ஜீவனாம்சம்

Maintenance and audit of accounts—கணக்குகளை வைத்துவருதலும் தணிக்கை செய்தலும்.

Maintenance of discipline—கட்டுப்பாடு பேணுதல்.

Manitenance of harmony—ஒற்றுமை பேணுதல்.

Maintenance of essential supplies and services—இன்றியமையாப் பொருள் வழங்கீட்டையும் ஊழியங்களையும் பேணுதல்.

Maintenance of Internal Security Act—உள்நாட்டுப் பாதுகாப்புப் பராமரிப்புச் சட்டம்.

Maintenance of order by citizens—குடிமக்கள் ஒழுங்கைப் பேணுதல்.

Maintenance of order by police—காவலர் ஒழுங்கை நிலைநாட்டுதல்.

Major—முதிர்வர்.

Major port—பெருந் துறைமுகம்.

Majority—பெரும்பான்மை; முதிர்மை.

Majority, Minor attained—இளையர் முதிர்மை எய்தினார்.

Majority of total members—மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மை.

Make a declaration—ஒரு விளம்புகை செய்.

Make a report—ஓர் அறிக்கை கொடு.

Make any document—பத்திரம் எதனையும் தயார் செய்.

Make it over for the disposal of a Magistrate—நடுவருக்கு அதைத் தீர்த்து வைப்பதற்காக மாற்றி அனுப்பு.

Make law—சட்டம் இயற்று.

Make over—ஒப்படை ; மாற்றியனுப்பு.

Make rules—விதிகளைச் செய்.

Making oath—பிரமாணம் செய்தல்.

Making order உத்தரவு பிறப்பித்தல்.

Making order absolute—கட்டளையை உறுதி செய்தல்.

Making over arrested person—கைதுசெய்யப் பட்டவரை ஒப்படைத்தல்.

Making provision for disposal of application—விண்ணப்பத்தைத் தீர்த்துவைக்க ஏற்பாடு செய்தல்.

Making representation—முறையீடு செய்தல்.

Male—ஆண்.

Male line—ஆண்வழி.

Malice—வன்மம்.

Maliciously—வன்மமாக.

Maliciously laying information-வன்மத்துடன் தகவல் கொடுத்தல்.

Malignant act—கொடுங்குரோதச் செயல்.

Malignantly—கொடுங்குரோதத்துடன் : துவேஷத்துடன்.

Man—ஆடவன்.

Man of business—விவகாரம் தெரிந்தவர்.

Manage—ஆளுகைசெய் ; நிர்வகி ; மேலாண்மை செய்.

Management—ஆளுகை ; நிர்வாகம் ; மேலாண்மை.

Management of industries—தொழில் நிர் வாகம்.

Manager—மேலாளர்.

Managing agent—மேலாண்மை முகவர்.

Managing director-மேலாண்மை இயக்குநர்.

Mandamus, writ of—' செய்திடுக ' என் னும் நீதிப்பேராணை.

Mandatory injunction—வலியுறுத்துக் கட்டளை.

Manifestly—வெளிப்படையாக.

Manipulator—உருட்டுப் புரட்டுச் செய்பவர்.

Manner—முறை.

Manner specified therein—அதில் குறித் துரைக்கப்பட்ட முறையில்.

Manners, customs and—பழக்க வழக்கங்கள்.

Manufactory—உற்பத்தி செய்யுமிடம் ; தொழிற்கூடம்.

Manufacture—உற்பத்தி.

Manufactured drug—உற்பத்தி செய்யப் பட்ட மருந்துச் சரக்கு.

Manufactured products—தயாரிக்கப்பட்ட பொருள்கள்.

Manufacturer—உற்பத்தியாளர்.

Manufacturing cost - உற்பத்திச் செலவு.

Map – புவிப்படம்.

Mare—பெண் குதிரை.

Marine hospital—கடல்துறை மருத்துவ மனை.

Maritime jurisdiction—நெய்தலியல் அதிகார வரம்பு.

Maritime shipping—நெய்தல் பிரதேசக் கப்பல்கள்.

Maritime zone – நெய்தல் மண்டலம்.

Mark—அடையாளக்குறி ; குறி.

Market-place - சந்தை கூடுமிடம்.

Market price—சந்தை விலை.

Market value—சந்தை விலைமதிப்பு.

Marriage—திருமணம்.

Martial law—இராணுவச் சட்டம்.

Master—எஜமானர்.

Master of the Mint—அக்கசாலைத் தலைவர்.

Master of Vessel—கப்பல் முதல்வர்.

Material—பொருள்; முக்கியமான பொருள்; மூலப்பொருள்.

Material and moral abandonment of children—பொருளாதாரப் பொறுப்பினின்றும் அறநெறிப் பொறுப்பினின்றும் குழந் தைகள் கைவிடப்படுதல்.

Material error—சாராம்சமான பிழை ; பொருட்டுள்ள பிழை.

Material evidence—சாராம்சமான சாட்சி யம்; தொடர்புள்ள சாட்சியம்; பொருட் டுள்ள சாட்சியம் ; முக்கியமான சாட் சியம்.

Material fact—முக்கியமான சங்கதி.

Material object—சான்றுப் பொருள்.

Material particulars—முக்கியமான விவரங்கள்.

Material point—முக்கியமான அம்சம்.

Material resources—பொருள்வள வசதிகள்.

Material thing—ஸ்தூலப் பொருள்.

Material witness—முக்கியமான சாட்சி.

Maternity benefits—பேறுகாலச் சலுகைகள்.

Maternity purposes—பேறுகாலக் காரணங் கள்.

Maternity relief—பேறுகால உதவி.

Matrimonial jurisdiction—மணவியல் அதிகார வரம்பு.

Matter—காரியம் ; பொருள் ; விஷயம்.

Matter of education, in the—கல்வி விஷயத்தில்.

Matter of fact—சங்கதி சம்பந்தமான விஷயம் ; சங்கதி பற்றிய விஷயம் (சங்கதி விஷயம்).

Matter of law—சட்ட விஷயம்.

Matter of procedure—நடைமுறை விஷயம்.

Matter of Sate—அரசு காரியம்.

Matters administrative or executive in nature—நிர்வாகத்துறை அல்லது செயலாட்சித் தன்மையினவான விஷயங்கள்.

Matters connected therewith—அதனுடன் சம்பந்தப்பட்ட விஷயங்கள்.

Matters of general interest—பொது அக்கறைக்குரிய விஷயங்கள்.

Matters pertaining to appeals—மேல் முறையீடுகள் சம்பந்தப்பட்ட விஷயங்கள்.

Matters which involve the appreciation of evidence—சாட்சிய மதிப்பீட்டை உள்ளடக்குவதாகவுள்ள விஷயங்கள்.

Maturity—முதிர்வடையும் காலம்.

Maturity, on its—அது முதிர்வடையுங்கால்.

Maxims—சூத்திரங்கள்.

Maximum—அதிகபட்சம் ; உயர்ந்த பட்சம்.

Maximum limit—அதிகபட்ச வரம்பு.

Maximum period of imprisonment—சிறைவாசத்தின் உயர்ந்தபட்ச காலஅளவு.

Maximum rate—உயர்ந்தபட்ச வீதம்.

May be delivered—ஒப்படைக்கப்படலாகும்.

May presume—அனுமானிக்கலாம்.

May think proper—முறை எனக் கருதலாம்.

May use all means necessary to effect arrest—கைதுசெய்வதை நிறைவேற்ற அவசியமான எல்லா உபாயங்களையும் மேற்கொள்ளலாம்.

Meaning—அர்த்தம் ; பொருள்.

Meaning assigned to it—அதற்கு அளிக்கப்பட்டுள்ள அர்த்தம்.

Meaning assigned to words—சொற்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அர்த்தம்/பொருள்

Means — உபாயங்கள் ; சாதனங்கள்; வழிகள் ; பொருள்படும் .

Means and includes—பொருள் தந்து உள்ளடக்குகிறது.

Means of communications—செய்தித் தொடர்பு/போக்குவரத்துச்சாதனங்கள்.

Means of conveyance—வாகன வசதி.

Means of knowing—அறியும் வழி.

Means of living—வாழும் வழி.

Means of production—உற்பத்திச் சாதனங்கள்.

Meant to be sold—விற்பனை செய்யக் கருதப்பட்டது.

Measure—அளவை; ஏற்பாடு; நடவடிக்கை.

Measure of length or capacity—நீட்டல் அளவை அல்லது கொள் அளவை.

Mechanical process—எந்திரச் செய்முறை.

Mechanically propelled vessel—எந்திர முறையில் உந்தப்படும் கலம்.

Medical Council—மருத்துவப் பேரவை.

Medical evidence—மருத்துவச் சாட்சியம்.

Medical inspection—மருத்துவப் பரிசோதனை.

Medical journal—மருத்துவப் பத்திரிகை.

Medical officer—மருத்துவ அலுவலர்.

Medical practitioner—மருத்துவத் தொழிலாற்றுநர் ; மருத்துவத் தொழிலாற்றுபவர்.

Medical preparation—மருத்துவத் தயாரிப்பு.

Medical profession—மருத்துவத் தொழில்.

Medicinal purpose—மருந்தியல் நோக்கம்.

Medium of expression—வெளியீட்டுக்கான சாதனம்.

Meeting the expenses of the accused—எதிரிக்கு ஏற்படக்கூடிய செலவுகளை ஏற்றல்.

Meeting the requirements—தேவைகளைப் பூர்த்தி செய்தல்.

Member—உறுப்பினர்.

Member, privation of — உடலுறுப்பைச் சிதைத்தல்.

Members of armed forces—ஆயுதப்படை உறுப்பினர்கள்.

Members of medical staff—மருத்துவத்துறை உறுப்பினர்கள்.

Membership—உறுப்பினர் பதவி.

Memorandum—குறிப்பு; பதிவுக்குறிப்பு ; விவரக்குறிப்பு; விளக்கக்குறிப்பு .

Memorandum book—விவரக் குறிப்பேடு.

Memorandum of appeal—மேல்முறையீட்டு விவரக்குறிப்பு.

Memorandum of arguments—வாதங்களின் குறிப்பு.

Memorial—நினைவுச்சின்னம் ; பொது விண்ணப்பம் ; மனு.

Memorialist—பொதுவிண்ணப்பதாரர் ; மனுதாரர்.

Men and women—ஆடவரும் பெண்டிரும் ; ஆண்களும் பெண்களும்.

Mental condition of which any one is conscious—எவரேனுமொருவரின் உணர்வுக்குத் தெரிகிற மனநிலை.

Mental deficiency—மனக்கோளாறு.

Mentioned—குறிப்பிடப்பட்ட ; சொல்லப்பட்ட.

Mercantile marine—வணிகக் கப்பலோட்டி.

Mercantile usage—வணிக வழக்காறு.

Merchandise—வாணிபச் சரக்கு.

Merchandise mark—வாணிபச்சரக்குக் குறி.

Merchant vessel—வாணிகக் கப்பல்

Merely on the ground of religion—சமயம் என்ற காரணத்தின் பேரில் மட்டுமே.

Merged territory—இணைந்துவிட்ட மண்டலம்.

Merger—இணைப்பு.

Merit—தகுதி ; திறமை.

Message—செய்தி.

Message, telegraphic—தந்திச் செய்தி.

Metal Tokens Act—உலோக அடையாள வில்லைகள் சட்டம்.

Metallic badge—உலோக வில்லை.

Meteorological organisations — வானிலை ஆராய்ச்சி அமைப்புகள்.

Method—முறை.

Methodical—முறையாக.

Metropolitan area—பெருநகர்ப் பகுதி/ பிரதேசம்.

Metropolitan Magistrate—பெருநகர் நடுவர்.

Migration, emigration and immigration—வலசை பெயர்தல், வலசை போதல், வலசை வருதல்.

Migratory tribe—வலசை பெயரும் பழங்குடியினர்.

Milch cattle—கறவை மாடுகள்.

Military—இராணுவம்.

Military force—தரைப்படை.

Milk powder—பால் பொடி.

Mine—சுரங்கம்.

Mineral development—கனிம/கனிப்பொருள் அபிவிருத்தி.

Mineral oils—கனிம எண்ணெய்கள்.

Mineral pigment—தாதுப்பொருள்களாலான வண்ணமூட்டும் பொருள்.

Mineral right—கனிம உரிமை.

Minerals—கனிப்பொருள்கள்.

Mining settlement authorities—சுரங்கக் குடியேற்ற அதிகாரஆயங்கள்.

Minimum—குறைந்தபட்சம்.

Minimum number — குறைந்தபட்ச எண்ணிக்கை.

Minitster—அமைச்சர்.

Ministerial—அலுவலகப் பணித்துறை.

Ministerial staff.—அலுவலகப் பணியாளர் தொகுதி.

Minor—இளையர்.

Minor offence—சிறு குற்றம்.

Minority—இளைமை.

Minorities—சிறுபான்மையினர்.

Mint—அக்கசாலை; நாணயச்சாலை ; நாணயம் அச்சடிக்கும் சாலை.

Misappropriation—கையாடல் ; கையாடல் செய்தல்.

Misbehaviour—நடத்தைப்பிசகு ; முறைகேடான நடத்தை.

Misbranded—தப்புக்குறியிடப்பட்ட.

Miscarriage of birth—கருச்சிதைவு.

Miscarriage of justice—நீதிச்சிதைவு.

Miscellaneous—பலதரப்பட்டவை ; பலவகைப்பட்டவை.

Mischief—அழிம்பு; அழிம்பு செய்தல்.

Misconception of fact—சங்கதி பற்றிய தப்பெண்ணம்.

Misconduct—கெட்ட நடத்தை; தவறான நடத்தை; நடத்தைக் கேடு.

Misfortune—துர்ப்பாக்கியம்; துரதிர்ஷ்டம்.

Misinforming—தவறான தகவல் தருதல்.

Misjoinder—தப்புச்சேர்க்கை.

Mislead—தவற்றுக்கு உள்ளாக்கு; தவறான வழியில் இட்டுச்செல்; திசைதிருப்பு; வழி தப்பிச் செல்.

Misrepresentation—திரித்துக்கூறுதல்.

Mistake—தவறு.

Mistake in fact—சங்கதி விஷயத்தில் தவறு.

Mistake in law—சட்ட விஷயத்தில் தவறு.

Mistress—வைப்பாட்டி.

Mitigate—மட்டுப்படுத்து.

Mixed food—கலப்பு உணவு.

Mixture—கலவை.

Mob—கும்பல்.

Mobile van—நடமாடும் பெட்டிவண்டி.

Mode—முறை.

Mode of acquisition—ஈட்டும் முறை.

Mode of appointment—நியமன முறை.

Mode of conferring powers—அதிகாரங்களை வழங்குகின்ற முறை.

Mode of life—வாழ்க்கை முறை.

Models—மாதிரிகள்; மாதிரிப்படிவங்கள்.

Modesty, outraging of—மானபங்கம் செய்தல்.

Modification—மாற்றம்; மாற்றியமைத்தல்; மாற்றுதல்; மாறுதல்.

Modifications, supplemental, incidental or consequential—குறையை நிறைவுசெய்கிற, இடைவிளைவாக எழுகிற அல்லது பின்விளைவாக வருகிற மாறுதல்கள்.

Modified form—மாற்றப்பட்ட வடிவம்.

Modified starch—மாற்றியமைக்கப்பட்ட மாச்சத்து.

Modify—மாற்றியமை.

Molasses—சர்க்கரைப் பாகுக்கழிவு.

Molest—தொந்தரவுசெய்; நச்சரி.

Molten state—உருகிய நிலை.

Money Bill—பண மசோதா.

Money due on a bond—பத்திரம் ஒன்றின் பேரில் கொடுபட வேண்டிய பணம்.

Money lender—பணம் கடன்கொடுப்பவர்.

Money lending—பணம் கடன்கொடுத்தல்.

Monopoly—ஏகபோக உரிமை.

Monthly progressive expenditure—படிப்படியாக அதிகரித்து வரும் மாதாந்திரச் செலவு.

Monument—நினைவுச்சின்னம்.

Moored boat—பிணைத்து நிறுத்தப்பட்ட படகு.

Mooring—சீனியிடுதல்.

Moral abandonment—அறநெறிப் பொறுப்பினின்றும் கைவிடுதல்.

Moral character—ஒழுக்கப்பண்பு.

Moral danger, in—ஒழுக்கங்கெடும் அபாயத்திலுள்ள.

Moral influence—நெறியியல் செல்வாக்கு.

Morality—ஒழுக்கநெறி.

Morals—ஒழுக்க நடைமுறை.

Mortal wound—மரணக்காயம்.

Mortgage—அடமானம்.

Mortgagee—அடமானம்பெற்றவர்; அடமானம்பெறுநர்.

Mortgagor—அடமானம் வைத்தவர்; அடமானம் வைக்குநர்.

Moss—பாசி.

Mother tongue—தாய் மொழி.

Motion—தீர்மானம்.

Motion, on his own—அவர் தாமாக முற்பட்டே; அவர் தாமாகவே.

Motion to another, if he causes—அவர் மற்றொருவரை இயக்குவித்தால்.

Motive—உள்நோக்கம்; தூண்டுகோல்.

Mould—பூஞ்சக்காளான்.

Movable property—அசையும் பொருள்/சொத்து.

Move—நகர்த்து.

**Moving a resolution—தீர்மானத்தைக் கொணர்தல்/பிரேரேபித்தல்.**

Moving freely—தங்குதடையின்றிச் சஞ்சரித்தல்.

**Moving the Court—நீதிமன்றத்தை இயக்குவித்தல்.**

**Mule—கோவேறுகழுதை.**

**Multiples—மடங்குகள்.**

Municipal Board—நகராட்சி மன்றம்.
Municipal body—நகராட்சிக் குழு.
Municipal/Corporation—மாநகராட்சி மன்றம்,
Municipality—நகராட்சி.
Munsif, Village—கிராம முன்சீப்.
Murder—கொலை ; கொலை செய்தல்.
Museum—பொருட்காட்சியகம்.
Mustard oil—கடுகு எண்ணெய்.
Muster Roll—ஆஜர்ப் பட்டியல்.
Mutatis Mutandis—அவசியமான மாறுதல்களோடு.
Mutilating—சிதைத்தல்; பங்கப்படுத்துதல்.
Mutiny—கலகம்; படைவீரர்கலகம்.
Mutton fat—ஆட்டுக் கொழுப்பு.
Mutual consent—பரஸ்பர சம்மதம்.
Mutual gain—பரஸ்பர ஆதாயம்.
Muzzle—வாய்மூடி.

# N

Name—பெயர்.
Name of God, in the—கடவுளின் பெயரால்.
Named in it, person—அதில் பெயர்குறிக்கப்பட்ட ஆள்.
Namely—அதாவது; அவையாவன.
Naming a person—ஓர் ஆளை நியமித்தல்.
Narcotic—மயக்கமூட்டி.
Narcotic drug—மயக்கும் மருந்து.
Narcotic substance—உணர்விழக்கச்செய்யும் பொருள்; மயக்கமூட்டும் பொருள்.
Narrative form—வரலாற்று முறை.
Nation—நாட்டுமக்கள்.
National Anthem—தேசிய கீதம்.
National Flag—தேசியக் கொடி.
National Highways—தேசிய நெடுஞ்சாலைகள்.
National importance—தேசிய முக்கியத்துவம்.
National integration—தேசிய ஒருமைப்பாடு.
National interest—தேசிய நலன்.
National library—தேசிய நூலகம்.
National life—தேசிய வாழ்வு.
National service—தேசியப் பணி.
National struggle for freedom—தேசச் சுதந்திரப் போராட்டம்.
National waterways—தேசிய நீர்ப் பாதைகள்.
Nationalisation—தேசியமயமாக்குதல்.
Native State—சுதேச சமஸ்தானம்.
Natural causes—இயற்கைக் காரணங்கள்.
Natural decay—இயல்பான அழிவு.
Natural environment—இயற்கைச் சுற்றுப்புறம்.
Natural events—இயற்கையான நிகழ்ச்சிகள்.
Natural guardian—இயற்கைக் காப்பாளர்.
Natural process—இயற்கை முறை.
Natural varnish—இயற்கை மெருகெண்ணெய்.
Naturalisation—குடியுரிமை வழங்குதல்.
Nature—இயல்பு; தன்மை.
Nature of the act—செய்கையின் தன்மை.
Nature of the offence and the character of the offender—குற்றத்தின் தன்மையும் குற்றவாளியின் குணவியல்பும்.
Naval Discipline Act—கடற்படைக் கட்டுப்பாட்டுச் சட்டம்.
Navigable channel—போக்குவரத்துக்கேற்ற கால்வாய்.
Navigation—கப்பற்பயணம்.
Navigation of vessel—கலம் ஓட்டுதல்; கலம் செலுத்துதல்.
Navigator—மாலுமிகள்.
Navy—கடற்படை.
Nazir—கட்டளையார், நாசர்.
Nazir, Central—மையக் கட்டளையார்.
Near at hand, being—அருகிலிருத்தல்.
Near the time in question, at or—பிரச்சினையிலுள்ள காலத்தில் அல்லது அதற்கு அண்மையில்.

Nearest Police station—மிக்க அருகிலுள்ள காவல் நிலையம்.

Nearly—கிட்டத்தட்ட.

Necessaries—அவசியமானவைகள் ; தேவைகள்.

Necessary—அவசியமான; அவசியமானது.

Necessary or desirable—அவசியமான அல்லது விரும்பத்தக்க.

Need—தேவை.

Needlessly offensive in form, question appearing to the court—வேண்டாத வகையில் துன்புறுத்துவதாக நீதிமன்றத்திற்குத் தோன்றும் கேள்வி.

Neglect—அசட்டைசெய்; புறக்கணி.

Negligence—அசட்டை.

Negligent—அசட்டையாக.

Negotiable instrument—செலாவணிச் சீட்டு.

Negotiate—செலாவணிசெய்.

Neighbourhood —அண்டை; சுற்றுப்புறம்; சுற்று வட்டாரம்.

Neighbouring—அருகிலுள்ள.

Net proceeds—கிடைக்கும் நிகரத் தொகை.

Net sale proceeds—நிகர விற்றுமுதல்.

Neutral material—நொதுமற் பொருள்.

Neutralizer—நொதுமல்நிலையாக்கி.

Newspaper—செய்தித்தாள்.

Newspaper circulating in that place—அந்த இடத்தில் விநியோகத்திலுள்ள செய்தித்தாள்.

Newsprint—பத்திரிகைக் காகிதம்.

Next after—அடுத்துப் பின்பு.

Next following—அடுத்துப் பின்வரும்.

Next higher authority—அடுத்த உயர் அதிகாரஆயம்; அடுத்த உயர் அதிகாரி.

Next in rank—அடுத்த படிபிலுள்ள.

No action shall lie against the Government—அரசாங்கத்திற்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதல் ஆகாது.

No appeal lies or is preferred—மேல் முறையீடு செய்வதற்கு உரிமையில்லை அல்லது அது தாக்கல் செய்யப்படவில்லை.

No longer necessary—இனிமேலும் அவசியமில்லை.

No longer so performed, such service is—அத்தகைய பணி இப்போதெல்லாம் அவ்வாறு செய்யப்படுவதில்லை.

Noble—உன்னதமான.

No particular number of witnesses shall be required for the proof of any fact—ஏதாவதொரு சங்கதியை மெய்ப்பிப்பதற்கு இத்தனை எண்ணிக்கையுள்ள சாட்சிகள் வேண்டுமென்பது இல்லை.

No person shall be eligible—எவரும் அருகதையுடையவர் ஆகார்.

Nomad—நாடோடி.

Nominal roll—பெயர்ப் பட்டியல்.

No previous conviction is proved against him, when—முந்திய தண்டனைத்தீர்ப்பு எதுவும் அவருக்கு எதிராக நிரூபிக்கப்படாதபோது.

No suit shall lie—வழக்கு எதுவும் தொடரப்படுதல் ஆகாது ; வழக்கு எதுவும் போடுதல் ஆகாது.

No provision exists—வகைமுறை எதுவும் இல்லாதிருக்கிறது.

Nominate—நியமனஞ்செய்;பெயர்குறிப்பிடு.

Nominated member—நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்.

Nomination—நியமனம்; நியமித்தல்; பெயர் குறிப்பிடுதல்.

Nominee—நியமிக்கப்பட்டவர்.

Non-acceptance—ஏற்றுக்கொள்ளாமை.

Non-alcoholic beverages—ஆல்க்ககால் அல்லாத பானங்கள்.

Non-attendance—ஆஜராகாதிருத்தல்.

Non-bailable offence—ஜாமீனில் விடாக் குற்றம்.

Non-cognizable case—கைதுசெய்தற்குரியதல்லாத வழக்கு.

Non-cognizable offence—கைதுசெய்தற்குரியதல்லாத குற்றம்.

Non-commissioned officer—ஆணைபெறாத அலுவலர்.

Non-compliance—இணங்காமை.

Non-distilled—காய்ச்சி வடிக்கப்படாத.

Non-existence—இலமை ; இன்மை.

Non-gazetted officer —பதிவு பெறாத அலுவலர்.

Non-Hindi speaking areas—ஹிந்தி அல்லாத மொழி பேசுகிற பிரதேசங்கள்.

Non-official—அலுவல் சார்பற்ற; அலுவல் சார்பற்றவர்.

Non-qualification—தகுதியின்மை.

Non-residence—குடி இராமை.

Normal—சாதாரணமான; வழக்கமான.

Normal duty—சாதாரணமான கடமை.

Normal working hours—வழக்கமான வேலை நேரம்.

Not being an offence—குற்றமாக இல்லாத.

Not below the rank of an Inspector—ஓர் ஆய்வாளரின் நிலைக்குக் குறையாத; ஆய்வாளர் படிநிலைக்குக் குறையாத.

Not chargeable—விதிக்கத்தக்கதாய் இல்லை.

Not exceeding—மேற்படாத.

Not later than seven days—ஏழு நாட்களுக்குப் பிந்தாமல்.

Not less than one-half—பாதிக்குக் குறையாத.

Not more than—மேற்படாத.

Not necessary to frame a formal charge—முறைப்படியான குற்றச்சாட்டொன்றை வனைய வேண்டிய அவசியமில்லை.

Not obeying—கீழ்ப்படியாதிருத்தல்.

Not otherwise—மற்றப்படி இல்லை/கூடாது.

Not proved, fact—நிரூபிக்கப்படாத சங்கதி; மெய்ப்பிக்கப்படாத சங்கதி.

Not reasonably fit for use—புழக்கத்திற்கு நியாயப்படி பொருத்தமற்ற.

Notary public—நோட்டரி பப்ளிக்.

Nothing in this clause shall affect—இந்தக் கூறிலுள்ள எதுவும் பாதித்தலாகாது.

Notice—அறிவிப்பு.

Notice of such Magistrate, where it is brought to the—அது அத்தகைய நடுவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமிடத்து.

Notification—அறிவிக்கை.

Notification issued in pursuance of the foregoing proviso—மேற்கூறிய விலக்கை அனுசரித்து/தொடர்ந்து வெளியிடப்படும் அறிவிக்கை.

Notified area—அறிவிக்கைசெய்யப்பட்ட வட்டாரம்/பிரதேசம்.

Notified area committee—அறிவிக்கைசெய்யப்பட்ட வட்டாரக் குழு.

Notified order—அறிவிக்கைசெய்யப்பட்ட கட்டளை.

Notorious person-கெட்டபெயர் பெற்றவர்.

Notorious receiver or vendor of stolen property—திருட்டுப் பொருளைப் பெறுபவராகவோ விற்பவராகவோ கெட்டபெயர் பெற்றவர்.

Notwithstanding—இருந்தபோதிலும்.

Notwithstanding any law to the contrary—சட்டம் ஏதேனும் இதற்குமாறாக இருந்தபோதிலும்.

Notwithstanding any objection—ஆட்சேபணை ஏதேனும் இருந்தபோதிலும்.

Notwithstanding anything contained in this Act—இந்தச் சட்டத்தில் அடங்கியது எவ்வாறு இருப்பினும் /எப்படி இருந்தாலும்; இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்தபோதிலும்.

Notwithstanding anything hereinbefore contained—இதற்குமுன் இதில் என்ன அடங்கியிருந்த போதிலும்.

Notwithstanding anything to the contrary—இதற்கு மாறாக என்ன இருந்தபோதிலும்.

Notwithstanding anything to the contrary contained in any other law for the time being in force—அவ்வப்போது அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்திலும் இதற்கு மாறாக என்ன இருந்தபோதிலும்.

Noxious—கெட்டுப்போன; கெடுதலான; தீங்குவிளைவிக்கிற.

Nuisance—தொல்லை.

Null and void, becoming—வெறிதாகி விழலாதல்.

Number—எண்.

Number of seats—பதவியிடங்களின் எண்ணிக்கை.

Numeral figures—இலக்க எண்கள்.

Numerous—ஏராளமான.

Nursing home—மருத்துவ இல்லம்.

Nutrition—ஊட்டச்சத்து.

# O

Oath—உறுதிமொழி ; பிரமாணம்.

Oath of secrecy—இரகசியப் பிரமாணம்.

Oath or affirmation by the Governor—ஆளுநரின் பிரமாணம் அல்லது உறுதியுரை.

Obedience to summons, non- attendance by a witness in—ஆஜர்க் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து சாட்சி ஒருவர் ஆஜராகாமை.

Object—நோக்கம் ; பொருள்.

Object of general concern —பொது அக்கறைக்குரிய பொருள்.

Object to—ஆட்சேபணை செய்; மறுத்துரை.

Object, ultimate—இறுதி நோக்கம்.

Objection—ஆட்சேபணை; மறுத்துரைத்தல்.

Objectionable article—ஆட்சேபணைக்குரிய உருப்படி.

Objectionable matter—ஆட்சேபிக்கத்தக்க விஷயம்.

Objector —ஆட்சேபணை செய்பவர்; மறுத்துரைப்பவர்.

Obligation —கடப்பாடு; கடமைப் பொறுப்பு.

Obligations, financial—நிதிக் கடப்பாடுகள்.

Obliged to answer, he is not—அவர் பதில் சொல்லக் கடமைப்பட்டவரல்லர்.

Obligee—கடப்பாடு பெறுபவர்.

Obligor —கடப்பாடுற்றவர்.

Obliterate—அழி.

Obliterating—அழித்தொழித்தல்.

Obscene—ஆபாசமான.

Obscene things—ஆபாசப் பொருள்கள்.

Observance of conditions—நிபந்தனைகளை அனுசரித்தல்.

Observation—கவனிக்கப்படுதல்.

Observe—அனுசரி.

Observe the working of this Act—இந்தச் சட்டம் இயங்குகிற முறையைக் கவனி.

Obsolete—வழக்கொழிந்த.

Obstacles to enter—நுழைவதற்குத் தடங்கல்கள்.

Obstruct—தடு.

Obstruction—இடையூறு ; தடங்கல் ; தடுத்தல்.

Obstructor —தடைசெய்பவர்.

Obtain—பெறு ; முயன்று பெறு.

Obviate—தவிர்த்துவிடு.

Occasion—காலம்; சந்தர்ப்பம்; சமயம்; தருணம்.

Occasion, cause or effect of relevant facts or facts in issue, facts which are the—தொடர்புற்ற சங்கதிகள் அல்லது பிரச்சினையிலுள்ள சங்கதிகள் நிகழ்ந்த தருணமாகவோ, அவற்றுக்குக் காரணமாகவோ அல்லது அவற்றின் விளைவாகவோ உள்ள சங்கதிகள்.

Occasion requires, as—சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு; நிலவரத்திற்கேற்ப.

Occasioned thereby, unless failure of justice has in fact been—அதன் காரணமாக உண்மையிலேயே நீதி தவறியிருந்தாலன்றி.

Occupancy, actual—நேரடி அனுபோகம்.
Occupation—அலுவல்; அனுபோகத்தில் வைத்திருத்தல்; தொழில்; வேலை.
Occupier—அனுபோகதார்.
Occupier of house—வீட்டில் குடியிருப்பவர்.
Occupier of land—நிலத்தின் அனுபோகதார்; நிலத்தைக் கைவசம்வைத்திருப்பவர்; நிலத்தை நேரடிஅனுபோகத்தில் வைத்திருப்பவர்.
Occupier of place—இடத்தின் அனுபோக தார்.
Occupy—குடியிரு.
Occur—காணப்படுகிற.
Occurrence—சம்பவம்; நிகழ்ச்சி.
Offence—குற்றம்.
Offence has been or is being committed—குற்றம் செய்யப்பட்டுள்ளது அல்லது செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது.
Offence, Cognizable—கைது செய்தற்குரிய குற்றம்.
Offence, non-cognizable—கைதுசெய்தற் குரியதல்லாத குற்றம்.
Offences under this Act to be cognizable—இந்தச் சட்டத்தின்படியான குற்றங்கள் கைதுசெய்தற்குரியன.
Offend against public decency—பொதுப் பண்பு நலத்துக்குக் குந்தகம் விளைவி.
Offender—குற்றம்செய்பவர்; குற்றவாளி.
Offender, juvenile—இளங் குற்றவாளி.
Offender, youthful—இளவயதுக் குற்றவாளி.
Offensive—தீங்கு விளைவிக்கக்கூடிய.
Offensive deformity—அருவருக்கத்தக்க அங்கவிகாரம்.
Offensive in form, question appearing to the Court needlessly—வேண்டாத வகையில் துன்புறுத்துவதாக நீதிமன்றத்திற்குத் தோன்றும் கேள்வி.
Offensive weapon—தாக்குதற்குரிய ஆயுதம்.
Offer—அளி; கொடுக்க முன்வருதல்; தருவ தற்கு முனை; முனைதல்; முற்பாடு.
Offer, making an—முனைவு பகர்தல்.
Offer prayers—பிரார்த்தனை செய்.
Offering for sale—விற்பனைக்கு வழங்கு கின்ற.
Offering himself as witness—தாமே சாட்சி யாக முன்வருதல்.
Offering indignity to human corpse—மனிதப் பிரேதத்திற்கு அவமதிப்பு உண்டாக்குதல்.
Offering prayer—பிரார்த்தனை செய்தல்.
Office—அலுவலகம்; பதவி.
Office of distinction—தனிச்சிறப்புள்ள பதவி.
Office of profit—ஊதியம் நல்கும் பதவி.
Office order book—அலுவலகக் கட்டளைப் புத்தகம்.
Officer—அதிகாரி; அலுவலர்.
Officer-in-charge—பொறுப்பு அலுவலர்.
Official—அதிகாரபூர்வமான; அலுவல் முறையான; அலுவலர்.
Official act—உத்தியோகபூர்வமான செய்கை.
Official confidence, in—அலுவல் முறையில் நம்பகமாக.
Offcial duty—அலுவல்முறைக்கடமை.
Official Gazette—அதிகாரபூர்வமான அரசிதழ்.
Official, inferior—அலுவல் முறையில் கீழ் நிலையிலுள்ளவர்.
Official language —ஆட்சி மொழி.
Official purposes—அலுவல்முறைக் காரியங் கள்.
Official records—அலுவலகப் பதிவுக்கட்டு கள்.
Official residence—பதவிக்குரிய குடியிருப் பிடம்/மாளிகை.
Official, superior—அலுவல்முறையில் மேல் நிலையிலுள்ளவர்.
Officially designated—அலுவல்முறையில் பதவிப்பெயர் கொடுக்கப்பட்ட.
Officially recognised—அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட.
Oilcake—பிண்ணாக்கு.
Oil field—எண்ணெய் வயல்.
Old age—முதுமை.
Old age pension—முதுமைப் பருவ ஓய்வூதி யம்.
Omission—செய்யாமை; விடுகை; விடு பட்டுப் போனது.
On account of—பொருட்டு.

On and from such date—அந்தத் தேதி யன்றும் அது முதற்கொண்டும்.

On any ground—எந்தக் காரணத்தின் பேரிலும்.

On any subsequent day—பிந்திய நாளெதிலும்.

On behalf of—(இன்னார்) சார்பில்.

On conviction—குற்றவாளி என்று தீர் மானிக்கப்பட்டதன்பேரில்; தண்டனைத் தீர்ப்பின் பேரில்.

On conviction before a Magistrate—ஒரு நடு வரால் குற்றவாளி எனத் தீர்மானிக்கப் பட்டதன் பேரில்.

On demand being made—கோரிக்கை செய்யப்படுவதன்பேரில்.

On duty—பணி புரிகையில்.

On entering into a bond—ஒரு பத்திரத்தை எழுதிக் கொடுப்பதன்பேரில்.

On first conviction—முதல்முறை தண்டிக்கப் படுவதன்பேரில்.

On giving security—உத்தரவாதம் கொடுப்ப தன்பேரில்.

On his own bond, releasing—அவரது சொந் தப் பத்திரத்தின்பேரில் விடுவித்தல்.

On his own initiative—அவர் தாமே முனைந்து.

On his own motion—அவர் தாமாகவே; அவர் தாமாக முற்பட்டு.

On peril of penalty—தண்டத்திற்கு உள்ளாக வேண்டியிருக்கும் என்ற நிலையில்.

On probation of good conduct—நன்னடத் தைக் கண்காணிப்பில்.

On receipt of—பெறுவதன்பேரில்.

On such date as the Government may, by notification, appoint—அறிவிக்கை மூலமாக அரசாங்கம் குறிப்பிடலாகும் நாளிலிருந்து.

On the date of hearing—விசாரணைத் தேதியில்.

On the face of it—அதன் வெளித்தோற்றத் திலிருந்தே; அதைப் பார்த்த மாத்திரத் திலேயே.

On the ground—காரணத்தின்பேரில்.

On the spot of occurrence—நிகழ்ச்சி நடந்த இடத்திலேயே.

Onerous—பளுவான.

Onerous responsibility—கடுமையான அல்லது பளுவான பொறுப்பு.

One who does not appear in public—வெளியில் முகங்காட்டாத ஒருவர்.

Onus as to proof—நிரூபிக்கும் சுமை; மெய்ப்பிக்கும் பொறுப்பு.

Open court, in—நீதிமன்றத்தில் பகிரங்க மாக; நீதிமன்றப் பொதுவில்.

Opening the case—வழக்கைத் தொடங்கி வைத்தல்.

Open to public—பொதுமக்களுக்குத் திறந்து வைக்கப்பட்டிருக்கிற.

Operate as a dissolution of the House, shall—அந்த அவையினைக் கலைத்த விளைவை உண்டாக்கும்.

Operate, shall cease to—அமலற்றுப்போகும்.

Operation—அளாவுகை; இயங்குதல்; செயற்படுதல்; செயற்பாடு; நட வடிக்கை.

Operation, in—செயற்பாட்டிலிருக்கிற.

Operative part—செயற்படு பகுதி.

Operative part of the judgment, reading out the—தீர்ப்பின் செயற்படு பகுதியைப் படித்துக் காட்டுதல்.

Opinion—அபிப்பிராயம்; கருத்து.

Opium—அபின்.

Opponent—எதிர்ப்பவர்.

Opportunity—வாய்ப்பு.

Opportunity of being heard—கேட்கப்படு வதற்கு வாய்ப்பு; கேள்வி வாய்ப்பு.

Option—தெரிவு; தெரிவுரிமை.

Option, at his—அவரது தெரிவிற்கேற்ப.

Option, right of—தெரிவுரிமை.

Oral arguments—வாய்மொழி வாதங்கள்.

Oral evidence—வாய்மொழிச் சாட்சியம்; வாய்மொழியான சாட்சியம்.

Orally—வாய்மொழியாக.

Order—உத்தரவு; ஒழுங்கு; கட்டளை; வரிசைமுறை.

Order, law and—சட்டமும் ஒழுங்கும்.

Order made in writing—எழுத்து மூலமான கட்டளை.

Order of acquittal—விடுதலை உத்தரவு; விடுதலைக் கட்டளை, விடுதலைத்தீர்ப்பு.

Order of confirmation—உறுதிப்படுத்தும் கட்டளை.

Order of production and examination of witnesses—சாட்சிகளை ஆஜர்ப்படுத்து வதற்கும் விசாரிப்பதற்குமான வரிசை முறை.

Ordinance—அவசரச் சட்டம்.

Ordinary course of human conduct—மானுட நடத்தையின் சாதாரணப் போக்கு.

Ordinarily resident—சாதாரணமாகக் குடியிருந்து வருகிற.

Ordinary course of nature—இயற்கை நிகழ்ச்சிகளின் சாதாரணப் போக்கு.

Ordinary course of public and private business—பொதுத்துறை, தனியார்துறை ஆகியவற்றின் நடவடிக்கைகளின் சாதாரணப் போக்கு.

Ordinary course of post—சாதாரண அஞ்சல் நடப்புமுறை.

Ordinary functions—சாதாரணமான அலுவல்கள்.

Ordinary original civil jurisdiction—சாதாரண அசல் உரிமைவழக்கு அதிகார வரம்பு.

Organisation—அமைத்தல்; அமைப்பு; நிர்மாணம்.

Organise—ஏற்பாடு செய்.

Origin—பூர்வீகம்.

Original jurisdiction—அசல் அதிகார வரம்பு.

Original offence—மூலக் குற்றம்.

Original order—மூல உத்தரவு.

Originally—ஆதியில்.

Originally enacted—ஆதியில் இயற்றப்பட்ட.

Originally in the possession of any party—ஆதியில் தரப்பினர் எவரின் அனுபோகத்தில்.

Originals—அசல்கள்.

Originate, may—தொடங்கப் பெறலாம்.

Ostensible—வெளிப்படையாகத் தோன்றுகிற; வெளிப்படைத் தோற்றத்தில்.

Other—இதர; பிற; பிறிது; மற்ற; வேறு.

Other contingencies—எதிர்பாராத வேறு சந்தர்ப்பங்கள்.

Other matters as may be prescribed—நிர்ணயிக்கப்படலாகும் வேறு விஷயங்கள்.

Other members of the public—பொது மக்களில் பிறர்.

Other persons placed under his supervision—அவரது கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ள வேறு ஆட்கள்.

Other than—அல்லாத வேறு.

Other than a High Court—ஓர் உயர் நீதிமன்றம் அல்லாத.

Otherwise—மற்றப்படி; வேறெது; வேறு விதமாக.

Otherwise has directed, unless the High Court—உயர்நீதிமன்றம் வேறுவிதமாக உத்தரவிட்டிருந்தாலன்றி.

Otherwise relevant—மற்றப்படி தொடர்புடைய.

Otherwise than in accordance with the conditions—நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையல்லாத வேறுவகையில்.

Otherwise than in accordance within such rules—அத்தகைய விதிகளின்படி அல்லாமல் மற்றப்படி.

Otherwise than on police report—காவலறிக்கையின் பேரிலல்லாமல்.

Ought to be awarded—அளிக்கப்பட வேண்டிய.

Out of reach of the process of the Court—நீதிமன்றத்தின் நீதிமுறைக் கட்டளைக்கு எட்டாத நிலையிலுள்ள.

Outbreak—திடீர்த்தோற்றம்.

Outbreak of epidemic—கொள்ளை நோயின் திடீர்த்தோற்றம்.

Out-house—புறவீடு.

Out-let—செல்வாயில்.

Out-patient—புறநோயாளி.

Outrage—பங்கப்படுத்து.

Outrage her modesty, intent to—அவளுடைய மானத்திற்குப் பங்கமேற்படுத்தும் உட்கருத்துடன்.

Outraging modesty of a girl—ஒரு பெண்ணை மானபங்கப்படுத்துதல்.

Outraging the religious feelings of any class-ஒரு வகுப்பினரின் மத உணர்வுகளைத் திடுக்கிடும்வகையில் புண்படுத்துதல்.

Outstanding debt—இன்னும் கொடுபடாதிருக்கிற கடன்.

Over and above any other penalty to which he may be liable—அவர் உள்ளாகக்கூடிய வேறெந்தத் தண்டனையோடுங்கூட.

Overriding—மீதூர்ந்தியங்குதல்.

Overriding effect of the Act—சட்டத்தினுடைய மீதூர்ந்தியங்கும் தன்மை.

Overruling—நிராகரித்தல்.

Overawe—பேரச்சம் விளைவி.

Overcrowded—நெரிசலாகவுள்ள.

Overload—மீறுபாரம்.

Overloaded—மீறுபாரமேற்றிய.

Override—மீதூர்ந்தியங்கும்.

Override other laws, this Act will—இந்தச் செய்சட்டம் மற்றச் சட்டங்களின் மீதூர்ந்தியங்கும்.

Overstaying of leave—விடுப்பை மிஞ்சித் தங்குதல்.

Overthrowing by force—வன்முறையில் கவிழ்த்தல்.

Owner—உரிமையாளர் ; சொந்தக்காரர்.

Ownership—உடைமை ; சொந்தம்.

Ownership of land—நிலத்தின் உடைமை.

# P

Package—சிப்பம்.

Packing—கட்டுக்கட்டி வைத்தல்; கட்டுவதற்குப் பயன்படுத்தும் பொருள்; பொதிந்துவைத்தல்.

Paid employment—சம்பளமுள்ள வேலை.

Paid officer—சம்பள அலுவலர்.

Palm tree—ஈச்ச மரம்.

Pamphlet—துண்டுப்பிரசுரம்; துண்டு வெளியீடு.

Panel of names—பெயர்ப் பட்டியல்.

Parmount—மிக முக்கியமான.

Paramour—சோரநாயகன்; சோரநாயகி.

Parcel—கட்டு.

Parcel, postal—அஞ்சல் கட்டு.

Pardon, tendering—மன்னிப்பு நல்குதல்.

Parentage—பெற்றோர் பற்றிய விவரம்.

Parity—சமானநிலை.

Parliament—நாடாளுமன்றம்.

Parliamentary constituency—நாடாளுமன்றத் தேர்தல் தொகுதி.

Parole, on—வாய்மொழி உறுதியின் பேரில்.

Parsi—பார்சி.

Partial Boarding—பகுதிவேளைச் சாப்பாடு.

Participants—பங்கு கொள்வோர்; பங்கேற்போர்.

Participate—பங்குகொள்.

Participation—பங்கு கொள்ளுதல்.

Particular day—குறிப்பிட்ட நாள்.

Particular, in—குறிப்பாக.

Particulars—விவரங்கள்.

Particulars of offence—குற்றத்தின் விவரங்கள்.

Parties—தரப்பினர்கள்.

Parties to contract—ஒப்பந்தத்தின் தரப்பினர்கள்.

Parties to litigation—வழக்கின் தரப்பினர்கள்.

Parties to marriage—திருமணத்தின் தரப்பினர்கள்.

Parties to marriage had no access to each other— தமக்குள் உடல் உறவு கொள்ளும் வாய்ப்பு திருமணத்தின் தரப்பினருக்கு இல்லாமலிருந்தது.

Partition—பிரிவினை.

Partners—கூட்டாளிகள்.

Partnership—கூட்டாண்மை; கூட்டு.

Partnership firm—கூட்டு நிறுவகம்.

Party—கட்சி; தரப்பினர்; தரப்பு.

Pass—அனுமதிச் சீட்டு; பிறப்பி.

Pass an order admitting or rejecting it—அதை அனுமதித்து அல்லது நிராகரித்துக் கட்டளை ஒன்றைப் பிறப்பி.

Passed or made—இயற்றப்பட்ட அல்லது செய்யப்பட்ட.

Passenger—பயணி.

Passing an Act—ஒரு சட்டத்தை இயற்றுதல்.

Passing by deed, land—நிலம் ஆவணத்தின் மூலம் கைமாறுதல்.
Passing of coin—நாணயத்தைப் புழங்கவிதல்.
Passing of property—சொத்து இறங்குதல்.
Passing of sentence—தண்டனை வழங்குதல்.
Passing out—வெளியேறும்.
Passport—பயணப்பட்டயம்.
Pasteurised—கிருமி நீக்கப்பட்ட.
Pastries—பணியாரங்கள்.
Patent—புனைவுரிமை.
Patent, Letters—புனைவுரிமைப் பட்டயம்.
Patentee—புனைவுரிமையாளர்.
Pawn—அடகு; அடகுப்பொருள்; ஈடு வைத்தல்; கொதுவை.
Pawnee—ஈடுபெறுநர்.
Pawnor—ஈடுவைக்குநர்.
Pay—ஊதியம்.
Pay of Government, person in the—அரசாங்கத்திடம் சம்பளம் வாங்குபவர்.
Pay to the holder—உடையவருக்குக் கொடு
Pay out—செலவழி.
Payable—செலுத்தப்படவேண்டிய ; செலுத்தத்தக்க.
Payee—செலுத்தப்படுநர்.
Payer—செலுத்துநர்.
Payment—செலுத்தம்.
Payment of moneys—பணத்தைச் செலுத்துதல்/போடுதல்.
Payment of Wages Act.—கூலி கொடுத்தல் சட்டம்.
Payment of remuneration—ஊதியம் கொடுத்தல்.
Payments—செலுத்தப்பட வேண்டிய தொகைகள்; செலுத்தங்கள்.
Payments were made, how many—எத்தனை செலுத்தங்கள் செய்யப்பட்டன.
Peace, progress and good government—அமைதி, முன்னேற்றம் மற்றும் நல்லரசாங்கம்.
Peace to keep—அமைதி காப்பதற்கு; அமைதி பேணுவதற்கு.
Peace with the Government of India, in—இந்திய அரசாங்கத்துடன் சமாதான உறவு கொண்டுள்ள.
Peculiar sense—சிறப்பான பொருள்; தனிப்பட்ட பொருள்.
Pecuniary advantage—பணமதிப்புள்ள அனுகூலம்.
Pecuniary bias—பணமுறையிலான மனச்சாய்வு.
Pecuniary extent of liability—கடப்பாட்டின் பணவரம்பு.
Pecuniary gratification—பணமாகக் கொடுக்கும் கைக்கூலி.
Pecuniary interest—நிதி நலன்.
Pecuniary penalty—பணத்தண்டம்.
Pecuniary resources—நிதிவள வசதிகள்.
Pedigree—கொடிவழி.
Peel oil—பழத்தோல் எண்ணெய்.
Penal code—தண்டனைச் சட்டம்.
Penal provision—தண்டனை வகைமுறை.
Penalty—தண்டம் ; தண்டனை.
Pending—நடப்பிலிருக்கிற.
Pending before a Magistrate—ஒரு நடுவர் முன்னிலையில் நடப்பில் இருக்கின்ற.
Pending disposal of appeal—மேல்முறையீடு முடிவு செய்யப்படும் வரை.
Pending enquiry or trial—பரிசீலனை அல்லது விசாரணை நடப்பிலிருக்குங்கால்.
Pending suit—நடப்பிலிருக்கிற உரிமை வழக்கு.
Pending the completion—முற்றுப்பெறாது இருக்கும் வரையில்.
Pending the sanction—ஒப்பளிப்பு வழங்கும் வரையில்.
Pending trial—நடப்பிலுள்ள விசாரணை.
Penetration—நுழைத்தல்; புகுத்தல்.
Pension—ஓய்வூதியம்.
Pension equivalent—ஓய்வூதிய ஈவு.
Per annum—ஆண்டொன்றுக்கு.
Perceiving by senses—புலன்களால் அறிதல்.
Percentage—சதவீதம்.
Peremptory order—முடிவான கட்டளை.
Perform—நிறைவேற்று ; புரி.
Performance—கலை நிகழ்ச்சி; நிறைவேற்றுகை; நிறைவேற்றுதல்; படைப்பு; புரிதல்.
Performance, dramatic—நாடக ஆட்டம்.

Performance of an order, duty, contract etc.—கட்டளை, கடமை, ஒப்பந்தம் முதலியவற்றை நிறைவேற்றுதல்.

Performance of any religious service—சமயப் பணி எதையும் புரிதல்.

Performance of functions—காரியங்களைப் புரிதல்.

Peril—ஆபத்து.

Period—கால அளவு.

Period allowed has expired, until the—அனுமதிக்கப்பட்ட கெடு கழியும் வரையில்.

Period of detention—இருத்தி வைப்புக் காலம்.

Period of limitation —காலவரம்பு; கால வரையறை.

Period of validity of a mortgage—ஓர் அடமானம் செல்லத்தக்கதாக இருக்கும் கால அளவு.

Period of work—வேலைக்காலம்.

Periodical publication—காலாந்தர வெளியீடு.

Periodically—குறிப்பிட்ட காலங்களில்.

Perishable nature—அழியக்கூடிய தன்மை; அழுகக்கூடிய தன்மை.

Perjury—பொய்ச் சாட்சியம் சொல்லுதல்; பொய்ச் சாட்சியம் தருதல்.

Permanent—நிலையான.

Permission—அனுமதி.

Permit—அனுமதி; அனுமதிச் சீட்டு.

Perpetual injunction—நிரந்தர ஏவு கட்டளை.

Perpetual succession—சாசுவதத் தொடர்பாடு.

Perpetual succession and a common seal, the regional council shall have—பிராந்திய மன்றம் சாசுவதத் தொடர்பாட்டையும் பொது முத்திரையொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

Persistently disturbing the proceedings of the Court —பிடிவாதமாகத் தொடர்ந்து நீதிமன்ற நடவடிக்கைகளைக் குலைத்தல்.

Person—ஆள்; ஆள்மை.

Person abetted—உடந்தை கொள்வோர்.

Person acquainted with the circumstances of the case—வழக்கின் விவரங்களைப் பற்றித் தெரிந்துள்ளவர்.

Person concerned—சம்பந்தப்பட்டவர்.

Person holding the post—பதவியை வகிப்பவர்.

Person-in-charge—பொறுப்பிலிருப்பவர்.

Person of a minor—இளையரின் ஆள்மை.

Person or Property—ஆள்மை அல்லது உடைமை.

Person presiding—தலைமை வகிப்பவர்.

Person who was in charge of an ponsible to the company—கம்பெனியின் பொறுப்பைக் கொண்டிருந்தவரும் அதற்குப் பொறுப்பாயிருந்தவருமான ஆள்.

Personal Act—இனமுறைச் செய்சட்டம்.

Personal attendance—நேர்முக வருகை: நேரடி ஆஜர்.

Personal bias, by reason of—தனிப்பட்ட மனச்சாய்வு காரணமாக.

Personal capacity—சொந்த முறையில்.

Personal cleanliness—உடல் தூய்மை.

Personal consumption—சொந்த நுகர்வு.

Personal covenant—ஆள்மைமுறை ஒப்பந்தம்.

Personal influence—சொந்தச் செல்வாக்கு; தனிப்பட்ட செல்வாக்கு.

Personal inquiry—நேரடி விசாரணை.

Personal law—இனமுறைச் சட்டம்.

Personal liberty—ஆட்சுதந்திரம்.

Personal restraint—ஆள் தடுப்பு.

Personal right—சொந்த உரிமை; தனியார் உரிமை.

Personal safety—உடற்பாதுகாப்பு.

Personal service—நேர்முகச் சார்வு.

Personally—நேர்முகமாக.

Personally serving—நேர்முகமாகச் சார்வு செய்தல்.

Personation—ஆள்மாறாட்டம்.

Personnel—பணியாட்கள்.

Pertaining to - சம்பந்தப்பட்ட; சார்ந்த.

Pertaining to administration—நிர்வாகம் சம்பந்தப்பட்ட.

Peruse—பார்வையிடு.

Perverse—ஏறுக்குமாறாக/ன.

Pest—நாசகாரப் பூச்சி.

Pesticides—நாசகாரப் பூச்சிக் கொல்லிகள்.

Petition—மனு.
Petition writer—மனு எழுதுபவர்.
Petroleum—பெட்ரோலியம்.
Petroleum products—பெட்ரோலியப் பொருள்கள்.
Petty offence—சில்லறைக் குற்றம்.
Pharmacist—மருந்து தயாரிப்பாளர்.
Phial—சிறு கண்ணாடிக்குப்பி.
Philanthropic institution—பரோபகார நிறுவனம்.
Philanthropih societies—பரோபகாரச் சங்கங்கள்.
Photograph—புகைப்படம்.
Physical comfort of the community—சமூகத்தின் உடல் நலம்.
Physical fitness certificate—உடல்நிலைத் தகுதிச் சான்றிதழ்.
Physical incapacity—உடல் திறனின்மை.
Physically handicapped—உடல் ஊனமுற்றவர்.
Pick-pocket—முடிச்சவிழ்க்கி; முடிச்சவிழ்ப்பவன்; முடிச்சுமாறி; ஜேப்படி; ஜேப்படிக்காரன்.
Picnic—வனபோஜனம்.
Pigment—வண்ணமூட்டும் பொருள்.
Pilgrimage—தலயாத்திரை.
Piling—அடுக்கி வைத்தல்.
Pimp—கூட்டிக்கொடுப்பவர்.
Piracy—கடற் கொள்ளை; கொள்ளை.
Pistol—கைத்துப்பாக்கி.
Placards—விளம்பரத் தட்டிகள்.
Place—இடம்; நியமி.
Place of birth—பிறப்பிடம்.
Place of business—அலுவல் இடம்.
Place of public entertainment—பொதுக் கேளிக்கை இடம்.
Place of public resort—பொதுமக்கள் புழங்குமிடம்.
Place of worship—வழிபாட்டிடம்.
Place the views before—கருத்துக்களை முன்வை.
Place to which public are admitted—பொதுமக்கள் உட்செல்ல அனுமதிக்கப்படுகிற இடம்.
Placing in confinement—அடைத்து வைத்தல்.
Placing in custody—பாதுகாப்பில் வைத்தல்.
Placing on the table of the House—அவையில் முன்னிடப்படுதல்.
Placing out on licence—உரிமத்தின்பேரில் வெளியே தங்கவைத்தல்.
Plaint—பிராது.
Plan—அமைப்புப் படம்.
Planning—திட்டமிடுகை.
Plantation—தோட்டம்.
Plant—செடி; தாவரம்.
Plant disease—தாவர நோய்.
Plea—கோரிக்கை; வழக்கு; வாது.
Plea of guilty—குற்ற ஒப்புதலுரை.
Plead—வாதிடு.
Pleader—வாதுரைஞர்.
Pleading—வாதுரை.
Pleading guilty—குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல்; குற்றம் செய்ததாக ஒப்புக்கொள்ளல்.
Pleasure of, at the—விருப்பத்தைப் பொறுத்ததாய்.
Pleasure of the Governor, during—ஆளுநருக்கு விருப்பம் உள்ளவரை.
Pleasure grounds—உல்லாசத் திடல்கள்.
Pledge—அடகு; அடகு வை.
Pledgee—அடகு பெறுநர்.
Pledger—அடகு வைக்குநர்.
Plundering—கொள்ளையடித்தல்.
Pocket-money—கைச்செலவுக்கான பணம்.
Point—அம்சம்; பிரச்சினை.
Point bearing upon the case—வழக்குக்குத் தொடர்புடைய அம்சம்.
Point for determination—தீர்மானத்திற்குரிய பிரச்சினை.
Point of fact—சங்கதிப் பிரச்சினை.
Point of law—சட்டப் பிரச்சினை.
Poisoning of food—உணவில் நஞ்சு கலத்தல்.
Poisonous metals—நச்சு உலோகங்கள்.
Poisonous substance—நச்சுப்பொருள்.
Poisons—நஞ்சுகள்.
Police—காவல்; காவல் துறையினர், காவற்படை.

Police establishment—காவல் நிறுவனம்.
Police force, members of—காவற்படை உறுப்பினர்கள்.
Police Commissioner—காவல் துறை ஆணையர்.
Police official—காவல் அலுவலர்.
Police report—காவலறிக்கை.
Policy—கொள்கை.
Policy of Insurance—காப்பீட்டுப் பத்திரம்.
Policy of the State—அரசின் கொள்கை.
Policy, public—பொதுக் கொள்கை.
Polished—மெருகிடப்பட்ட.
Political agent—அரசியல் முகவர்.
Political justice—அரசியல் நீதி.
Polygamy—பன்மை மணம்.
Population—மக்கள்தொகை.
Population control—மக்கள்தொகைக் கட்டுப்பாடு.
Port—துறைமுகம்.
Port authorities—துறைமுக அதிகார ஆயங்கள்.
Port-hole between decks of a ship—கப்பலின் தளங்களுக்கு இடையே உள்ள துளை.
Port quarantine—துறைமுகத்தில் கட்டாய ஒதுக்கிவைப்பு.
Possession—அனுபோகம்; கைவசம்; வசம்; வைத்திருத்தல்; சுவாதீனம்.
Possession, in his—அவருடைய வசத்தில்.
Possibilities and impossibilities—சாத்தியக் கூறுகளும் அசாத்தியக் கூறுகளும்.
Possibility—சாத்தியம்.
Possible—சாத்தியமான.
Possible, as soon as—சாத்தியமான விரைவில்.
Possible, so far as—இயன்ற அளவிற்கு; சாத்தியமாகும் அளவிற்கு.
Post—அஞ்சல்; அலுவல் பதவி; உத்தியோகம்; சாவடி; பதவி.
Post and telegraph—அஞ்சல் (தபால்) தந்தி.
Post office savings bank—அஞ்சலகச் சேமிப்பு வங்கி.
Postal or telegraph authority—அஞ்சல் (தபால்) அல்லது தந்தி அதிகாரி/அதிகார ஆயம்.
Postal service—அஞ்சல் ஊழியம்.
Post-harvest period—அறுவடைக்குப் பிந்திய காலம்.
Post-mark—அஞ்சல் முத்திரை.
Post-mortem examination—பிரேதப் பரிசோதனை.
Posting—பதவி அமர்த்துகை; தபாலில் இடுதல்; ஒட்டுதல்.
Posting the notice in a conspicuous place—அறிவிப்பை எடுப்பான இடத்தில் ஒட்டுதல்.
Postpone—ஒத்திப்போடு; தள்ளிப்போடு.
Potable liquor—குடிப்பதற்குரிய மது.
Pound—பட்டி.
Pound-keeper—பட்டிக் காவல்காரர்.
Power—அதிகாரம்; அரசு; ஆற்றல்; சக்தி.
Power and authority—அதிகாரமும் அதிகார உரிமையும்.
Power at peace with Government of India—இந்திய அரசாங்கத்துடன் சமாதான உறவு கொண்டுள்ள அரசு.
Power of administration—நிர்வாக அதிகாரம்.
Power of attorney—அதிகாரப் பத்திரம்.
Power of Court to implead manufacturer—உற்பத்தியாளர் மீது நடவடிக்கை எடுக்க நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்; உற்பத்தியாளரைத் தரப்பினராகச் சேர்ப்பதற்கு நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.
Power of superintendence—கண்காணிப்பு அதிகாரம்.
Power to make rules—விதிகள் செய்வதற்கான அதிகாரம்.
Power to notify exemptions—விலக்குகளை அறிவிக்கை செய்வதற்கான அதிகாரம்.
Power to review—மறுஆய்வு செய்யும் அதிகாரம்.
Powers and duties assigned to—குறித்தளிக்கப்பட்ட அதிகாரங்களும் கடமைகளும்.
Powers conferred—வழங்கப்பட்ட அதிகாரங்கள்.
Powers of revision—மேலாய்வு அதிகாரங்கள்.
Practicable—செயல்முறைக்கு ஏற்ற; நடைமுறைக்குரிய; பயிற்சிக்குரிய.
Practicable, as far as—நடைமுறையில் இயன்ற அளவுக்கு.

Practicable, as nearly as may be—எந்த அளவுக்கு நடைமுறையில் சாத்தியமாகுமோ அந்த அளவுக்கு.
Practical—நடைமுறையில் சாத்தியமான.
Practical experience—நடைமுறை அனுபவம்.
Practice—நடப்பு ; நடைமுறைப் பழக்கம்.
Practice of profession—தொழில் பயில்வது.
Practise—தொழில் புரி; தொழிலாற்று ; பயில்.
Practised on the accused person, in consequence of deception—குற்றஞ்சுமத்தப் பட்டவரை வஞ்சித்தலின் விளைவாக.
Practising deception—வஞ்சனை புரிதல்.
Praying—வேண்டுதல்.
Preaching—போதித்தல்.
Preaching and practice of untouchability—தீண்டாமையைப் போதிப்பதும் பயில்வதும்.
Preamble—முகப்பு.
Precaution—முன்னெச்சரிக்கை.
Precedent—முற்கோள்.
Precedent, condition—முன் நிபந்தனை.
Preceding—முந்திய.
Preceding section—முந்திய பிரிவு.
Precisely describing what was done—என்ன செய்யப்பட்டது என்பதைத் துல்லியமாக விவரித்தல.
Preclude—தடை செய் ; விலக்கு.
Pre-deceased person—முந்தி இறந்தவர்.
Predecessor Government, its—அதற்குப் பதவி-முன்னைய அரசாங்கம்.
Predecessor in office—பதவியில் முன் இருந்தவர்; பதவி-முன்னவர்.
Prefer—தாக்கல் செய் ; தேர்ந்தெடு ; முன்வை.
Prefer a charge—குற்றச்சாட்டைக்கொணர்.
Prefer an appeal—மேல்முறையீடு தாக்கல் செய்.
Prefer one of the two—இருவரில் ஒருவரைத் தேர்ந்தெடு; இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடு.
Preference—முன்னுரிமை.
Prefixed numeral figures—முன்னால் சேர்க்கப்பட்ட இலக்க எண்கள்.
Prejudice—குந்தகம் ; பாதகம்.
Prejudice, without—பாதகமன்னியில் ; பாதகமின்றி.
Preliminary—முதற்படியாக ; முன்னுரையாக.
Preliminary inquiry—முதல்நிலைப் பரிசீலனை.
Premature—முதிர்வுக்கு முன்னம்.
Premature termination—முதிர்வுக்கு முன்னம் அறுதி செய்தல்.
Premeditated design, a person who had—முன்கூட்டித் திட்டமிட்டிருந்தவர்.
Premises—இடம் ; இருப்பிடம் ; மனை வளாகம் ; வளாகம்.
Preparation—ஆயத்தம் ; தயாரித்தல் ; தயாரிப்பு ; முன்னேற்பாடு.
Preparation for defence—பாதுகாவலுக்கான முன்னேற்பாடு.
Premium—ஊக்கப் பரிசு ; தவணைக் கட்டணம் ; மிகைமதிப்பு.
Premium, selling share at a—மிகைமதிப்பில் பங்கை விற்றல்.
Prepared food—தயாரிக்கப்பட்ட உணவு.
Preponderance of probabilities—நிகழ்தற்குரிய கூறுகள் பெரிதும் மிகுந்திருத்தல்.
Prescribe—நிர்ணயி ; வகு ; விதி.
Prescribed—வகுக்கப்பட்ட ; விதிக்கப் பட்ட ; நிர்ணயிக்கப்பட்ட.
Prescribed by or under law, rules—சட்டத்தின்படியாகவோ அல்லது அதனடியாகவோ வகுக்கப்பட்ட விதிகள்.
Prescribed by rules—விதிகளால் வகுக்கப் பட்ட/நிர்ணயிக்கப்பட்ட/விதிக்கப்பட்ட.
Prescribed date—நிர்ணயிக்கப்பட்ட தேதி.
Prescribed standard—விதிக்கப்பட்ட திட்டம்.
Presence, in his—அவரது முன்னிலையில்.
Present—அளி ; அன்பளிப்பு ; கொடு ; தாக்கல் செய் ; முன்வை.
Present, being—ஆஜராயிருத்தல் ; இருத்தல் ; வந்திருத்தல்.
Presentation to the proper Court—உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்தல்.
Preservation—நிலைபேணல் ; பத்திரமாக வைத்தல்; பராமரிப்பு ; பாதுகாததல்.
Preservative—பதனச்சரக்கு.

Preside—தலைமை வகி.

Presidency-Towns Insolvency Act—மாகாணத் தலைநகர்கள் நொடிப்பு நிலைச் சட்டம்.

Presidency Magistrate—மாகாணத் தலை நகர் நடுவர்.

Presidency town—மாகாணத் தலைநகர்.

President of India—இந்தியக் குடியரசுத் தலைவர்.

President of the Republic—குடியரசுத் தலைவர்.

Presiding Judge—தலைமை வகிக்கின்ற நீதிபதி.

Presiding officers—தலைமை வகிக்கும் அலுவலர்கள்.

Presume—அனுமானி.

Presumption— அனுமானம் ; அனுமானித்தல்.

Pretend—பாசாங்கு செய்.

Prevail over the rules, such provisions shall—அத்தகைய வகைமுறைகள் விதிகளுக்கு மேலோங்கி இயங்கும்.

Prevailing market rate—நிலவரச் சந்தை விலை.

Prevent—தடு.

Prevention—தடை ; தடுப்பு.

Prevention of crime—குற்றந் தடுத்தல்.

Prevention of Food Adulteration Act—உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம்.

Prevention of offences—குற்றங்களைத் தடுத்தல்.

Preventive action—தடுப்பு நடவடிக்கை.

Preventive detention—தடுப்புக் காவல்.

Preventive power—தடுப்பதிகாரம்.

Previous—முந்திய.

Previous approval—முன் ஒப்புதலளிப்பு.

Previous consent—முன் சம்மதம்.

Previous permission—முன் அனுமதி.

Previous publication—முந்திய வெளியீடு.

Previous sanction—முன் ஒப்பளிப்பு.

Previous service—முந்திய ஊழியம்.

Previously—முன்னதாகவே ; முன்னமேயே.

Previously convicted offenders—முன்னமேயே தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள்.

Price control—விலைக் கட்டுப்பாடு.

Price list—விலைப் பட்டியல்.

Primary duties—தலையாய கடமைகள்.

Primary evidence—முதல்தர சாட்சியம்.

Primary food—ஆதார உணவு.

Primary school—தொடக்கப் பள்ளி.

Primary stage—துவக்க நிலை.

Prime-Minister—பிரதமர்.

Prince—சிற்றரசர்.

Principal—அசல் ; முதல்வர்.

Principal Court—முதன்மை நீதிமன்றம்.

Principal officer—முதன்மை அலுவலர்.

Principal seat—தலைமை இருக்கை.

Principally—பிரதானமாக; முதன்மையாக.

Principal value—மூலதன மதிப்பு.

Principles—நெறிகள்.

Principles of State policy, directive—அரசின் கொள்கையினை வழிச்செலுத்தும் நெறிகள்.

Principles of distribution—பங்கீட்டு நெறிகள்.

Principles of policy—கொள்கை நெறிகள்.

Printing press—அச்சகம்.

Priority—முதன்மை.

Priority to other duties, in—இதர கடமைகளுக்கு மேலாக முதன்மை அளித்து.

Prison—சிறை ; சிறைச்சாலை.

Prisoner—கைதி.

Privacy—அந்தரங்கம்.

Private Acts—தனியார் சட்டங்கள்.

Private Acts of Parliament—தனியாரைப் பொறுத்த நாடாளுமன்றச் சட்டங்கள்.

Private defence—தற்காப்பு.

Private document—தனியார் பத்திரம்.

Private forest—தனியார் காடு.

Private person—தனிப்பட்ட ஒருவர்.

Private place—தனிப்பட்ட இடம்.

Private way—சொந்தப் பாதை.

Privately owned—தனிப்பட்ட ஒருவருக்குச் சொந்தமான.

Privately owned place of worship—தனிப்பட்ட ஒருவருக்குச் சொந்தமான வழிபாட்டிடம்.

Privation of a limb—ஓர் உறுப்பைச் சிதைத்தல்.

Privilege—சிறப்புரிமை.

Privileges, rights and—உரிமைகளும் சிறப் புரிமைகளும்.

Privy council—ப்ரிவி கவுன்சில்.

Privy purse—மன்னர் மானியம்.

Privy to the contract—ஒப்பந்தத்திற்கு உடந் தையாயிருப்பவர்.

Privy to the offence—குற்றத்திற்கு உடந் தையாயிருப்பவர்.

Prize—பரிசு.

Probability, it is a—அது ஒரு நிகழ்தற்குரிய கூறு.

Probable, it is—அது நிகழ்தற்குரியது.

Probable consequence—நிகழ்தற்குரிய பின் விளைவு.

Probable danger—நிகழ்தற்குரிய ஆபத்து.

Probate—உயில் நிருபணச் சான்றிதழ்; உயில் மெய்ப்பிதழ்

Probate jurisdiction—உயிலியல் அதிகார வரம்பு.

Probation—கண்காணிப்பு.

Probation officer—கண்காணிப்பு அலுவலர்.

Probation of good conduct—நன்னடத்தைக் கண்காணிப்பு.

Probation of Offenders Act 1958—1958 ஆம் ஆண்டு குற்றவாளிக கண்காணிப்புச் சட்டம்.

Procedure—நடைமுறை; விசாரணைமுறை.

Procedure generally—பொதுவான நடை முறை.

Procedure in financial matters—நிதி விஷயங் களில் நடைமுறை.

Proceed—முற்படு ; மேல்நடத்து.

Proceed to hear—விசாரணையை மேற் கொள்.

Proceed to hear or rehear, shall—விசாரணை அல்லது மறுவிசாரணை செய்வதை மேற் கொள்ளுதல் வேண்டும்.

Proceed, shall—முற்படுதல் வேண்டும்.

Proceed under this section, where the Court does not choose to—நீதிமன்றம் இந்தப் பிரிவின்படி மேல்நடவடிக்கை எடுக்க விரும்பாவிடத்து.

Proceeding—நடவடிக்கை.

Proceeding from a person in authority, inducement, threat or promise—அதிகாரத் திலுள்ள ஓர் ஆளிடமிருந்து வரும் தூண்டுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதி.

Proceedings laid before the Court—நீதி மன்றத்தின்முன் தாக்கல் செய்யப்பட்ட நடவடிக்கைகள்.

Proceeds—கிடைக்கும் தொகை; வரும்படி.

Proceeds, net—நிகரத்தொகை.

Proceeds, sale—விற்றுமுதல்.

Process—செய்முறை; பக்குவப்படுத்து.

Process fee—கட்டளைக் கட்டணம்; சார்வுக் கட்டணம்,

Process, legal—நீதிமுறைக் கட்டளை; சட்டமுறைக் கட்டளை.

Process of law—சட்டச் செயல்முறை.

Process of manufacture—உற்பத்தி முறை.

Process server—கட்டளைச் சார்வுப் பணியர்.

Process server, Judicial—நீதித்துறைக் கட்டளைச் சார்வுப் பணியர்.

Process server, Revenue—வருவாய்த் துறைக் கட்டளைச் சார்வுப் பணியர்.

Processed—பக்குவம் செய்யப்பட்ட.

Proclamation—பகிரங்க அறிக்கை; பகிரங் கப் படுத்துதல்; பிரகடனம்; வெளிப் படை அறிக்கை.

Proclamation of Emergency—அவசர நிலைப் பிரகடனம்.

Proclaimed offender—பிரகடனப் படுத்தப் பட்ட குற்றவாளி

Proctor—ப்ராக்டர்.

Procuration—உடலுறவுக்காகக் கொணர்தல்; முயன்று பெறுதல்.

Procure—உடலுறவுக்காகக் கொண்டுவா; சேகரி; முயன்று பெறு.

Procure the absence of persons—ஆட்களை வராதிருக்கும்படி செய்தல்.

Procurement—சேகரம் ; சேகரித்தல்.

Procuring the release of the cattle—கால் நடையை விடுவிக்கச் செய்தல்.

Produce—ஆஜர்ப்படுத்து; உண்டாக்கு; உற்பத்திசெய்; (பரிசீலனைக்காகக்) கொண்டுவா; தயார் செய்; தாக்கல் செய்; முன்னிடு; விளைபொருள்.

Produce a document, intentionally omitting to—பத்திரத்தை நினைந்தே கொண்டு வரத்தவறுதல்; வேண்டுமென்றே பத்திரத்தைத் தாக்கல் செய்யத் தவறுதல்.

Produced in support of the prosecution, evidence as may be—வாதி தரப்புக்கு ஆதரவாகத் தாக்கல் செய்யலாகும் சாட்சியம்.

Producer of sugar—சர்க்கரை உற்பத்தி யாளர்.

Producing documents—பத்திரங்களைத் தாக்கல் செய்தல்.

Production—ஆஜர்ப்படுத்தல் ; உண்டாக்குதல்; உற்பத்தி; சமர்ப்பித்தல்; தயாரிப்பு; தாக்கல் செய்தல்; முன்னிடுதல்.

Production from proper custody—உரிய பாதுகாப்பிலிருந்து ஆஜர்ப்படுத்துதல்.

Products—உற்பத்திப் பொருள்கள்.

Profess—காட்டிக்கொள்; பாசாங்கு செய்; வெளிப்படையாகச் சொல்.

Professing—வெளிப்படையாக ஏற்றுக் கொள்கிற.

Professing a religion, a person—ஒரு சமயத்தை வெளிப்படையாக ஏற்றுக் கொள்கிறவர் /விளம்புகிறவர்.

Profession—உத்தியோகம்; தொழில்.

Profession of religion—சமய நம்பிக்கையை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளுதல்.

Professional adviser, legal—தொழில்முறைச் சட்ட ஆலோசகர்.

Professional communications—தொழில் முறையில் தெரிவிக்கப்படும் செய்திகள்.

Professional matters—தொழில் சம்பந்தப் பட்ட விஷயங்கள்.

Professional or technical qualifications—தொழில் அல்லது தொழில் நுட்பத் தகுதிகள்.

Professional training—உத்தியோகப் பயிற்சி.

Proficiency—திறமை.

Profit—ஊதியம் ; லாபம்.

Profit, office of—ஊதியம் நல்கும் பதவி.

Profiteering—கொள்ளை லாபம் அடித்தல்.

Progenitors—மூதாதையர்கள்.

Progress—முன்னேற்றம்,

Progressive expenditure—படிப்படியாக அதிகரித்துவரும் செலவு.

Progressive use—பயன்படுத்துவதைப் படிப்படியாக அதிகரித்தல்.

Prohibit—தடை செய்.

Prohibit or restrict, may—தடைசெய்யலாம் அல்லது கட்டுப்படுத்தலாம்.

Prohibited—தடை செய்யப்பட்ட; தடை விதிக்கப்பட்ட.

Prohibition—தடை; தடைசெய்தல்; மறித்தல்.

Prohibition and penalties—தடைகளும் தண்டனைகளும்.

Prohibition of advertisements—விளம்பரங் களுக்குத் தடை.

Prohibition of manufacture—உற்பத்தி செய்வதைத் தடை செய்தல்.

Prohibition of traffic in human beings and forced labour—மனிதரைவைத்து வாணிகம் செய்வதற்கும் கட்டாயப்படுத்தி வேலை வாங்குவதற்கும் தடை.

Prohibition, writ of—' செய்யற்க ' என்னும் நீதிப்பேராணை.

Prohibitive injunction —தடையுறுத்து ஏவு கட்டளை.

Project—திட்டம்.

Prominently—எடுப்பாகத் தெரியும்படி.

Promiscuous—வரைமுறையற்ற.

Promise—உறுதிமொழி; வாக்குறுதி;வாக்கு.

Promising—வாக்குக் கொடுத்தல்.

Promissory Note—கடன் உறுதிச் சீட்டு.

Promoting—ஆதரித்தல்; ஊக்குவித்தல்; வளர்த்தல்.

Promoting enmity—பகைமையை வளர்த்தல்

Promotion—பதவி உயர்வு; வளர்த்தல்.

Promotion of religion—சமயத்தை வளர்த் தல்.

Promptly—காலந் தாழ்த்தாமல்.

Promulgate—பிரகடனம் செய்.

Pronouncement of judgment—தீர்ப்புப் பகர் தல்.

Proof—நிரூபணம்.

Proof, conclusive—அறுதியான நிரூபணம்.

Proof, for the—நிரூபணத்திற்காக; மெய்ப் பிப்பதற்காக.

Propagate—பரவச் செய்; பரப்பு; பிரச்சாரம் செய்.

Propagating—பிரச்சாரம் செய்தல்.

Propagation of religion—சமயத்தைப் பரப் புதல்.

Proper—உரிய; ஏற்ற; தக்க; முறையான.

Proper course of the ship—கப்பலின் உரிய தடம்/மார்க்கம்.

Proper custody—உரிய பாதுகாப்பு; முறையான பாதுகாப்பு.

Proper discharge of duties—கடமைகளை முறையாக ஆற்றுதல்.

Proper recital—ஏற்ற வாசகம்.

Property—சொத்து; பொருள்.

Property disproportionate to his known sources of income—அறிந்திடப்பட்ட அவருடைய வருமானத்தின் வழிவகைகளுக்குப் பொருந்தாத விகிதத்தில் அதிகமாக உள்ள சொத்து.

Property mark—உடைமைக் குறி; சொத்து அடையாளக் குறி.

Property of the Union of India—இந்திய ஒன்றியத்துச் சொத்து.

Property passing upon death—மரணத்தின் பேரில் இறங்குகிற சொத்து.

Property shall be at the disposal of the State Government—மாநில அரசாங்கத்தின் ஆளுகையில் சொத்தானது இருத்தல் வேண்டும்.

Proportion—விகிதம்; வீதப்பங்கு; வீதம்.

Proportional representation—விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம்.

Proposal—உத்தேசத் திட்டம்; உத்தேசம்.

Proposal for legislation—சட்டமியற்றும் உத்தேசத்திட்டம்.

Propose—உத்தேசம் செய்; உத்தேசி ; முன்மொழி.

Propose an amendment—திருத்தம் கொண்டு வா.

Proposed penalty—உத்தேசிக்கப்பட்ட தண்டனை.

Proprietary interest—உடைமை சம்பந்தமான பாத்தியதை.

Proprietary rights—உடைமை உரிமைகள்; சுவான்தார் உரிமைகள்.

Proprietor—உடைமையாளர்; உரிமையாளர்; சுவான்தார்.

Propriety—பொருத்தமுடைமை; முறைமை

Propriety, financial—நிதி முறைமை.

Prorogation—கலைக்காதொழி[illegible]வைத்தல்.

Prosecution—குற்றவழக்குத் தொடர்தல்; வழக்குத் தொடர்தல்; வழக்கை நடத்துதல்.

Prosecution has been instituted—குற்ற வழக்கு தொடரப்பட்டுள்ளது.

Prosecution of common object—பொது நோக்கத்தை நிறைவேற்றுதல்.

Prosecution of war—போர் நடத்துதல்.

Prosecution, the—வாதிதரப்பு; அரசுதரப்பு.

Prosecutor—குற்றவழக்கு நடத்துபவர்.

Proselytizing—மதமாற்றம் செய்தல்

Prospect—வருங்கால வாய்ப்பு.

Prospect of arrest—கைது செய்வதற்குரிய வாய்ப்பு.

Prospecting for minerals—கனிப்பொருள்களைத் தேடியறிதல்.

Prospective candidate—வேட்பாளராகக் கூடிய வாய்ப்புடையவர்.

Prospective operation—பின்னுற இயங்குதல்.

Prospectively or retrospectively to operate—பின்னுற இயங்குமாறு அல்லது முன்னுற இயங்குமாறு.

Prostitution—விபசாரம்.

Protected—பாதுகாக்கப்பட்ட.

Protecting the interest of the offender—குற்றவாளியின் நலத்தைக் காப்பாற்றுதல்

Protection—காத்தல்; பாதுகாப்பு ; பேணுதல்.

Protection from fire—தீப்பிடிக்காமல் பாதுகாத்தல்.

Protection of action taken in good faith—நல்லெண்ணத்துடன் எடுத்த நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

Protection of civil rights—குடியியல் உரிமைகள் பாதுகாப்பு.

Protection of Civil Rights Act, 1955—1955 ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்.

Protection of the interests of the minorities—சிறுபான்மையரின் நலன்களுக்குப் பாதுகாப்பு.

Protective home—காப்பகம்.

Protest (made by the captain of a ship)—(ஒரு கப்பலின் அல்லது கப்பல் சரக்கின் சேதங்குறித்து அந்தக் கப்பல் தலைவரால் அளிக்கப்பட்ட) உறுதியுரை.

Proved—மெய்ப்பிக்கப்பட்டது.

Provide—அளி ; வகைசெய்.

Provided that—ஆனால்.
Provided further—மேலும்.
Provided however—ஆனாலும்; ஆயினும்.
Provident Fund—எதிர்காலக் காப்பு நிதி.
Providing or holding an entertainment—கேளிக்கைக்கு வகை செய்தல் அல்லது கேளிக்கை நடத்துதல்
Province—மாகாணம்.
Provincial Act—மாகாணச் சட்டம்.
Provincial Insolvency Act—மாகாண நொடிப்பு நிலைச் சட்டம்.
Provision—உணவுப் பொருளை வழங்குதல்; ஏற்பாடு; வகைமுறை.
Provisions—உணவுக் குவை.
Provisions of law—சட்டத்தின் வகைமுறைகள்.
Provisions of this section shall be in addition to, and not in derogation of any other law for the time being in force.—இந்தப் பிரிவின் வகைமுறைகள், அவ்வப்போது அமலிலுள்ள சட்டம் எதற்கும் கூடுதலாக இருப்பனவாகவும், ஆனால் அதைக் குறைவுறச் செய்யாதனவாகவும் இருத்தல் வேண்டும்.
Provisions, special—சிறப்பு வகைமுறைகள்.
Proviso—விலக்கு.
Provocation—ஆத்திரமூட்டுதல்.
Proxies—பதிலாள் நியமனப் பத்திரங்கள்.
Proxy—பதிலாள்.
Proxy, by—பதிலாண்மை முறையில்.
Prudent man—விவேகமுள்ள மனிதன்.
Public—பொது ; பொது மக்கள்.
Public, general—பொதுப்படையான பொதுமக்கள்.
Public, specific—தனிப்பட்ட பொதுமக்கள்.
Public account—பொதுக் கணக்கு.
Public acts—பொதுச் செயல்கள்.
Public analyst—பொதுப் பகுப்பாய்வாளர்.
Public assistance—பொதுவிலிருந்து உதவி.
Public auction—பொது ஏலம்.
Public business—பொது நடவடிக்கை.
Public capacity, in his—அவருடைய பொது அலுவல் முறையில்.
Public conduct—பொது நடத்தை.
Public convenience—பொது வசதி.
Public conveyance—பொது ஊர்தி.
Public debt—பொதுக் கடன்.
Public decency—பொது மக்களின் பண்பு நலம்.
Public document—பொதுப் பத்திரம்.
Public employment—பொது வேலையில் அமர்த்துதல்.
Public entertainment—பொதுக் கேளிக்கை
Public function—பொதுப் பணி.
Public fund—அரசாங்க நிதியம்.
Public good—பொது நன்மை.
Public Health—பொதுமக்கள் உடல்நலம்; பொதுச் சுகாதாரம்.
Public Health and Sanitation—பொதுச் சுகாதாரமும் துப்புரவும்.
Public Health Service—பொதுச் சுகாதார ஊழியம்.
Public importance—பொது முக்கியத்துவம்.
Public institution—பொது நிறுவனம்.
Public interest—பொது நலன் ; சமுதாய அக்கறை.
Public Justice—பொது நீதி.
Public limited liability establishment—கடப்பாடு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனம்.
Public money—பொதுப் பணம்.
Public morals—பொதுமக்கள் ஒழுக்கம்.
Public nature—பொதுத் தன்மை.
Public notification—பொது அறிவிக்கை.
Public nuisance—பொதுத் தொல்லை.
Public order—பொது ஒழுங்கு.
Public or general interest—பொதுமக்கள் நலன் அல்லது பொது நலன்.
Public place—பொது இடம்.
Public policy—பொதுக் கொள்கை.
Public property—பொதுச் சொத்து.
Public Prosecutor—அரசு குற்றத்துறை வழக்குரைஞர்.
Public purposes—பொது நோக்கங்கள்.
Public question—பொதுப் பிரச்சினை.
Public record—பொதுப் பதிவிதழ்.
Public register—பொதுப் பதிவேடு.
Public religions worship—பொதுச் சமய வழிபாடு.
Public religious worship, place of—பொதுச் சமய வழிபாட்டிடம்.

Public resort—பொதுமக்கள் கூடுமிடம்.
Public restaurant—பொது உணவுச்சாலை.
Public right—பொது உரிமை.
Public road—பொதுச் சாலை.
Public safety—பொதுமக்களின் பாதுகாப்பு
Public servant—பொது ஊழியர்.
Public service—பொது ஊழியம்.
Public Service Commission—அரசூழிய ஆணையம்.
Public spring—பொது ஊற்று.
Public street—பொதுத் தெரு.
Public thoroughfare—பொதுச் சாலை.
Public tranquillity—பொது அமைதி.
Public trust—பொதுக் கட்டளை.
Public utility—பொது உபயோகம்.
Public way—பொதுப் பாதை.
Public works—அரசாங்கக் கட்டுமானங்கள்; பொதுப்பணி.
Publication—வெளியீடு; பிரசுரம்.
Publish—வெளியிடு; வெளியிடுதல்.
Publish in the vernacular—வட்டாரமொழியில் வெளியிடு.
Published book—பிரசுரிக்கப்பட்ட புத்தகம்; வெளியிடப்பட்ட புத்தகம்.
Punctual information, giving early and—விரைவாவும் காலந்தவறாமலும் தகவல் கொடுத்தல்.
Punishable—தண்டிக்கத்தக்க; தண்டிக்கப் படத்தக்க.
Punishable with imprisonment for a term which shall not be less than one year but which may extend to seven years and shall also be liable to fine—ஓராண்டுக்குக் குறைவுபடலாகாத ஆனால் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் கால அளவிற்குச் சிறைத் தண்டனை விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவராவார்; மேலும் அபராதத்திற்கு ஆளாதலும் வேண்டும்.
Punishment—சிட்சை; தண்டனை.
Punishment drill—தண்டனைக் கவாத்து.
Punishment for conspiracy—சதி செய்தலுக்குத் தண்டனை.
Punishment for cruelty—கொடுமை இழைத்தலுக்கான தண்டனை.
Punishment for offences not otherwise provided for—தண்டனைக்கு மற்றப்படி வகை செய்யப்பட்டிராத குற்றங்களுக்குத் தண்டனை.
Punishment or sentence—தண்டனை அல்லது தீர்ப்புத்தண்டனை.
Punishment, remitting the—தண்டனையைக் குறைத்தல்.
Punishments shall run concurrently—தண்டனைகள் ஏககாலத்தில் இயங்குதல் வேண்டும்.
Purchase—கொள்வினை; விலைக்கு வாங்குதல்.
Purchase money—கொள்விலைத் தொகை.
Purchaser—விலைக்கு வாங்குநர்.
Pure—தூய்மையான.
Purity—தூய்மை.
Purporting—தென்படுகிற; புலப்படுகிற.
Purpose—காரியம்; நோக்கம்.
Purpose, for the—(அதன்) பொருட்டு.
Purposes, for the—(அதன்) நோக்கங்களின் பொருட்டு.
Pursuance of, in—அனுசரித்து; ஒட்டி; தொடர்ந்து; பொறுத்து,
Pursuit of offenders—குற்றவாளிகளைத் துரத்திச் செல்லுதல்.
Pursuits, ordinary—வழக்கமான அலுவல்கள்,
Purview of Section 23—23ஆவது பிரிவின் வீச்சு/வரம்பு.
Putative father—தந்தையென்று கருதப் படுகிறவர்.
Put into circulation—உலவச் செய்.
Put or impressed upon such stamp, mark—அத்தகைய முத்திரையின் மேல் இடப்பட்ட அல்லது பதிக்கப்பட்ட குறி.
Put under the control—ஆளுகைக்கு உள்ளாக்கு.
Putrefaction—அழுகுதல்.
Putrid—துர்நாற்றமுள்ள.

# Q

Qualification—தகுதி.

Qualified, when not—தகுதியற்றிருக்கும் போது.

Qualifying words —அடைமொழிச் சொற்கள்

Quality—தரம்.

Quantity—அளவு.

Quarantine—கட்டாய ஒதுக்கிவைப்பு.

Quarantine, port—துறைமுகக் கட்டாய ஒதுக்கிவைப்பு.

Quarantine rule—கட்டாய ஒதுக்கிவைப்பு விதி.

Quarry—கல் சுரங்கம்.

Quarter—இருத்திவை ; தங்கவை ; குடியிருக்குமிடம்.

Quash—நசி.

Quashing—நசித்தல்.

Quasi marital relationship—போலி மண உறவு.

Question—ஆட்சேபனை; ஆட்சேபி; கேள்வி; பிரச்சினை; வினா.

Question, area in—சம்பந்தப்பட்ட பிரதேசம்.

Question, matter in—பிரச்சினையிலுள்ள பொருள்/விஷயம்.

Question of fact—சங்கதிப் பிரச்சினை.

Question of law—சட்டப் பிரச்சினை.

Question whether of law or fact—சட்டப் பிரச்சினையானாலும் சரி அல்லது சங்கதிப் பிரச்சினையானாலும் சரி.

Questioning—வினாவுதல்.

Questionnaire—வினாப்பட்டியல்.

Quick but unborn child—உயிருள்ள, ஆனால் பிறக்காத குழந்தை.

Quick with child—கருத்துடிப்பு நிலை.

Quick with child woman—கருத்துடிப்பு நிலையிலிருக்கும் பெண்.

Quit the employment—வேலையை விட்டுப் போ.

Quorum—குறைவெண்.

Quotation—மேற்கோள் ; மேற்கோள் காட்டுதல்.

Quote—எடுத்தெழுது ; குறிப்பிடு ; மேற்கோள் காட்டு ; விலை கூறு.

Quotient—ஈவு.

Quo warranto, writ of— 'தகுதி யாது' என்னும் நீதிப்பேராணை.

# R

Race—இனத்தினர் ; இனம்; பந்தயம்.
Rage—சீற்றம்.
Railing—அளி.
Railway இருப்புப்பாதை.
Railway area—இருப்புப்பாதைப் பிரதேசம்.
Railway colony—ரயில்வே குடியிருப்பு.
Railway fare—இருப்புப்பாதைப் பயணக் கட்டணம்.
Railway Protection Force—இருப்புப் பாதைப் பாதுகாப்புப் படை.
Railway station—ரயில் நிலையம்.
Railway Property (unlawful possession) Act—இருப்புப்பாதைச் சொத்துகள் (சட்டவிரோத அனுபோகம்) சட்டம்.
Railways—இருப்புப்பாதைப் போக்கு வரத்துகள்.
Raise—உயர்த்து; திரட்டு.
Raising of loan—கடன் வாங்குதல்/திரட்டுதல்.
Raising the level of administration—நிர்வாக நிலையை உயர்த்துதல்.
Raiyat, Ryot—குடியானவர்.
Ram—செம்மறிக் கடா.
Random—கண்டபடி.
Ranger, Forest—வனச்சரக அலுவலர்.
Rank—படிநிலை.
Rank of a sub-inspector, in the—உதவி ஆய்வாளர் படிநிலையிலுள்ள.
Rank, next in—அடுத்த படிநிலையிலுள்ள.
Rape—வன்புணர்ச்சி.
Rash—முரட்டுத்தனமான.
Rashly—முரட்டுத் துணிச்சலாக.
Rashness—முரட்டுத்தனம்.
Rate—தீர்வை; வீதம்.
Rate of postage—அஞ்சல் கட்டண வீதம்.
Rate of stamp duty—முத்திரைத் தீர்வை வீதம்.
Ratification—ஏற்றுறுதி செய்தல்.
Rational answer—பகுத்தறிவுக்கு உகந்த பதில்.
Rations—உணவுப் பொருள்கள்.
Ravine—மலைப்பிளவு.
Ravishing—கற்பழித்தல்.
Raw cotton—பண்படுத்தப்படாத பருத்தி.
Raw jute—பண்படுத்தப்படாத சணல்.
Raw meat—பச்சை இறைச்சி.
Reached, information—வந்து சேர்ந்த தகவல்.
Reaching—சென்று அடைதல்.
Readily—உடனடியாக.
Readily intelligible—உடனடியாகத் தென்படத்தக்க.
Readiness, having in—தயார் நிலையில் வைத்திருத்தல்.
Readjustment—மறுசரிசெய்கை ; மறுபடியும் சரிசெய்தல்.

Ready and willing, he is—அவர் ஆயத்த மாகவும் மனமுள்ளவராகவும் இருக்கிறார் ; தயாராகவும் விருப்பமுடையவராகவும் இருக்கிறார்.

Real state of facts—சங்கதிகளின் உண்மை நிலவரம்.

Realization—கைக்கொள்ளுதல்.

Realization of fine—அபராதத்தை வசூலித்தல்.

Re-appointment—மறு நியமனம்.

Reason—காரணம்.

Reason of a mistake of law, by—சட்டத்தைப் பற்றிய தவற்றின் காரணத்தால்.

Reason to believe—நம்புவதற்குக் காரணம்.

Reason to believe a fact—ஒரு சங்கதியை நம்புவதற்குண்டான காரணம்.

Reasons to be recorded in writing, for—எழுத்து மூலம் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக.

Reasonable—நியாயமான.

Reasonable apprehension—நியாயமாக ஏற்படுகின்ற அச்சம்.

Reasonable excuse, in the absence of any—நியாயமான காரணம் எதுவும் இல்லாதபோது.

Reasonable force—நியாயமான வன்முறை.

Reasonable ground—நியாயமான ஆதாரம்/காரணம்.

Reasonable opportunity of showing cause why he should not be punished for such offence, after giving the offender-அத்தகைய குற்றத்திற்காகக் அவர் ஏன் தண்டிக்கப்படக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுவதற்கு நியாயமான வாய்ப்பினைக் குற்றவாளிக்குக் கொடுத்த பின்பு.

Reasonble restriction—நியாயமான கட்டுப்பாடு.

Reasonable suspicion—நியாயமான ஐயம் ; நியாயமான சந்தேகம்.

Reasonable time—நியாயமான நேரம்.

Reasonably necessary—நியாயப்படி அவசியமான.

Reasonably practicable—போதிய அளவு செயல்முறைக்கு ஏற்றதாய்.

Rebut—மறுத்துவிடு ; மறுதலி.

Recall—மீண்டும் கூப்பிடு.

Recalling a case—வழக்கொன்றை மீண்டும் தருவித்தல்.

Recapture—மீண்டும் பிடித்தல்.

Receipt—ரசீது ; வரவு ; வரவுச்சீட்டு.

Receipt, on—பெற்றதன் பேரில் ; ரசீதின் பேரில்.

Receivable—பெற்றுக்கொள்ளத்தக்க.

Receivable evidence—பெற்றுக்கொள்ளத்தக்க சாட்சியம்.

Receive—ஏற்றுக்கொள் ; பெற்றுக்கொள்.

Received and treated as husband and wife, they were— அவர்கள் கணவனும் மனைவியுமாக ஏற்று நடத்தப்பட்டனர்.

Receiver—பாதுகாவலர் ; ரிசீவர்.

Receptacle—ஏனம் ; கொள்கலம்.

Reception—ஏற்றுக்கொள்ளுதல் ; வாங்கி வைத்துக் கொள்ளுதல்.

Reception order—ஏற்புக் கட்டளை.

Recess of Parliament—நாடாளுமன்ற இடைக்கால ஓய்வு.

Reciprocal arrangements—பரஸ்பர ஏற்பாடுகள்.

Recital—வாசகம்.

Reckless—கண்மூடித்தனமான.

Reckoning—கணக்கிடுகை ; கணக்கீடுதல்.

Recognised—அங்கீகரிக்கப்பட்ட.

Recognition—அங்கீகாரம்.

Recognition of law—சட்டத்தை அங்கீகரித்தல்.

Recognizance—உத்தரவாதம் ; ஜாமீன் ஜாமீன் பத்திரம்.

Recollect—நினைவுகூர்.

Recommendation—பரிந்துரை.

Reconsider—மறுபரிசீலனைசெய்.

Reconstituted—மறுபடியும் அமைக்கப்பட்ட; மறுஅமைப்புச் செய்யப்பட்ட.

Reconstitution—மறுஅமைப்பு.

Reconvert—மீண்டும் மதம் மாறியவர்.

Record—பதிவுக்கட்டு ; பதிவுக்குறிப்பு ; பதிவிதழ்.

Record, Court of—நிரந்தரப் பதிவு நீதிமன்றம்.

Record of Court—நீதிமன்றத்தின் பதிவுக் கட்டு.

Record of evidence—சாட்சியத்தின் பதிவு.

Recorded in writing, for reasons to be—எழுத்து மூலம் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக.

Recording an issue of fact—சங்கதி பற்றிய பிரச்சினை ஒன்றைப் பதிவு செய்தல்.

Recourse to the protection of public autho-having—பொது அதிகாரிகளின் பாது காப்பை நாடுதல்.

Recover—திரும்பப் பெறு; வசூலி.

Recover summarily—சுருக்கு முறையில் வசூலி.

Recovery—மீட்பு ; வசூலித்தல்.

Recovery of penalty—தண்டத்தை வசூலித் தல்.

Recreation—பொழுதுபோக்கு.

Recruitment—ஆளெடுப்பது; ஆளெடுப்பு.

Rectification of boundaries—எல்லை களைத் திருத்தியமைத்தல்.

Rectification of liquor—மதுவைச் செவ் வைப்படுத்துதல்.

Recurring sums—முறையாக மீண்டும் மீண்டும் கொடுக்கப்படவேண்டிய தொகைகள்.

Redefine—மறுவரையறை செய்.

Redemption charge—மீட்புச் செலவு.

Redemption of debt—கடன் மீட்பு/மீட்டு தல்.

Redistillation—மீண்டும் காய்ச்சி வடித்தல்.

Redress—பரிகாரம்.

Redress of grievances—குறைகளைத் தீர்த் தல்.

Reduce to writing—எழுத்தில் வடி.

Reducing in writing—எழுத்துருவில் கொண்டு வருதல் ; எழுத்தில் வடிக்கப்படுதல்.

Reducing into writing in a summary manner (the examination)—(வாக்குமூலத்தைச்) சுருக்கமாக எழுத்தில் வடித்தல்.

Reducing to the form of document—பத்திர வடிவத்தில் கொண்டு வருதல்.

Reduction—ஒடுக்குதல் ; குறைத்தல்.

Reduction in rank—படிநிலையில் தாழ்த் தல்.

Re-election—மறுதேர்தல் ; மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படுதல்.

Re-employment—மீண்டும் வேலைக்கு அமர்த்துதல்.

Re-enacment—மீண்டும் சட்டம் இயற்று தல்.

Re-examination—மறுவிசாரணை.

Refer—குறிப்பிடு ; சாட்டிவிடு ; சுட்டு.

Refere to—சாட்டியனுப்பு ; சாட்டிவிடு.

Reference—குறிப்பிடுதல் ; சாட்டி யனுப்புகை ; சாட்டுதல் ; சுட்டு ; சுட்டுகை ; சுட்டுதல் ; மேல் முடிவுக்கு அனுப்புதல்.

Reference, construction of—சுட்டுகைக்கு/ சுட்டுக்குப் பொருள்கொள்ளுதல்.

Reference to, in—குறிப்பில் கொண்டு.

Reference to the then existing facts, document unmeaning with—அப்போதுள்ள சங்கதிகளைப் பொறுத்தமட்டில் பொருள் தராத பத்திரம்.

Reference to merits or claims, without—உரிமைகளையோ அல்லது தகுதிகளை யோ கவனிக்காமல்.

Reference to treatises, refreshing memory by—ஆய்வு நூல்களைப் பார்வையிடு வதன் மூலம் நினைவைப் புதுப்பித்துக் கொள்ளல்.

Referred, matter—சாட்டியனுப்பபட்ட விஷயம்.

Referred Trial Bench—மேல் பரிசீலனை நீதியர் ஆயம்.

Refined—சுத்திகரிக்கப்பட்ட.

Reform—சீர்திருத்தம்.

Reformation—சீர்திருத்தம்; சீரமைப்பு.

Reformatories—சீர்திருத்தச்சாலைகள்.

Reformatory institution—சீர்திருத்த நிலை யம்.

Reformatory Schools Act, 1897—1897ஆம் ஆண்டு சீர்திருத்தப் பள்ளிகள் சட்டம்.

Re-formed contract—திருத்தியமைக்கப் பட்ட ஒப்பந்தம்.

Refrain—தவிர்.

Refreshing memory—நினைவுபடுத்திக் கொள்ளல் ; நினைவைப் புதுப்பித்தல்.

Refreshment room—சிற்றுண்டிச்சாலை ; பலகாரச்சாலை.

Refreshments—சிற்றுண்டி ; பலகாரங்கள்

Refugee—அகதி.

Refund—திருப்பிக்கொடு; திருப்பிப் பெறுதல் ; திருப்பித்தரும்/பெறுந் தொகை.

Refuse—மறு.

Regard such fact as proved, may—அச் சங்கதியை மெய்ப்பிக்கப்பட்டதாகக் கருதலாம்.

Regard to, having—கவனத்தில் கொண்டு.

Regarded as material error, it is—பொருட்டுள்ள பிழையாக அது கருதப்படுகிறது.

Regarding rules—விதிகள் சம்பந்தமான.

Regarding—குறித்து ; சம்பந்தமாக ; பொறுத்து.

Regarding the administration—நிர்வாகம் சம்பந்தமாக.

Regards a right, as—ஓர் உரிமை குறித்து.

Regiment—படைவகுப்பு.

Region—பிராந்தியம்.

Regional—பிராந்திய.

Regional Council—பிராந்திய மன்றம்.

Regional language—பிராந்திய மொழி.

Register—பதிவேடு.

Register of birth—பிறப்புப் பதிவேடு.

Register of burial—சவ அடக்கப் பதிவேடு.

Register of Service—பணிப் பதிவேடு.

Registered medical practitioner—பதிவு பெற்ற மருத்துவத் தொழிலாற்றுநர்.

Registered post acknowledgement due—ஒப்புகைப் பதிவு அஞ்சல்.

Registrar—பதிவாளர்.

Registration certificate—பதிவுச் சான்றிதழ்.

Registration of deeds—ஆவணங்களைப் பதிவுசெய்தல்.

Regular occupation—வழக்கமான தொழில்.

Regularity—ஒழுங்குமுறை; முறைமை.

Regularity of judicial act—நீதிமுறைச் செய்கையின் ஒழுங்கு முறைமை.

Regularity of proceeding—நடவடிக்கையின் முறைமை.

Regularly stamped agreement—முறைப்படியான முத்திரைத்தாளில் உள்ள உடன்பாடு.

Regulate—ஒழுங்கு முறைப்படுத்து; முறைப்படுத்து.

Regulated—முறைப்படுத்தப்பட்ட.

Regulating—ஒழுங்குமுறைப் படுத்துதல்; முறைப்படுத்துதல்.

Regulating the manner of investigation—புலனாய்வு செய்யும் முறையை முறைப் படுத்துதல்.

Regulation—ஒழுங்குமுறை; ஒழுங்குமுறைச் சட்டம்; ஒழுங்குமுறை விதி; முறைப் படுத்துதல்.

Regulation having the force of law—சட்டத்தின் ஆற்றல் பெற்றுள்ள ஒழுங்குமுறை விதி.

Rehabilitation—புனர்வாழ்வு ; மறுவாழ் வளிப்பு.

Rehearing—மறுவிசாரணை.

Rehearing of the case—வழக்கை மீண்டும் விசாரித்தல் ; வழக்கின் மறுவிசாரணை.

Reimbursement—ஈடு செய்தல்.

Reinstatement—முன்னிலைமையில் மறுபடியும் வைத்தல்.

Rejecting—நிராகரித்தல்.

Relapse—மறுகலித்தல்.

Relapse into crime—குற்றத்தில் மறு கலித்தல்.

Relating to—சம்பந்தமாக/ன ; பொறுத்த.

Relating to the calendar year—ஆங்கில ஆண்டைச் சார்ந்த.

Relating to or connected with—சம்பந்தப் பட்ட அல்லது தொடர்பான.

Relation of things—பொருள்களின் உறவு.

Relationship—உறவுமுறை.

Relative—உறவினர் ; தொடர்புள்ள.

Release— விடுதலை செய்தல் ; விடுவித்தல்.

Release of offenders on probation—குற்றவாளிகளைக் கண்காணிப்பின் பேரில் விடுவித்தல்.

Releasing the demand or claim to which he is entitled—அவருக்குரிய பணத்தை அல்லது பாத்தியதையை விடுதலை செய்து கொடுத்தல்.

Relevancy—தொடர்புடைமை.

Relevant—தொடர்புடைய.

Relevant fact—தொடர்புற்ற சங்கதி.

Relevant figures—தொடர்புடைய தொகை விவரங்கள்.

Relevant time—தொடர்புற்ற காலம்.

Relief—நிவாரணம்.

Relieve—நிவர்த்தி செய்.

Relieve him of the responsibilities—அவரைப் பொறுப்புக்களிலிருந்து விடுவி.

Religion—சமயம்; மதம்.

Religious denomination—சமயப் பிரிவு.

Religious disability—சமய சம்பந்தமான முட்டுப்பாடு.

Religious instruction—சமய போதனை.

Religious or charitable institution—சமய அல்லது அற நிறுவனம்.

Religious persuasion—சமய நம்பிக்கை.

Religious practice—சமயப் பழக்கம்.

Religious service—சமயப் பணி.

Religious worship—சமய வழிபாடு.

Rely—ஆதாரமாகக் கொள்; நம்பு.

Remainder—எஞ்சியது.

Remains—எஞ்சி நிற்பவை.

Remains, archaelogical—தொல்பொருள் சிதைவுகள்.

Remand—காவல் வைப்பு; காவலில் வை.

Remand him in custody—அவரைக் காவல் சிறையில் வை: அவரைக் காவலில் வை.

Remand or committal to custody—காவலில் வைத்தல் அல்லது காவலுக்கு அனுப்புதல்.

Remark—மேலுரை.

Re-marriage—மறுமணம்.

Remedy—சரிசெய் ; பரிகாரம்.

Remedying the inconvenience—அசௌகரியத்தைக் களைதல்.

Remiss—கடமையில் தவறுதல்.

Remission—குறைத்தல்.

Remission of punishment—தண்டனைக் குறைப்பு ; தண்டனைத் தள்ளுபடி.

Remissness—அசட்டை.

Remit—அனுப்பு ; குறை; தள்ளிவிடு.

Remote—சேய்மையான.

Remote in time —காலத்தால் சேய்மையான.

Removal—அகற்றுதல்; நீக்குதல்.

Removal from office—பதவியிலிருந்து நீக்குதல்.

Removal of doubts—ஐயங்களை நீக்குதல்.

Removal of difficulty—இடர்ப்பாட்டை நீக்குதல்.

Remove—அகற்று; அப்புறப்படுத்து; நீக்கு.

Remuneration—ஊதியம்.

Remuneration by commission—தரகு வகை ஊதியம்.

Render—ஆக்கிக்கொள்; ஆக்கு ; செய்.

Rendering national service—தேச சேவை புரிதல்.

Rendering of service to customers—வாடிக்கைக்காரர்களுக்குப் பணிசெய்தல்.

Rendering the accused liable to punishment—எதிரியைத் தண்டனைக்கு ஆளாக்குதல்.

Rendering probable—நிகழ்தற்குரியதாகச் செய்தல்.

Rendering unfit for human consumption—மனிதர் அருந்துவதற்குத்/நுகர்வதற்குத் தகாததாக்குதல்.

Renewal—புதுப்பித்தல்.

Renewed—புதுப்பிக்கப்பட்ட.

Re-nomination—மறுநியமனம்.

Renoncants—இனமுறைச் சட்டம் துறந்தோர்.

Renounce—கைவிடு ; துற.

Rent and Revenue Courts—குத்தகை மற்றும் வருவாய்த்துறை நீதிமன்றங்கள்.

Reorganise—மாற்றியமை.

Reorganisation—மாற்றியமைத்தல்.

Repair—செப்பனிடு; பழுதுபார்.

Repeal—நீக்கம்; நீக்கு ; நீக்குதல்.

Repeal and savings—நீக்கமும் காப்புகளும்.

Repeal or amend with retrospective effect—முன்னுற இயங்கும்படியாக நீக்கமோ திருத்தமோ செய்.

Repetition—திரும்பவும் செய்தல் ; திரும்பவும் சொல்லுதல்.

Replace—திரும்பவும் வை ; மாற்றீடு செய்.

Report—அறிக்கை ; அறிக்கை செய்.

Report for duty—வேலைக்கு ஆஜராகி அறிக்கை கொடுத்தல்.

Report of ruling—தீர்ப்புவிவர அறிக்கை.

Report the circumstances of the case — வழக்கின் விவரங்களைப் பற்றி அறிக்கை செய்.

Report to be treated confidential—அறிக்கை இரகசியமானதாக வைக்கப்படுதல் வேண்டும்.

Reporting—அறிக்கை செய்தல்.

Representation—உருவ அமைப்பு ; எடுத்துரைத்தல் ; பிரதிநிதித்துவம்;பிரதிநிதித்துவமளித்தல்; புகலுதல்;முறையீடு.

Representation of the People Act—மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம்.

Representation of States in Parliament—நாடாளுமன்றத்தில் மாநிலங்களுக்குள்ள பிரதிநிதித்துவம்.

Representation, system of proportional—விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை.

Representation, visible—கண்ணுக்குப் புலனாகும் உருவப்படைப்பு; பார்க்கக்கூடிய சாதனம்.

Representative—பிரதிநிதி; பிரதிநிதித்துவம் வாய்ந்த.

Representative character—பிரதிநிதித்துவத் தன்மை ; பிரதிநிதித்துவம்.

Representative in interest—உரிமைப் பிரதிநிதி.

Reprieve—ஒத்திவைப்பு.

Reprieve of punishment—தண்டனை நிறைவேற்றுவதை ஒத்திவைத்தல்.

Reprisal—எதிர்த்தாக்குதல்.

Reprisal or revenge—எதிர்த்தாக்குதல் அல்லது பழிக்குப்பழி.

Reprocessing—மறுபக்குவம் செய்தல்.

Reproduction—இனப்பெருக்கம்.

Repugnancy—முரண் ; முரண்பாடு.

Repugnance, to the extent of—முரண்பட்டதாக இருக்கும் அளவுக்கு.

Repugnant—அருவருக்கத்தக்க; பொருந்தாத; முரணாக/ன; முரண்பாடாக.

Repugnant to human use—மனித உபயோகத்திற்குப் பொருந்தாத.

Repulsive nature—வெறுப்பூட்டும் தன்மை.

Reputation—நற்பெயர்; புகழ் ; பெயர்.

Repute, general—பொது மதிப்பீடு.

Request—கோரிக்கை.

Request in writing, may—எழுதிக் கேட்டுக் கொள்ளலாம்.

Request shall be complied with—கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

Require —கோரு; வேண்டுறுத்து.

Required by law—சட்டப்படிகோரப்பட்ட: வேண்டுறுத்தப்பட்ட.

Required in the public interest, as may be—பொது நலனுக்காகத்தேவைப்படலாகும்.

Requirement—கோரிக்கை; வேண்டுறுத்தம்: வேண்டுறுத்தல்.

Requirement as to residence—குடியிருப்பது பற்றிய வேண்டுறுத்தம்.

Requirements—வேண்டுறுத்தல்கள்.

Requiring special knowledge of law—சட்டத்தில் சிறப்பு அறிவு தேவைப்படுகிற.

Requisite condition—அவசியமான/தேவையான நிபந்தனை.

Requisite permission—தேவையான/அவசியமான அனுமதி.

Requisition—கோரிக்கை ; வேண்டுகோள்.

Requisitioning of property—சொத்தைக் கைக்கொள்ளுதல் ; சொத்தைக் கைக்கொள்ளுதற்கான கோரிக்கை.

Requisitioning of property, acquisitioning and—சொத்தினை ஈட்டுதலும் கைக்கொள்ளுதலும்.

Rescind—ரத்து செய்.

Rescue—மீட்சி: மீட்டல்; மீட்டு.

Rescue homes—மீட்பு இல்லங்கள்.

Research—ஆராய்ச்சி.

Resemblance—போலிருத்தல்; போலிமை.

Reservation—ஒதுக்கீடு ; ஒதுக்கீடு செய்தல்.

Reserve Bank of India—இந்திய சேம வங்கி.

Reserved for consideration, Bill—பரிசீலனைக்கு ஒதுக்கப்பட்டுள்ள மசோதா.

Reserved forest—ஒதுக்குக் காடு.

Reservoir—நீர்த்தேக்கம்.

Resettlement—மறு குடியிருத்துதல்; மறு குடியேற்றம்.

Reside—குடியிரு.

Residence—இருப்பிடம் ; குடியிருப்பிடம்.

Residential hotel—உணவக விடுதி.

Residential purpose—குடியிருப்பு நோக்கம்.

Residential quarters—குடியிருப்பிடம்.

Residing—குடியிருத்தல்.

Residing and settling—குடியிருத்தலும் குடியேறுதலும்.

Residuary powers of legislation—சட்டமியற்றுவதற்கான எஞ்சிய அதிகாரங்கள்.

Residue of the property—சொத்தின் மிச்சம்.
Resign—பதவி விலகு; ராஜிநாமா செய்.
Resignation—ராஜிநாமா.
Resist—எதிர் ; தவிர்.
Resistance—எதிர்த்தல்; தடை; தடுப்பு; தடைப்படுத்துதல் ; தவிர்த்தல்.
Resolution—தீர்மானம்.
Resolution, moving of—தீர்மானம் கொணரப்படுதல்/பிரேரேபித்தல்.
Resolution, passing of —தீர்மானம் நிறைவேற்றுதல்.
Resort—கூடுமிடம்; புழங்குமிடம்.
Resort, place of public—பொதுமக்கள் புழங்குமிடம்.
Resources—வளமை; வளவசதிகள்.
Resources, material—பொருள் வள வசதிகள்.
Resources, mineral—கனி வளவசதிகள்.
Resources, pecuniary—நிதி வளவசதிகள்.
Respect—நன் மதிப்பு.
Respect of, in—சம்பந்தமாக; பொறுத்து.
Respect thereto, with—அதற்குத் தொடர்புடைய; அதைப்பொறுத்து.
Respective functions, their—அவரவர்களுக் குரிய அலுவல்கள்.
Respects, as—சம்பந்தமாக.
Respective stations, within the limits of their —அவரவர் நிலையங்களின் எல்லைகளுக்குள்.
Respectively—முறையே.
Respects possession, as—அனுபோகத்தைப் பற்றி.
Respite—ஓய்வு; தாமதம்; தாற்காலிக பரிகார அளிப்பு.
Respondent—எதிராளி; பிரதிவாதி.
Responsibilities—பொறுப்புகள்.
Restaurant—உணவுச்சாலை.
Restaurant car—உணவுச் சாலை வண்டி.
Restitution of property—சொத்தை மீட்டிக் கொடுத்தல்.
Restoration—திரும்ப ஒப்படைத்தல்; மீட்டிக் கொடுத்தல் ; மீட்பு.
Restore—மீண்டும் ஒப்படை.
Restraint—தடங்கல்; தடுத்து வைத்தல்; தடை செய்தல்.
Restraint, being subjected to unnecessary—அனாவசியமான தடைக்கு உட்படுத்தப் பட்டிருத்தல்.
Restrict—கட்டுப்படுத்து.
Restriction—கட்டுப்பாடு ; வரையறை.
Restrictive Trade Practices Act—கட்டுப் படுத்தும் வர்த்தகப் பழக்கங்கள் சட்டம்.
Result—முடிவு; விளைவு.
Result of, as a—விளைவாக.
Resuming duty—கடமையை மீண்டும் மேற்கொள்ளுதல்.
Resuming enquiry—பரிசீலனையை மீண்டும் மேற்கொள்ளுதல்.
Resummon—மீண்டும் ஆஜர்க் கட்டளை பிறப்பி.
Resumption—மீண்டும் மேற்கொள்ளுதல். மீட்டல்.
Resumption of grant—மானியத்தை மீட்டல்.
Retail business—சில்லறை வியாபாரம்.
Retain—தக்கவைத்துக்கொள்; நிறுத்திவை.
Retaking the prisoner—கைதியை மீண்டும் பிடித்தல்.
Retarding—தாமதப்படுத்துகிற.
Retire—ஓய்வுபெறு.
Retirement, age of—ஓய்வுபெறும் வயது.
Retirement gratuity—ஓய்வுப் பணிக் கொடை.
Retrench—ஆட்குறைப்புச் செய்.
Retrenchment—ஆட்குறைப்பு ; ஆட் குறைப்புச் செய்தல்.
Retrospective effect—முன்னுற இயங்கும் தன்மை.
Retrospectively—முன்னுறு இயங்குமாறு.
Return—திருப்பியனுப்புதல் ; விவரக் குறிப்பு.
Return of commission—ஆணையைத் திருப்பியனுப்புதல்.
Returns—விவர அறிக்கைகள் ; விவரக் குறிப்புகள்.
Revenge—பழிதீர்த்துக்கொள்.
Revenge, as a—பழிக்குப்பழியாக.
Revenue —வருவாய்.

Revenue account—வருவாய்க் கணக்கு.
Revenue, arrears of—வரிப் பாக்கி.
Revenue, for the purpose of—வருவாய்க்காக.
Revenue Court—வருவாய்த்துறை நீதி மன்றம்.
Revenue jurisdiction—வருவாய்த்துறை அதிகார வரம்பு.
Revenue officer—வருவாய்த்துறை அலுவலர்.
Revenue process—வருவாய்த்துறைக் கட்டளை.
Revenue village—வருவாய்த்துறைக் கிராமம்.
Reversal—எதிர்மாறாக்குதல்.
Reverse—எதிர்மாறாக்கு.
Reverse the order—கட்டளையை எதிர் மாறாக்கு.
Review—மறு ஆய்வு; மறு பரிசீலனை.
Review of judgements—தீர்ப்புகளை மறு ஆய்வு செய்தல்.
Revise the electoral roll—வாக்காளர் பட்டியலைத் திருத்தியமை.
Revision—சீராய்வு; திருத்தியமைத்தல்; மேலாய்வு.
Revision, powers of—சீராய்வு/மேலாய்வு அதிகாரங்கள்.
Revival—உயிர்ப்புறுதல்.
Revive and come into force, shall—உயிர்ப்புற்று அமலுக்கு வரும்.
Revocation—ரத்து செய்தல்.
Revoke—ரத்து செய்.
Reward—சன்மானம்; வெகுமதி.
Rich heritage—வளமான பாரம்பரியம்.
Right—உரிமை; சரியான.
Right, accruing—வந்தடையும் உரிமை.
Right accruing to a person—ஓர் ஆளை வந்தடைகிற உரிமை.
Right, acquired—ஈட்டப்பட்ட உரிமை.
Right against exploitation—சுரண்டப்படாமலிருப்பதற்கான உரிமை.
Right and interest—உரிமையும் நலனும்; உரிமையும் அக்கறையும்/பாத்தியதையும்.
Right, appeal lies as of—உரிமையுடன் மேல்முறையீடு செய்யலாம்.
Right, enjoyment of—உரிமையை அனுபவித்தல்.
Right of appeal—மேல் முறையீட்டு உரிமை
Right of audience—வாதாட்டுரிமை.
Right of enjoyment—அனுபோக உரிமை.
Right of minority—சிறுபான்மையினருக்குள்ள உரிமை.
Right of pasture—மேய்ச்சல் உரிமை.
Right of succession —வழிமுறையுரிமை.
Right of user—புழக்க உரிமை.
Right of way—பாதை உரிமை; வழி உரிமை.
Right to equality—சமத்துவத்துக்கு உரிமை.
Right to freedom of religion—சமயச் சுதந்தரத்திற்கு உரிமை.
Right to possession—சுவாதீன உரிமை.
Rightful—முறையான.
Rigorous imprisonment—கடுங்காவல் சிறைவாசம்.
Riot—கலகம்.
Rising of the Court, till the—நீதிமன்றம் கலையும் வரை.
Rising of the Court, before the—நீதிமன்றம் கலைவதற்கு முன்.
Risk—அபாயத்தை விளைவிக்கக்கூடிய நிலை; ஆபத்து.
River valley—ஆற்றுப் பள்ளத்தாக்கு.
Road-transport—சாலைப் போக்குவரத்து.
Robber—கொள்ளைக்காரன்.
Robbery —கொள்ளை; கொள்ளையடித்தல்.
Rodent—கொறிக்கும் பிராணி.
Roll call—பெயர் கூப்பிடுதல்.
Ropeway—கயிற்றுப் பாதை.
Roster—வேலைமுறைப் பட்டியல்.
Rotation—சுற்றுமுறை.
Rotation leave, grant—முறைவைத்து விடுப்பு அளி.
Route—மார்க்கம்; வழி.
Routine—வாலாயம்.
Royalty—அரசுரிமை; உரிமை ஊதியம்.
Royalty trees—அரசுரிமை மரங்கள்.
Rubbish—கூளம்.
Rule—விதி.

Rule of construction—பொருள்கோளுக்கான விதி.

Rule of pleading—வாதுரை விதி.

Rule of the road—சாலை விதி; பாதை விதி.

Ruler—மன்னர்.

Ruler of Indian State—இந்திய சமஸ்தான மன்னர்.

Rules laid down—விதிக்கப்பட்ட விதிகள்.

Rules of business—அலுவல் முறை விதிகள்.

Rules of evidence—சாட்சிய விதிகள்.

Rules of procedure—நடைமுறை விதிகள்; விசாரணை முறை விதிகள்.

Rumour—வதந்தி.

Running aground, ship—கப்பல் தரை தட்டுதல்.

Running vessel ashore—கலத்தைக் கரை தட்ட வைத்தல்.

Rural area—நாட்டுப்புறம்.

Ryotwari settlement—ரயத்துவாரித் தீர்வை முறை.

# S

Sacred tank—புனிதமான குளம்.

Safe custody—பத்திரமான காவல், பத்திரமான பாதுகாப்பு.

Safeguard—பாதுகாத்தல் ; பாதுகாப்பு.

Safely—காவந்தாக ; பாதுகாவலாக.

Safety—காவந்து ; பாதுகர்ப்பு.

Said, the—சொல்லப்பட்ட; மேற்சொன்ன.

Sailor —கடற்படை வீரர் ; மாலுமி.

Salary—சம்பளம்.

Sale and consumption of intoxicating liquor and drug—போதையூட்டும் மது, மருந்துச் சரக்கு ஆகியவற்றை விற்பனை செய்தலும் நுகர்தலும்.

Sale or purchase—விற்பனை அல்லது கொள்வினை; விற்றல் அல்லது வாங்குதல்.

Sale proceeds—விற்றுமுதல்.

Salving of timber—வெட்டுமரத்தை மீட்டுதல்.

Same kind—அதே வகை.

Same proportion—அதே விகிதம்.

Same for all States, ratio shall be—விகிதம் எல்லா மாநிலங்களுக்கும் ஒருபடித்தாய் இருத்தல் வேண்டும்.

Sample—மாதிரி.

Sample, false—போலி மாதிரி.

Sanction—ஒப்பளிப்பு ; ஒப்பளிப்பு செய்.

Sanitary—சுகாதாரமான ; துப்புரவான.

Sanitary condition—சுகாதார நிலைமை ; துப்புரவு நிலைமை.

Sanitary covnenience—சுகாதார முறையிலான கழிவிடம்.

Sanitation—துப்புரவு.

Sarishtadar—சிரஸ்ததார்; தலைமைப் பணியர்.

Satisfaction—திருப்தி; நிறைவேற்றம்.

Satisfaction of the Court, to the—நீதிமன்றத்திற்குத் திருப்தி அளிக்கும் வகையில்.

Statisfied that a grave emergency exists, if the President is—கடுமையான அவசர நிலை ஏற்பட்டுள்ளதென்று குடியரசுத் தலைவர் திருப்தி கொள்வாரானால்.

Statisfy the debt, to—கடனை அடைப்பதற்கு.

Satisfying a decree—தீர்ப்பாணையைத் தீர்த்தல்.

Satisfying the conditions requisite—அவசியமான நிபந்தனைகளை நிறைவேற்றுதல்

Save as aforesaid—மேற்சொன்னவாறல்லாமல்.

Save as hereinafter provided—இதற்குப் பின்பு இதில் வகை செய்யப்பட்டவாறல்லாமல்.

Save as otherwise provided—வேறுவிதமாக வகை செய்யப்பட்டவாறல்லாமல்.

Saving—காப்பு.

Saving of operation—செயற்பாட்டுக்குக் காப்பளிப்பு.

Scheduled area—பட்டியல் பிரதேசம்.
Scheduled castes—பட்டியல் சாதியினர்.
Scheduled tribes—பட்டியல் பழங்குடியினர்.
Scheme—ஏற்பாடு; திட்டம்.
Scheme for grant of leave by rotation—முறை வைத்து விடுப்பளிக்கும் திட்டம்.
Schemes of development — வளர்ச்சித் திட்டங்கள்.
Scientific expert—விஞ்ஞான வல்லுநர்/நிபுணர்.
Scientific lines—விஞ்ஞான முறைகள்.
Scientific or technical assistance—விஞ்ஞான அல்லது தொழில்நுட்ப உதவி.
Scientific purpose—விஞ்ஞான நோக்கம்.
Scientific temper — விஞ்ஞான மனப்பான்மை.
Scooping out—அகழ்ந்து எடுத்தல்.
Scope—அளாவுகை; வீச்சு.
Scope of the Act—சட்டத்தின் அளாவுகை.
Screening the offender — குற்றவாளியை ஒளித்து வைத்தல்.
Script—எழுத்து; வரிவடிவம்.
Sculptured—சிற்பமாக்கப்பட்ட.
Sea customs—கடற்சுங்கம்.
Seamen—கடலோடிகள்.
Seal—இலச்சினை; முத்திரை.
Seal, common—பொது முத்திரை.
Sealed—மூடி முத்திரையிடப்பட்ட.
Sealing—மூடி முத்திரையிடுதல்.
Sealing wax—முத்திரை அரக்கு.
Search warrant—சோதனைக் கட்டளை.
Search without warrant—கட்டளையில்லாமல் சோதனையிடுதல்.
Season—பருவம்.
Seat—இடம்; இருக்கை; பதவியிடம்.
Seat in the Parliament—நாடாளுமன்றத்திலுள்ள பதவியிடம்.
Seat of the Supreme Court—உச்சநீதிமன்றத்தின் இருக்கை.
Secession—பிரிந்துபோதல்.
Second offence—இரண்டாவது குற்றம்.
Second or subsequent conviction—இரண்டாவதாக அல்லது அதற்குப் பின்னர் தண்டிக்கப்படுதல்.
Secondary evidence — இரண்டாந்தரச் சாட்சியம்.
Secondary school—உயர்நிலைப்பள்ளி.
Secret ballot, voting by—இரகசிய வாக்குச் சீட்டு முறையில் வாக்களிப்பு.
Secretarial staff—செயலகப் பணியாளர் தொகுதி.
Secretariat—செயலகம்.
Secretary—செயலாளர்.
Secretary of State for India—இந்தியா அமைச்சர்.
Secretary of State in Council—மன்றத்தமர் இந்தியா அமைச்சர்.
Secrete—ஒளித்துவை; மறைத்துவிடு.
Secreting any document—பத்திரம் எதனையும் ஒளித்து வைத்தல்.
Sect—பிரிவினர்; பிரிவு; வகுப்பு.
Section—பிரிவு.
Sections both inclusive—இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக.
Secular—சமயச் சார்பற்ற.
Secular activity—சமயச் சார்பற்ற நடவடிக்கை.
Secular common purpose—சமயச் சார்பற்ற பொது நோக்கம்.
Secure—கிடைக்கச்செய்; நிலைநாட்டு.
Secured or unsecured debt—பிணையுள்ள அல்லது பிணையில்லாத கடன்.
Securely—பாதுகாப்பாக.
Securing compliance with the provisions—வகைமுறைகளுக்கு இணங்கியிருக்குமாறு செய்தல்.
Security — உத்தரவாதம்; காப்புறுதிப் பத்திரம்; பாதுகாப்பு; பிணையம்; ஜாமீன்.
Security, on giving—உத்தரவாதம் கொடுப்பதன் பேரில்.
Sedition—அரசுக்கு விரோதமான கிளர்ச்சி.
Seduce—ஈர்த்து வசப்படுத்து; கற்பு பிறழச்செய; குற்றம் அல்லது பாவஞ்செய்யத் தூண்டு; நெறி தவறச் செய்; வசியப்படுத்து.
Seeking production of deeds—ஆவணங்களைத் தாக்கல் செய்யும்படி கேட்டல்.
Seeking to make a change—மாற்றம் செய்ய முற்படுதல்.

Seizure—கைப்பற்றுதல்.

Select—தெரிந்தெடு.

Self-control, power of—தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்ளும் சக்தி.

Self-defence—தற்காப்பு; பாதுகாப்பு.

Self-government—சுயாட்சி.

Send for the record of the case, the Appellate Court shall—மேல்முறையீட்டு நீதிமன்றம் வழக்கின் பதிவுக்கட்டை அனுப்புமாறு கோருதல் வேண்டும்.

Sending—அனுப்புதல்.

Sending under safe and sure conduct back to the prison—காவந்தானதும் நம்பகமானதுமான மெய்காவலில் திரும்பச் சிறைக்கு அனுப்புதல்.

Senior and Junior in service—பணியில் முதுவரும் பணியில் இளவலும்.

Senior Approved School—ஒப்புதலளிக்கப் பெற்ற முதுநிலைப்பள்ளி.

Senior most judge—மிக்க முதுநிலை நீதிபதி.

Seniority and juniority in service—பணியில் முதுவர் நிலையும் பணியில் இளவர் நிலையும்.

Sensation—உணர்ச்சி.

Sense of expression—வாசகத்தின் பொருள்.

Sense of feeling—உணரும் அறிவு.

Sense of law—சட்டத்தின் பொருள்.

Sense, person of ordinary—சாதாரண அறிவு உடையவர்.

Senses—புலன்கள்.

Sentence—தண்டனை; தீர்ப்புத் தண்டனை.

Sentence of death—மரண தண்டனை.

Sentence of detention in a protective home—காப்பகத்தில் இருத்தி வைக்கும் தண்டனை.

Sentence of fine—அபராதத் தண்டனை.

Sentence of imprisonment for a term not exceeding one year—ஓராண்டுக் காலத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனை.

Sentence passed—தீர்ப்பளிக்கப்பட்ட தண்டனை.

Separate—தனித்தனி; தனிப்பட்ட.

Separation—பிரித்தல்.

Sepulchre—கல்லறை.

Seriously affecting theopinion of the Court—நீதிமன்றத்தின் கருத்தைத் தீவிரமாகப் பாதித்தல்.

Serious nature—கடுமையான தன்மை.

Serious nature of the crime—குற்றத்தின் கடுமையான தன்மை.

Serologist—குருதிநீர் ஆய்வாளர்; நிணநீர் ஆய்வாளர்.

Servant—பணியாளர்.

Serve the notice personally—அறிவிப்பை நேர்முகமாகச் சார்வு செய்.

Server—பரிமாறுபவர்.

Service—உபகாரம்; ஊழியம்; சார்வு செய்தல்; சேவகம்; சேவை; பணி.

Service Book—பணிப் புத்தகம்.

Service in Government of India—இந்திய அரசாங்கத்தில் பணி.

Service of debt—கடன் கரைப்பு.

Service of State, judicial—மாநில நீதித் துறை ஊழியம்.

Service of summons—ஆஜர்க் கட்டளையைச் சார்வு செய்தல்.

Service Register—பணிப் பதிவேடு.

Service rendered—செய்யப்பட்ட ஊழியம்.

Services of an interpreter—மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் பணிகள்.

Serving the needs of the State—மாநிலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்; மாநிலத்தின் தேவைகளுக்கு உதவுதல்.

Session—அமர்வு; கூட்டத்தொடர்.

Session of Parliament—நாடாளுமன்றத்தின் கூட்டத்தொடர்.

Session of the Court—நீதிமன்றத்தின் அமர்வு.

Session, Parliament while in—நாடாளுமன்றம் அமர்வில் இருக்குங்கால்.

Sessions division—செஷன்ஸ் பிரிவு.

Sessions Judge—செஷன்ஸ் நீதிபதி.

Set aside—நீக்கிவிடு; நீக்கு; ரத்து செய்.

Set at liberty—விடுதலை செய்.

Set-off—எதிர்க்கட்டு.

Set off against the term of imprisonment, his period of detention shall be—அவர் காவலில் இருந்த காலத்தைச் சிறைத் தண்டனைக் காலத்திலிருந்து கழித்தல் வேண்டும்.

Set out—கண்டுள்ள ; விவரிக்கப்பட்டுள்ள.

Setting apart—ஒதுக்கி வைத்தல்.

Setting aside on appeal—மேல்முறையீட்டின் பேரில் ரத்து செய்தல்.

Setting forth—விவரித்தல்.

Setting off—கழித்தல்; எதிர்க்கட்டு செய்தல்.

Setting out—விவரித்தல்.

Setting up an institution—ஒரு நிறுவனத்தை அமைத்தல்/நிறுவுதல்.

Settle an account—ஒரு கணக்கை முடிவு செய்.

Settlement—ஏற்பாடு; தீர்த்துக் கொள்ளுதல்; திட்டப்படுத்துதல்; நிலத்தீர்வை; முடிவு செய்தல்.

Settlement case—நிலத்தீர்வை வழக்கு.

Settlement of dispute—தகராறைத் தீர்த்துக் கொள்ளுதல்.

Settlement of table of fees—கட்டணங்களின் அட்டவணையைத் திட்டப்படுத்துதல்.

Sever—பிரி.

Severally—தனித்தனியாக.

Severe sentence—கடுமையான தண்டனை.

Severity of the sentence—தண்டனையின் கடுமை.

Sex, separately for each—ஒவ்வொரு பாலாருக்கும் தனித்தனியே.

Sexual intercourse—உடலுறவு; உடற்புணர்ச்சி.

Sexual intercourse not amounting to the offence of rape—வன்புணர்ச்சிக் குற்றமாகாத உடலுறவு/உடற்புணர்ச்சி.

Shaking one's credit—ஒருவருடைய நாணயத்தைக் குலைத்தல்.

Shall become void—விழலாகும்/ விழலாதல் வேண்டும்.

Shall be deemed—கொள்ளப்படுதல் வேண்டும்.

Shall be heard and determined—விசாரித்துத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

Shall be Hindi, the official language of the Union—ஒன்றியத்தின் ஆட்சிமொழி ஹிந்தியாக இருத்தல் வேண்டும்.

Shall be his duty—அவரது கடமையாகும்.

Shall be lawful—சட்டபூர்வமானதாகும்.

Shall be liable to punishment—தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

Shall be operative—செயற்பாடு உடையதாகும்.

Shall be punishable, he—அவர் தண்டிக்கப் படத்தக்கவர் ஆவார்.

Shall be treated as confidential—ரகசியமானதாகக் கருதப்படுதல் வேண்டும்.

Shall be under supervision—கண்காணிப்பில் இருத்தல் வேண்டும்.

Shall begin to run, a fresh period of limitation—புதிய காலவரையொன்று துவங்குதல் வேண்டும்/துவங்கும்.

Shall cease—இல்லாது போகும்.

Shall cease to be in force—செயற்படாது நிற்கும்.

Shall cease to have effect—செயற்பாடு அற்றுப்போகும்; அமலற்றுப் போகும்; செயலற்றுப் போகும்.

Shall cease to operate—செயற்பாடு அற்றுப் போகும்.

Shall come into force—அமலுக்கு வரும்; அமலுக்கு வருதல் வேண்டும்.

Shall exercise individual judgement—சுயமான முடிவுக்கு வருதல் வேண்டும்.

Shall extend—அளாவி நிற்கும்.

Shall have effect—அமலுக்கு வருதலாகும்; செயற்பாட்டுக்கு வருதல் வேண்டும்.

Shall have power, he—அவர் அதிகாரம் கொண்டிருப்பார்.

Shall have the same force and effect—அதே ஆற்றலையும் விளைவையும் உடையதாயிருக்கும்.

Shall not be called in question in any Court—எந்த நீதிமன்றத்திலும் ஆட்சேபித்தல் ஆகாது.

Shall not have effect—அமலுக்கு வருதலாகாது.

Shall not have power, he—அவர் அதிகாரம் கொண்டிருக்கமாட்டார்.

Shall presume—அனுமானித்தல் வேண்டும்.

Shall require—கோருதல் வேண்டும்; வேண்டுறுத்தல் வேண்டும்.

Shall remain suspended—தாற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

Shall stand amended—திருத்தப்பெற்று நிற்கும்.

Shall stand cancelled—ரத்தாகி நிற்கும்.

Shall stand removed to the Supreme Court—உச்சநீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு நிற்கும்.

Shall stand repealed—நீக்கப்பட்டு நிற்கும்.

Shall take steps—நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

Share—பங்கு.

Share-holder—பங்குதாரர்.

Shelter—காப்பிடம்; தங்குமிடம்.

Shift of work—முறை வேலை.

Shifted, burden of proof—மெய்ப்பிக்கும் சுமை மாற்றப்பட்டது.

Shifting cultivation—இடப்பெயர்ச்சிச் சாகுபடி.

Shipping and navigation—கப்பல்களும் கப்பல் பயணமும்.

Shorthand—சுருக்கெழுத்து.

Short leave—குறுகிய விடுப்பு.

Short period—குறுகிய காலம்; குறைந்த கால அளவு.

Short title—குறுந்தலைப்பு.

Shortage—பற்றாக்குறை.

Shortage,acute—கடுமையான பற்றாக்குறை.

Shortly before or after it—அதற்குச் சற்று முன்போ பின்போ.

Show cause—''காரணம் காட்டுக''.

Show cause notice—'காரணம் காட்டுக' அறிவிப்பு.

Show of force, by—வன்மையைக் காட்டி.

Show separately—தனித்தனியாகக் காட்டு.

Shrine—ஆலயம்.

Sick—நலிவுற்ற ; நோயுற்ற.

Sick leave—நோய் விடுப்பு.

Sick textile undertakings—நலிவுற்ற துணி நெசவு நிறுவனங்கள்.

Sickness—நோயுடைமை.

Sift—தெளித்தெடு.

Sign—அடையாளக்குறி; கையொப்பமிடு ; சைகை.

Sign manual—அரசரது கையொப்பம்.

Signature—கையொப்பம்.

Significance—பொருள் முக்கியத்துவம்.

Signing judgment—தீர்ப்புரையில் ஒப்பமிடுதல்.

Sikh—சீக்கியர்.

Similar—அதேபோன்ற ; போன்ற.

Simple imprisonment—மெய்காவல் ; வெறுங்காவல்.

Simultaneously—ஒரே சமயத்தில்.

Single act—தனியொரு செய்கை.

Single offence—தனியொரு குற்றம்.

Single sentence—ஒரே தண்டனை.

Single transferable vote, by—ஒற்றை மாற்று வாக்கு வழியில்.

Singly—தனியாக.

Sinking fund—கடனடைப்பு நிதியம்.

Sinking fund charges—கடனடைப்பு நிதிச் செலவுகள்.

Site—மனை.

Sitting for the dispcsal of the cases—வழக்குகளைத் தீர்க்க அமர்தல்.

Sitting—அமர்வு.

Sitting of Assembly—சட்டப் பேரவையின் அமர்வு.

Sitting member—பதவியிலிருந்து வரும் உறுப்பினர்.

